விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை (06.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

# இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு பிரிட்டன் ஊக்கமளிக்கும்

## பிரதமர் கமரூன் உறுதியளிப்பு



**இலங்கை மீதான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட சர்வதேசப் பங்காளிகளுடன் பிரித்தானியா நெருங்கிச் செயற்படும் என அந் நாட்டின் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.**

பிரிட்டன் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதில் வழங்கிய போதே கமரூபன் இந்த கருத்தை வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச விசாரணைகள் குறித்த பிரித்தானியாவின் நிலைப் பாட்டில் மாற்றமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர் பில் சர்வதேச விசாரணை நடத்து மாறு வலியுறுத்தப்படும்.

இச் சுயாதீன விசாரணைகளுக்கு உலக நாடுகளின் ஒத் துழைப்பை பெற் றுக் கொள் ள 23 ஆம் பக்கம் பார்க்க..

## வெள்ளை வானில் வந்து விசாரணைக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் விசாரணை என்ற பெயரில் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த மரியதாஸ் பிரட்றிக் ஜோன்சன் என்பவரே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அதேபோல் முல்லைத்தீவு நகரப் பகுதியைச் சேர்ந்த சி. அருள்றெனி பேட் மற்றும் முல்லைத்தீவு வண்ணாங்குளத்தினை சேர்ந்த தி. அன்ரனி என்ற இருவரும் இதேபோல் வெள்ளை வானில் அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகின்றது. (செ-267)

## அனல் மின் நிலையம் சீனாவுக்கு

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இயக்கப் பணிகளை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனல் மின் நிலையத்தை சீனாவுக்கு வழங்கும் உடன்படிக்கையில் இரு நாடுகளும் கையெழுத்திட உள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை மின்சார சபையின் மின் பொறியிலாளர்களின் முறை 23 ஆம் பக்கம் பார்க்க..

## மலேசிய விமானத்திலிருந்து இலத்திரனியல் சமிக்ஞை!

(கொழும்பு)

தென் இந்திய பெருங்கடலில் மாயமான மலேசிய விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள சீன யுத்தக் கப்பல் ஒன்றுக்கு இலத்திரனியல் சமிக்ஞை கிடைத்துள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வினாடிக்கு 37.5 கிலோ ஹேர்ட்ஸ் அளவில் சமிக்ஞை கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த சமிக்ஞையானது காணாமல் போன மலேசிய விமானத்தில் இருந்து வருவதற்கான எந்தவிதமான உறுதியான ஆதாரங்களும் இல்லையென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானத்தின் கறுப்புப் பெட்டியின் மின்கலம் இன்னும் சில நாட்களில் செயலிழந்துவிடும் என்பதால், அதனை தேடும் முயற்சி தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விமானத்தின் கறுப்புப் பெட்டியில் உள்ள மின்கலம் நாளை 7 ஆம் திகதிக்குள் செயலிழந்துவிடும் என்று நம்பப்படுகிறது.

கடந்த மார்ச் 8ஆம் திகதி, 239 பயணிகளுடன் எம்.எச்.370 23 ஆம் பக்கம் பார்க்க..

## புதிய தூதுவர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான இரண்டு புதிய தூதுவர்கள், உயர்ஸ்தானிகர் ஒருவர் மற்றும் வத்திகான் பிரதிநிதி ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தமது நியமனக் கடிதங்களை கையளித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு 23 ஆம் பக்கம் பார்க்க..


## ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

காலை நேரத்தில் பஸ் பயணத்திற்காக பஸ்தரிப்பு நிலையத்திற்கு சென்ற பயணிகள் அங்கு சடலம் ஒன்று இருப்பதைக் கண்டு 23 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கைக்கு ஒத்துழைப்பதன் மூலம் அவுஸ்திரேலியா தவறான போக்கு

### மீள் பரிசீலனை செய்யுமாறு ஹோடன் வைஷ் கோரிக்கை




இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் நாட்டில் மீளிணக்கப்பாட்டை உருவாக்க முடியும் என அவுஸ்திரேலிய அரசு நம்புகின்றது. ஆனால் இலங்கை தொடர்பில் அவுஸ்திரேலிய நிலைப்பாட்டில் உடனடி மறுபரிசீலனை அவசியம் என இலங்கையில் போரின் இறுதி மூன்றாண்டுகள் ஐ.நாவின் பேச்சாளராக பணியாற்றிய ஹோடன் வைஷ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வீதிகளையும் பாலங்களையும் கட்டுவதன் மூலம் இங்கு வாழும் பூர்வீகக் குடிகளுக்கும், அவுஸ்திரேலியாவின் வெள்ளையினத்தவர்களுக்கும் இடையில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும் என்பதை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் இதனை இலங்கையில் மேற்கொள்ள முடியும் எனக் கூறுகின்றது.

இவ்வாறு இலங்கையில் போரின் இறுதி மூன்றாண்டுகள் ஐ.நாவின் பேச்சாளராக பணியாற்றியவரும், இலங்கையின் போரை விபரிக்கும் த கேஜ் என்னும் நூலின் ஆசிரியருமான ஹோடன் வைஷ் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டவை பின்வருமாறு,

2009-ல் 23 ஆம் பக்கம் பார்க்க..

## தடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் தடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அறிவித்துள்ளன. இலங்கை அரசாங்கத்தினால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங்கிரஸ், நாடு கடந்த தமிழீழ இராச்சியம் உள்ளிட்ட பதினாறு அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்ப 23 ஆம் பக்கம் பார்க்க..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOGI'S
## Academy of Beauty Culture Hair Dressing & Home Science

**கேக் கண்காட்சிக்கான கலந்துரையாடல்**

19.04.2014 10.00 மணிக்கு இக்கலந்துரையாடல் நடைபெற உள்ளதால் எமது நிறுவனத்தில் கேக் ஐசிங் பயிற்சி வகுப்புக்களை முடித்த மாணவிகளையும், புதிதாக பயிற்சி பெற விரும்புவோரையும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
**75, அம்மன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**Phone:-**
**021 222 2796,**
**0777164923**

(சி-6898)

## துளிர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அறிவித்தல்

உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவ சான்றிதழ் கற்கைநெறி

- ★ பிரிவு-12
- ★ கற்கைக் காலம்-06 மாதங்கள்
- ★ ஆரம்பம்-03.05.2014 சனிக்கிழமை
- ★ விரிவுரைகள்- சனி, ஞாயிறு, போயா தினங்கள்
- ★ இக் கற்கை நெறியைத் தொடர விரும்பும் இரு பாலாரும் 20.04.2014க்கு முன்பு சுயவிபரத்தினை அனுப்பி வைத்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளதால் முந்துங்கள்!

ஆளுமை மிக்கவர்களாய் மாறுங்கள். சவால்களை சந்திக்க இது நல்லதோர் சந்தர்ப்பம். உங்களுக்கு வயது ஒரு தடையல்ல.

**இல.30, கம்பஸ் லேன், திருநெல்வேலி.** (6077)

**பணிப்பாளர்:-**
**துளிர்கள் நிறுவனம்**

# Infotech Computer Education

**கணினிக்குரிய சகல கற்கைநெறிகளும் கற்பிக்க புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.**

ஆங்கில கற்கைநெறிக்கான புதிய அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

**ஆசிரியர்:- A.M.K.தில்லைமோகன்**
(ஆங்கிலத்தில் பல புத்தகங்களை ஆக்கியோன்)

**தேவை**

சகல வேலைகளையும் செய்யக் கூடிய 20-40 வயதிற்குட்பட்ட நபர் தேவை

தொடர்புகளுக்கு

# 03, Ramanathan Road,
Kaladdy Junction,
Jaffna. (6074)

T.P-0214722813
0776138955
0776562369

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-6889)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION
MONEY TRANSFER

# மரண அறிவித்தல்



## செல்வராசா ஈஸ்வரி (றோகினி)

3ஆம் ஒழுங்கை அரசடி வீதி நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ஈஸ்வரி (றோகினி) 2014.04.04 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார் அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (06.04. 2014) மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல் :- செல்வராசா குடும்பத்தினர்,
ஜெசிந்தன், துர்க்கா,
விபுல், தர்சா,
தாட்சாயினி
(T.P:- 077 3565 285)

## கனடாவில் படிக்க உழைக்க 20 இலட்சம் மட்டும் போதும் (6082)

**« எண்ணி 5 தினங்களுக்கு மட்டுமே. 10 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு**

7 நாட்களும் திறந்திருப்போம்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
www.thisaivisa.com
021 221 9016, 021 499 3501 (சி-6951)



## Soft View Computer Center

கணினி, சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள்
புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
இரவு நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன

8.30 am - 8.30 pm
102, Main Street, Jaffna. E.C. Colin
T.P: 021 222 4885, 0779053545
(யாழ்.திருமறைக் கலாமன்றம் அருகாமையில்)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கில் பூநாறி வீதியும் நீதிராசா வீதியும் சந்திக்கும் சந்திக்கு அருகாமை மணியர்பதி கோவிலுக்கு அண்மித்து சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தேவைப்படுவோர் பின்வரும் தொலைபேசி இலக்கம் கொண்டவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(6080)
0754161600
021-2052098
077 404 8703
} kok. Colombo

மரணம் கூட நம்மை விட்டு பிரிந்து விடும். மனதில் உள்ள கவலைகளை நம்பிக்கையானவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது அழையுங்கள்.

**021 222 8117**

கைகொடுக்கும் நண்பர்கள்
சிறிலங்கா சுமித்திரயோ
யாழ்ப்பாண கிளை,
104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6081)

## வீடு விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு

தொ.இ.
0779763278/
0712117168

தொடர்பு: ப.சிவநாதன்
காளிகோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (6076)

**CBf, DBf கணக்கீடு**

தொடர்புகளுக்கு
**077 4713 990**

உயர்தரத்தில் கணக்கீட்டினை கற்காத மாணவர்கட்கு அடிப்படையிலிருந்து தனியான பிரிவுகளில் ஆரம்பம் (6073)

## காணி விற்பனைக்குண்டு

கொடிகாமம் புகையிரத நிலையத்துக் கருகில் பத்துப் பரப்புக் காணி தென்னை மரங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
**0776062882** (C-6853)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815,**
**021 567 1532**

# sale மலிவு விற்பனை sale

**புதுவருடத்தை முன்னிட்டு**

**[02.04.2014] முதல் - [14.04.2014] வரை**



தம்ரோ, பியெஸ்ரா பொருள்களின் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் அலுமாரி வகைகள், கொம்பியூட்டர் ரேபிள்கள், பிளாஸ்ரிக் கதிரை வகைகளை 5% - 10% வரையிலான விற்பனைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ளலாம். இங்கு Stand fan, Rice cooker, Gas Cooker, Innovex TV போன்றவைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

✲ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடன் 7000/= பெறுமதியான Coffee table - (Glass) ஒன்று இலவசம்.

✲ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மெத்தைகளுடன் ஒரு பிளாஸ்ரிக் Teapoy இலவசம்..

**25000/= பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்தால் இலவச விநியோக சேவை.**



(C-6890)

**ஜமுனா பர்னிச்சர், 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 2829**

**ஜமுனா பர்னிச்சர், 10, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 222 1092**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அழுத்தங்களுக்கு ஒன்றிணைந்து பதில் கொடுக்கத்தயாராக வேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

**மேல்,தென்மாகாண சபைகளுக்கான தவிசாளர், பிரதித் தவிசாளர், சபை முதல்வர், ஆளும் கட்சியின் பிரதம கொரடா போன்ற பதவிகளுக்கு ஆளும் கட்சிக்குழு கலந்துரையாடி முடிவெடுக்கும் என அமைச்சர் மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.**

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கு இப் பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் வகையில் கட்சிகள் கூடி கலந்துரையாடி தீர்மானம் எட்டப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இரு மாகாண சபைகளுக்குமான முதலமைச்சர்கள் அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தமதுரையில் மேலும் தெரிவிக்கையில்:

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றி பெற்றுள்ளது. கட்சியின் தலைவர் போன்றே நாட்டின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்க்கமான செயற்பாடுகளே இந்த வெற்றிக்கு அடிப்படையாகும்.

நாம் 2005ஆம் ஆண்டிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் நாட்டில் பல மாற்றங்களைக் காண முடிகின்றது. நாடு அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இதன் பிரதி பலன்களைக் கண்களால் காண முடிகின்றது.

இன்றுள்ள விருப்புவாக்கு தேர்தல் முறையில் தனிப்பட்டவர்களின் ஆளுமையை வெளிப்படுத்துவதே முன்னிலை வகிக்கின்றது. அரசியல் கட்சிகளின் கொள்கை, அரசாங்கத்தின் அபிவிருத்தி போன்றவை இதற்குள் முடங்கி விடுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு எமது எதிர்காலத் தேர்தல் நடவடிக்கையின் போது எமது அரசியல் நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது கட்சி நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது மிகவும் அவசியமானது.

ஜனாதிபதியின் தலைமையில் எமது சகோதர அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் புதிய அரசியல் செயற்பாடுகளை ஏற்படுத்தி கட்சியைப் பலருடன் முன்னெடுத்துச் செல்வது முக்கியம்.

நடந்து முடிந்த தேர்தலில் எதிர்க்கட்சி பாரிய தோல்வியை சந்தித்துள்ளது. எவர் எவ்வாறு விமர்சித்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றியீட்டியுள்ளதை மறுக்க முடியாது.

அந்தவகையில் முதலமைச்சர். அமைச்சர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி தலைமையில் கட்சி கூடி தீர்மானங்களை எடுத்துள்ளது. இதற்கிணங்க மேற்படி மாகாண சபைகளின் தவிசாளர்கள் உப தவிசாளர்கள் பதவிகளுக்குத் தெரிவு செய்வதற்கு ஆளும்கட்சிக் குழு கூட்டப்பட்டு கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும்.

அதேபோன்று ஆளுங்கட்சி கொரடா சபை முதல்வர் பதவிகளுக்கும் இதே போன்று கலந்து ரையாடி தீர்மானம் எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர ஏனைய எமது சகோ தரகட்சிகளுடனும் கலந்துரையாடி அந்த பதவிகளை அக் கட்சிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பெற்றுக் கொண்ட வெற்றியையடுத்து அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமாக பயணித்து முன்னெடுப்பதுடன் தேசிய, சர்வதேச அழுத்தங்களுக்கு ஒன்றிணைந்து பதில் கொடுக்கத் தயாராக வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(2)

## சிவ யோகசுவாமிகளின் 50 ஆவது குரு பூசை

(யாழ்ப்பாணம்)

சிவ யோக சுவாமிகளின் ஐம்பதாவது குரு பூசை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும்.

அன்றையதினம் நல்லூர் கந்தன் தேரடியிலிருந்து நற்சிந்தனை ஒலிக்க சிவயோக சுவாமிகளின் திருவுருவம் வீதி வலம் வந்து விழா மண்டபத்தை அடையும்.

அதன் பின் விசேட வழிபாடு, சிறப்புரை மலர் வெளியீடு என்பன நடைபெறும். (2)

## இராசி பலன்

06.04.2014
(பங்குனி 23, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சப்தமி பின்னிரவு 2.43 மணிவரை
மிருகசீரிடம் காலை 6.27 மணிவரை
இராகுகாலம் 4.38-6.08 மணிவரை
சுபநேரம் 9.08-10.38 மணிவரை

**மேடம்** சகோதர ஒற்றுமை மேலோங்கும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை உயர்த்த நினைப்பீர்கள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**இடபம்** உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், ஆடம்பரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்** திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** குடும்பத்தினரை அனுசரித்து செல்வீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், கனவு பலிதமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** பொருளாதார நிலை உயர என்ன வழி என்று சிந்திப்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு, தேவையற்ற பயணம் உருவாகும், அஜீரணம் தொடர்பான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் கவலைப்பட வேண்டி வரலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், கௌரவமான நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்** உற்றார், உறவினர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், உற்சாகமான நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுப செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்,உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும்,பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்,சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தொலைதூரச் செய்திகள் வந்து சேரலாம், ரோக பயமுண்டு, நண்பர்கள் மூலம் சில நன்மைகள் இடம் பெறலாம்.

வளவன்

## கட்டடத் தொகுதி திறப்பு விழா

யாழ்.கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயத்தில், அமரர்கள் இராசையா சரஸ்வதி தம்பதியினரின் ஞாப கார்த்தமாக கல்விக் கொடையாளர் இரா.சையா குவேந்திரநாதனின் நன்கொடையாகக் கட்டப்பட்ட ஆரம்பப்பிரிவுக் கட்டடத்தொகுதிதிறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணிக்கு பாடசாலை அதிபர் கணிதச்சுடர் சண்.வாம ---தேவன் தலைமையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிரதான மண்டப நிகழ்வுகள் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ.சோம சுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சார்ய சுவாமிகள், கோண்டா வில் ஞானப் பழனியாண்டவர் ஆலய பூசகர் சிவஸ்ரீ. இரவீந்திராசாகுருக்கள்,கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.கதிர்காமக்குருக்கள், திருநெல்வேலி நல்லசமாரியன் தேவாலயவணபிதா அ.அன்ரனி குயின் ஆகியோர் வழங்குவர்.அத்துடன் வாழ்த்துரைகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (2)

# ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையில் 16 பதவிகளுக்கு வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பின்வரும் 16 பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உள்ளக கணக்காய்வாளர், உதவிப்பணிப்பாளர்-நிதி, நிர்வாக உத்தியோகத்தர், நூலகர், ஆராய்ச்சி உத்தியோகத்தர், விஞ்ஞான ரீதியான உத்தியோகத்தர், ஆலோசனை உத்தியோகத்தர், போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் உத்தியோகத்தர், உதவிப் போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் உத்தியோகத்தர், உதவி ஆலோசனை உத்தியோகத்தர்/ உதவி ஆராய்ச்சி உத்தி யோகத்தர், உதவி வெளிவாரி சேவை உத்தியோகத்தர், உள்ளிட்ட பதினொரு பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கான வயதெல்லை 22 தொடக்கம் 45 வரை இருத்தல் வேண்டும்.

மேலும் ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர், தாதி உத்தியோகத்தர், போதைப்பொருள் கல்வி மற்றும் தகவல் உதவியாளர், ஆலோசனை உதவியாளர், முகாமைத்துவ உதவி யாளர் ஆகிய பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை இரு த்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர், தவிசாளர் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, 383-கோட்டே வீதி, ராஜகிரிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரத்தை வலம்புரி காரியாலயத் தில் பார்வையிடலாம். (2)



வத்திக்கான் புதிய தூதுவர் உட்பட புதிய தூதுவர்கள் இருவர், உயர்ஸ்தானிகர் ஒருவரும் தங்களுடைய நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரிமாளிகையில் வைத்து நேற்று கையளித்தனர்.

கினி,ஸ்லோவெக் ஆகிய நாடுகளுக்கான தூதுவர்களும் நபீபியா நாட்டுக்கான உயர்ஸ்தானிகருே--ம தங்களுடைய கடிதங்களை கையளித்தனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 90 | 100 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 50 | 40 |
| கரட் | 90 | 100 | 70 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 70 | 50-60 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 50 | 70 |
| பாகற்காய் | 140 | 120 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 50 |
| பயற்றங்காய் | 40 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 50 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 150 | 200 |
| போஞ்சி | 90 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 50-80 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 35-40 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 80 | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெதர்லாந்து சென்றுள்ள சுவீடன் மன்னர் கார்ல் குஸ்டாப், அரசி சில்வியா, ராயல் மாளிகையை நெதர்லாந்து அரசர் வில்லியம் அலெக்சாண்டர் மற்றும் அரசி மேக்ஸிமா சுற்றிப் பார்ப்பதனை படத்தில் காணலாம்.

# முஷாரப்பின் பண்ணை வீடு வைத்தியசாலையாக மாற்றப்பட்டது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பின் பண்ணை வீடு சகல நவீன வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையாக மாற்றப்பட்டுள்ளது.

இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள தன்னை வெளிநாட்டில் சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் எனவும் மேலும். நோய் வாய்ப்பட்ட நிலையில்டுபாயில் தங்கியிருக்கும் தனது தாயாரை பார்க்க அங்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் முஷாரப் கோரிக்கை விடுத்தார். அந்த கோரிக்கையை பாகிஸ்தான் நீதிமன்றம் நிராகரித்தது.

அவருக்கு உள் நாட்டிலேயே சிகிச்சை அளிக்க வேண்டும் என உத்தரவிட்டது. அதை தொடர்ந்து அவரை ராவல் பிண்டியில் உள்ள இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் அவர் செல்லும் வழியில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. அதை தொடர்ந்து தீவிரவாதிகளால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

எனவே. தற்போது அவர் தங்கியிருக்கும் அவரது பண்ணை வீட்டை வைத்தியசாலையாக மாற்ற இராணுவம் முடிவு செய்தது. அதன்படி அவரது பண்ணை வீடு சகல நவீன வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையாக மாற்றப்பட்டது.

இங்கு அவர் 3 மாதம் சிகிச்சை பெறுவார். அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது. முஷாரப்புக்கு தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் உள்ளது. எனவே. அவரது பண்ணை வீடு ஏற்கனவே கிளைச்சிறையாக மாற்றப்பட்டு அங்கு அவர் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

# அமெரிக்கா விமானப் பாகங்களை ஈரானுக்கு விற்க அனுமதியளித்துள்ளது

(வோஷிங்டன்)

அமெரிக்கா தங்கள் நாட்டின போயிங் நிறுவனத்திற்கு விமான பாகங்களை ஈரானுக்கு விற்பனை செய்வதற்கு அனுமதியினை வழ ங்கியுள்ளது.

கடந்த 1979 ஆம் ஆண்டில் ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சியை முன்னிட்டு அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் அந் நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. ஈரானின் அணுசக்தி நடவடிக்கைளின் மீதும் சந தேகம் கொண்ட உலக நாடுகள் தங்களின் தடைகளை மேலும் இறுக்கின.

ஈரான் அணுஆயுதத் தயாரிப்பைத் தொடர்ந்து மறுத்துவந்த போதிலும் அங்கு அமைந்த புதிய அரசு அணுசக்தி மூலப் பொருட்களின் இருப்பைக் குறைக்க கடந்த ஜனவரி மாதம் ஒப்புக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளும் தளர்த்தப்பட்டன. தற்போது ஈரானின் அணுசக்தி உற்பத்தி அமைதியான முறையில் நடந்திடவும். அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் பூரணமாக விலக்கப் படுவதற்கும் ஈரான் மேற்கத்தேய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

கடந்த நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட முதல் ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக அமெரிக்கா தங்கள் நாட்டின் போயிங் நிறுவனத்திற்கு விமான பாகங்களை ஈரானுக்கு விற்பதற்கு. தடை உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னர் வழங்கப்பட்டுள்ள முதல் விற்பனை உரிமம் இதுவாகும்.

இது ஒரு குறைந்த காலத்திற்கான உரிமம் என்றும், பாதுகாப்பு காரணங்களுக்கான உதிரிப் பாகங்கள் மட்டுமே ஈரானுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் உரிமம் வழங்கிய அமெரிக்க பாதுகாப்பு கருவூலத்துறை குறிப்பிட்டுள்ளது. எனினும். புதிய விமானங்களை விற்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதை அந்தத்துறையின் செய்தித் தொடர்பாளர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

# சமூக முன்னேற்றத்தில் கனடாவுக்கு7 ஆவது இடம்

கனடா சமூக முன்னேற்றங்கள் ரீதியாக உலகளவில் 7ஆம் இடத்தை பிடித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

A U.S. non-profit group, the World Economic Forum என அழைக்கப்படுகின்ற இருவேறு அமைப்புகள் இணைந்து 132 நாடுகளில் மனிதர்கள் மகிழ்வுடன் வாழ்கின்றார்களா என்ற விடயம் குறித்து ஆய்வு ஒன்றை நடத்தியது.

இந்த ஆய்வில் கனடா 7ஆம் இடத்தை பிடித்ததை தொடர்ந்து பிரான்ஸ். பெல்ஜியம். பிரிட்டன். சுவிட்சர்லாந். நியூசிலாந் உள்ளிட்ட 20 சர்வதேச நாடுகள் தர வரிசையில் இடம்பெற்றுள்ளன.



இந்நிலையில் மனித வாழ்விற்கு அத்தியாவசியமான அடிப் படைத் தேவைகளான உணவு. தங்குமிடம் மற்றும் கல்வி கற்பதற் கான சந்தர்ப்பம் மற்றும் தனி மனிதவுரிமை போன்ற பல்வேறு காரணங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் வெறும் பொருளாதாரக் காரணங் களை மட்டும் கருத்தில் கொண்டு இந்த முடிவு கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கனடாவில் தனிமனித சுதந்திரத்திற்கு அதிகளவு முக்கியத் துவம் கொடுக்கப்படுவது மட்டுமல்லாமல் மக்கள் சமூக ரீதியாக எந்தத் துறையிலும் அவர்களது பங்களிப்பை அளிக்கக் கூடியளவிற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளது என கூறப்படுகிறது.

## வேலூர் சிறைச்சாலையில் நளினி, முருகன் சந்திப்பு

வேலூர் சிறைச்சாலையில் ராஜீவ் கொலை கைதிகள் நளினி-முருகன் சந்திப்பு நேற்று காலை 7.30 மணிமுதல் 8 மணி வரை நடந்தது. ஆயுதப்படை டி.எஸ்.பி. ராஜேந்திரன் தலைமையிலான பொலிஸார் முருகனை பெண் கள் சிறைச்சாலைக்கு அழைத்து சென்றனர்.

சந்திப்பு முடிந்ததும் முருகன் மீண்டும் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.




மூலிகை மருத்துவத்தில் சாதனை
தெய்வீக மூலிகை மருந்துகளால்



ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாமை, சர்க்கரை நோய், சொரியாசிஸ், ஆஸ்மா, மூலநோய், எடை கூட/குறைய, மஞ்சள் காமாலை(B)(HBSAG), பாலியல் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்

உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

ஆண்மைக்குறைவு

ஆண்மைக்குறைவு ஏற்பட முக்கிய காரணங்கள் இரண்டு. தானாக வருவது முதல் காரணம். நாமாக வரவழைத்துக் கொள்வது இரண்டாவது காரணம். விஷக்காய்ச்சல், உடல் பலவீனம் போன்றவைகளின் காரணமாக ஆண்மைக்குறைவு இயல்பாக ஏற்படுகின்றது. அதையும் தவிர்த்து இளமைப்பருவத்தில் ஏற்படுகின்ற தீய பழக்கங்கள், போதைப்பொருட்கள் பயன்படுத்துதல், தனது சக்திக்கும் அதிகமான உடல் உழைப்பு, டென்ஷன், சர்க்கரை நோய், சரியாக சாப்பிடாமை, உடல்சூடு போன்றவைகளால் ஆண்மைக்குறைவு தானாக வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக நரம்புத்தளர்ச்சி, உடல் படபடப்பு, மயக்கம், சோர்வு, கை, கால் கடுக்கம், அசதி, கண் எரிச்சல், கன்னத்தில் குழி விழுந்து காணப்படுதல், ஞாபக சக்தியின்மை, தூக்கமின்மை, தனியாக சிந்தித்தல், திருமண பயம், இல்லறத்தில் முழுமையாக ஈடுபட முடியாமை, விரைவாக விந்து வெளியேறுதல், குழந்தையின்மை போன்றவைகள் ஏற்படுகின்றன. இதிலிருந்து விடுபட்டு இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்க பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சையளிக்கிறார்.

குழந்தையின்மை

ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் உற்பத்தியின்மை, உயிரணுக்கள் குறைவு மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதப்பிரச்சினை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பைச் சுருக்கம், கருமுட்டை உற்பத்தியின்மை, கருமுட்டை வளர்ச்சியின்மை மற்றும் வெள்ளைபடுதல் போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு குழந்தைப்பாக்கியம் பெறலாம்.

செல்: 0091 9842457673, 0091 9600336009

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமாபுரம், சென்னை-89, இந்தியா

Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha



வேலைவாய்ப்பு

சிங்களம் தெரிந்த / தெரியாத தமிழ், முஸ்லிம் 18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் நிரந்தர வேலைவாய்ப்பு. சம்பளம் 18,000/-, 35,000/- (தொழில் அடிப்படையில் ஜேம் / கோடியல் / சொலட் / பிஸ்கட் / வாசனை திரவியம் / PVC Pipe / பிளாஸ்டிக்... பல தொழிற்சாலைகளிலும் மற்றும் வெல்டர் / மேசன் / பெயின்டர் / இலற்றீசியன் / கையுதவியாளர்களுக்கு வெற்றிடமுண்டு. உணவு + தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு. தொடர்பு : 0778430179 (C-6896)






டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் PB 270
Sales Dealer
எஸ்.ஜே.மோட்டர்ஸ்
73.ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4554

73, Stanley Road, Jaffna.
Tele & Fax :- 0094-021-222-4554
077 1711 819


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு துரித கதியில் வழங்கப்பட வேண்டும்

## இந்திய உயர்ஸ்தானிகர் யஷ்வர்தன் தெரிவிப்பு

இலங்கையில் சிறுபான்மை தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு துரிதகதியில் வழங்கப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்திய உயர்ஸ்தானிகர் யஷ்வர்தன் குமார் சிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இனப் பிரச்சினை தொடர்பிலான இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் ஒத்துழைத்து நடக்கும் என்று தாம் நம்புவதாக அவர் கூறியுள்ளார். (2)

# அமெரிக்க தீர்மானம் பிராந்திய நலனை அடிப்படையாக கொண்டது

## உலகத் தமிழர் பேரவை தலைவர் தெரிவிப்பு

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கை தொடர்பில் ஜெனீவாவில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியமையானது அவர்களின் பிராந்திய நலன் மற்றும் தேவையை அடிப்படையாக கொண்டது என உலக தமிழர் பேரவையின் தலைவர் அருட் தந்தை இம்மானுவேல் தெரிவித்துள்ளார்.

அதனை விடுத்து இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்காக செய்யவில்லை அந்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

எவ்வாறாயினும் இந்த தீர்மானம் ஊடாக தமிழ் மக்களுக்கு நிவாரணம் ஒன்று கிடைக்கும் என்பது இரகசியமானதல்ல எனவும் அவர் குறிப்பிடடுள்ளார்.

உலக தமிழர் பேரவை உட்பட புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மற்றும் 400 இற்கும் மேற்பட்ட வெளிநாடு வாழ் இலங்கை தமிழர்களை தடைசெய்யப்பட்ட பட்டியலில் இலங்கை சேர்த்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அருட் தந்தை இம்மானுவேல் உட்பட தடைசெய்யப்பட்ட 424 நபர்கள் மற்றும் அமைப்புகள் விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிரூட்ட முயற்சிப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் இந்த குற்றச்சாட்டை அருட் தந்தை இம்மானுவேல் மறுத்துள்ளார். (2)

# இலங்கையில் போர்க்குற்றம் புரிந்தவர்களின் பெயர்ப்பட்டியலை

## நா.க. தமிழீழ அரசு ஐ.நாவிடம் ஒப்படைக்கும்

(கொழும்பு)

இலங்கைத்தீவில் தமிழினத்தின் மீது போர்குற்றம், மானிடத்துக்கு எதிரான குற்றம் மற்றும் இன அழிப்பில் ஈடுபட்ட இலங்கை அரச தலைவர்கள் , இராணுவ தளபதிகள் ஆகியோரது பெயர்ப்பட்டியலை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிடுகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இனஅழிப்புத் தடுப்பும் விசாரணை முயற்சிகளுமான மையத்தினால் வெளியிடப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் 2001ஆம் ஆண்டு அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட 1373ஆம் இலக்க பிரேரணையின் தீர்மானத்தின் விதிகளுக்கு புறம்பாக, ஓர் இனத்தின் மீது திட்டமிட்ட வகையில் இலங்கை அரசாங்கம் போர்க் குற்றம், மானிடத்துக்கு எதிரான குற்றம் மற்றும் இனஅழிப்பில் ஈடுபட்டுள்ளது.

இச்செயலில் ஈடுபட்ட இலங்கை அரச தலைவர்கள் மற்றும் இலங்கை இராணுவ தளபதிகள் ஆகியோரது பெயர்ப்பட்டியலை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிக்கவுள்ளது.

இதேவேளை அனைத்துலக சட்டங்களுக்கு போர்க்குற்றம், மானிடத்துக்கு எதிரான குற்றம் மற்றும் இனஅழிப்பில் ஈடுபட்ட குறித்த இந்த நபர்களது பெயர்விபரங்களை, அனைத்துலக நாடுகளின் கவனத்துக்கு கொண்டு செல்ல இருப்பதோடு, அவர்களது சொத்துக்களை முடக்குவதற்குமாறு கோருவதோடு, பயணத்தடைகளையும் இடுமாறும் அந்நாடுகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோர இருக்கின்றது. (2)

# விபத்தில் 17 பேர் வைத்தியசாலையில்

புளத்சிங்கள, பபரகுலய பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

மரண வீடொன்றிற்கு சென்று கொண்டிருந்த போதே குறித்த பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்களில் 11 பேர் புளத்சிங்கள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு மேலும 6 பேர் களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# உலக மட்டத்தில் டெங்குநோய் தாக்கம் 30 மடங்காக அதிகரிப்பு

## உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டு

மலேரியாவைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. கடந்த 2000 ஆம் ஆண்டில் இலங்கையில் இரண்டு இலட்சத்து மூவாயிரம் பேருக்கு மலேரியா நோய் தொற்றியதாக பதிவானதை அடுத்து கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பரில் அந்த நிலை குறைந்து, அங்கு எவருக்கும் மலேரியா நோய் தொற்றவில்லை என்று அது கூறியுள்ளது.

அதேவேளை டெங்கு நோய் உலக மட்டத்தில் கடந்த 50 வருடங்களில் 30 மடங்கால் அதிகரித்திருப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

நுளம்புகள் (கொசு) போன்றவற்றால் கடத்தப்பட்டு பரவும் நோய்களான சிக்கின்குனியா, மலேரியா, டெங்கு, மூளைக்காய்ச்சல், ஆனைக்கால் நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறும் உலக சுகாதார நிறுவனம் உலக நாடுகளைக் கேட்டுள்ளது.

இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களாக உள்ளூரில் காணப்படும் மலேரியா நோய் எவருக்கும் தொற்றவில்லை என்று கூறும், மலேரியா தடுப்பு நடவடிக்கையில் பல்லாண்டுகளாக ஈடுபட்ட மருத்துவ நிபுணரான டாக்டர் எம். ஐ. பரீட் அஹ்மட் மலேரியா ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற நிலையை நோக்கில் இலங்கை சென்று கொண்டிருப்பதாகக் கூறினார். (2)

# மாணிக்கக்கல் அகழ்ந்த ஏழு பேர் கைது

பொகவந்தலாவ, இராணி காடு தோட்டத்தில் உள்ள மாவெளி காட்டில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்று முன்தினம் இரவு விசேட அதிரடி படையினரும் பொகவந்தலாவ பொலிஸாரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யபட்ட்வர்களிடம் இருந்து மாணிக்கக்கல் அகழ்விற்க்கு பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த மூவரும் பொகவந்தலாவ தெரேசியா தோட்டத்தைச் சேர்ந்த நால்வரும் இவ்வாறு கைது செய் யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 15 ½
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Computer Science (UK – Student Visa)
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/1203

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: திருகோணம்
கி.பா: 8 ¼
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L / வியாபாரம் (சென்னை)
தொ.இ: B/1212

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 62
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Software Engineer
தொ.இ: B/1214

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 20 ¾ சூரி செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / நிர்வாக உத்தியோகத்தர்
தொ.இ: B/1215

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 22 ½ சூரி செவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி / ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/1770

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 15 ½ செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
தொ.இ: G/1771

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 56 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc / Physiotherapy
தொ.இ: G/1772

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 14 செவ் 8 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: A/L, Banking course / Banking Asst.
தொ.இ: G/1775

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
தற்போது எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூழாமுறிப்பு வீதி சீரின்மையால் 126 ஏக்கர் தரிசு நிலமாகியுள்ளது

(குருமன்காடு)

ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு வீதி சீரின்மையால் 126 ஏக்கர் விவசாய நிலம் செய்கை பண்ணப்படாது கைவிடப்பட்ட நிலையிலுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கூழாமுறிப்பு பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பிலேயே விவசாயிகளினால் இப்பிரச்சினை எடுத்துரைக்கப்பட்டது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் கூழாமுறிப்பு கிராமத்தின் விவசாய நிலங்களுக்கு செல்கின்ற வீதி மோசமாக சேதமடைந்திருந்தது.

இவ்வாறாக சுமார் 150 மீற்றர் தூரமான வீதியின் பகுதி வெள்ளத்தினால் அள்ளப்பட்டு போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுவதால் விவசாய செய்கையை மேற்கொள்வதற்காக இவ் வீதியினைப் பயன்படுத்தும் விவசாயிகள் தமது 126 ஏக்கர் அளவிலான விவசாய நிலங்களில் செய்கை பண்ணப்படாமல் தரிசு நிலங்களாகவுள்ளதாகவும் இதனால் 135 குடும்பங்களின் வாழ்வாதார தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் முறையிட்டுள்ளனர்.

இவ்வீதியினை புனரமைத்துத் தருமாறு இக்கிராம மக்களினால் கோரப்பட்டிருந்தும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையென அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இக்குறைகேள் சந்திப்பில் முக்கிய விடயமாக மக்களினால் எடுத்துரைக்கப்பட்ட குறித்த வீதி தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கருத்து வெளியிடுகையில்,

துறைசார் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து விவசாய அமைச்சினூடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ' (9-250)

# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு உருத்திரபுரத்தில் நவீன அரிசி ஆலை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நலனை கருத்திற் கொண்டு உருத்திரபுரத்தில் நவீன அரிசி ஆலையொன்று நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழேயே இவ் அரிசி ஆலை இயங்குகின்றது.




மீள்குடியேறிய காலப் பகுதியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தரமான அரிசியைப் பெற்றுக் கொள்வதற்காக தென்பகுதியிலுள்ள அரிசி ஆலைகளையே நாடி வந்தனர்.

தமது நெல்லை தென்பகுதிக்கு ஏற்றிச் சென்று அங்குள்ள ஆலைகளில் அரிசியாக்கியே மீண்டும் கிளிநொச்சிக்கு கொண்டு வந்தனர்.

இதனால் இம் மாவட்ட விவசாயிகள் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் உருத்திரபுரம் கிராமத்தில் நவீன அரிசி ஆலையொன்று இரணைமுத்து என்ற பெயருடன் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அரிசி ஆலையினூடாக தினமும் 10 ஆயிரம் கிலோ வரையில் அரிசியைப் பதப்படுத்தி பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(9-254)



கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட அரச ஓய்வூதியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

# சிரமதானம்

(முல்லைத்தீவு)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, முல்லைத்தீவு பிரதான பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் குமுழமுனை மத்தி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கொட்டுக் கிணற்று பிள்ளையார் கோயில் வளாகத்தில் இன்று காலை 7.30 மணி முதல் 10.30 மணி வரை சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இச் சிரமதான நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச்சங்கம் , கமக்கார அமைப்புக்கள், சமுர்த்தி உத்தியோத்தர்கள் உட்பட பலர் பங்கு கொள்ளவுள்ளனர். (9-267)

# கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## கமலா ரணதுங்க எம்.பி.தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுதற்காக கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகாமையில் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலைமைக் காரியாலயமொன்று அமைக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கமலா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அம்பாள் குளம் கிராமத்திற்கு நேற்றைய தினம் வருகை தருவதாகவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வருகை தரவில்லை. மாறாக அங்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் கமலா ரணதுங்க அம்பாள்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கிராம மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் அவர் முன்வைத்த பல்வேறு தீர்மானங்களின் படி அங்கு கிராமங்கள் தோறும் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அங்குள்ள மக்களின் செறிவுக்கேற்ப குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அக்குழுக்களினூடாக வாழ்வாரத்தை உயர்த்த நடவடிக்கைமுன்னெடுக்கப்படவுள்ளதெனவும் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ள இவ் வாழ்வாதாரத் திட்டத்தில் 80 வகையான சிறுகைத்தொழில்களுக்கான திட்ட வரைபுகள் உள்ளன என்றும் அவை மக்களின் தேவைக்கேற்ப இங்கு அமுல் படுத்தப்படவுள்ளதாகவும் கூறினார்.

அத்தோடு ஒவ்வொரு கிராமங்களிலும் தெரிவு செய்யப்படவுள்ள குழுக்களின் மூலம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக நிதியுதவிகளும் தேவையுடைவர்களுக்கு வட்டியில்லா கடன் திட்டங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் நோய்வாய்ப்பட்டு சத்திர சிகிச்சைக்கு பணம் தேவைப்படுவர்களுக்கு எவ்விதமான உதவிகளை வழங்க முடியுமென எழுப்பிய கேள்விக்கு பாராளுமன்ற உறுப்பினர் அவ்வாறானவர்கள் இருப்பின்அவர்கள் தொடர்பான சுய விபரங்களைத் தருமாறு கோரினார்.

நாமல் ராஜபக்ஷவின் அனுமதியுடன் நிதியுதவி வழங்கப்படும் என்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவே நாமல் ராஜபக்ஷவின் தலைமைக்காரியாலயம் கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (9-271)

# மஹோற்சவம்

(கிளிநொச்சி)

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தின் 9 ஆவது நாளான எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 16 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும் இடம் பெறவுள்ளதாக அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

(9)

# திருத்தப்படாத குழாய் கிணற்றினால் நீரைப் பெற சிரமப்படும் மாணவர்கள்

(குருமன்காடு)

வவுனியா வடக்கு வலயத்தில் அமைந்துள்ள புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய் கிணறுகள் சேதமடைந்து காணப்படுவதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் நீரை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா கல்மடு பிரதான வீதியில் அமைந்திருக்கும் இப்பாடசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இங்கு இரு குழாய் கிணறுகளும் இரண்டு கிணறுகளும் உள்ள போதிலும், கிணறுகள் இரண்டும் கடும் வரட்சி காரணமாக நீர் வற்றுகின்ற நிலையில் ஆழம் சுமார் 40 அடி வரை காணப்படுகிறது.

இதனால் மோட்டர் மூலமும் நீரை பெறுக் கொள்ள முடியாத நிலையுள்ளது. அத்துடன் நீரில் கல்சியம் அதிகமாகவுள்ளதால் குடிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

இந்நிலையில், குழாய் கிணற்று நீரே அதிகமாக பபன்படுத்தப்பட்டு வந்தது.

இதில் ஒரு குழாய் கிணறு நீர் குறைவடைந்துள்ளமையால் நீரை பெறமுடியாது உள்ளதுடன் மற்றைய குழாய் கிணறு சேதமடைந்துள்ளது.

இவ்வாறாக சேதமடைந்த குழாய் கிணற்றை திருத்தி தருமாறு கோரி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி பாடசாலை அதிபரினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை அக் குழாய் கிணறு திருத்தப்படவில்லை.

இதனை திருத்தி தருமாறு பிரதேச சபை தலைவர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ,அரசாங்க அதிபர் என பல தரப்பினருக்கும் எடுத்து கூறிய போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர் . (9-250)

# கசிப்பு பயன்பாட்டை உடனடியாக நிறுத்துக

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விநாயகபுரம் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இக் கிராமத்தில் கடந்த வருடம் முதலே கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் இடம்பெற்று வருகின்றன.

இங்குள்ள ஒருசில வீடுகளில் வைத்தே இவை இடம்பெற்று வருவதனால் பாடசாலை செல்லும் மாணவாகள், பெண்கள் உட்பட பொதுமக்களும் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் பிடிபட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் கிராமத்திலிருந்து முற்றாக ஒழிக்க பொலிஸாரும் சமூக அமைப்புக்களும் விழிப்புடன் செயற்பட வேண்டுமென சமூக ஆர்வலாகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-271)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கரந்தன் போயிட்டி கிராமத்தில் இளைஞர் பட்டாளம் அட்டகாசம்

## அச்சத்தில் உறையும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

கரந்தன் போயிட்டி கிராமத்தில் கடந்த இரண்டு நாட்களாக இளைஞர் பட்டாளத்தின் அட்டகாசம் தொடர்வதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இருநாட்களிலும் மேற்படி கிராமத்திற்குள் நுழைந்த இளைஞர் பட்டாளம் வேலிகளை வெட்டி வீழ்த்திவிட்டு உள்நுழைந்து வீடுகளை சேதமாக்கியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

கடந்த 3 ஆம் திகதி இரவு 4 வீடுகளையும் நேற்று முன்தினம் இரவு இரண்டு வீடுகளையும் இந்த இளைஞர் பட்டாளம் சேதமாக்கி யுள்ளது.

இரவு வேளைகளில் முகத்திற்கு கறுப்புத் துணிகட்டியபடியும், வாள்கள் கத்திகளுடன் நுழையும் இவர்கள் பெரும் அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தால் அப்பகுதிமக்கள் மாலை 5 மணிக்கு பின்னர் வீட்டுக்கு வெளியில் வருவதில்லை என்றும் மிகுந்த அச்சத்துடன் இரவுவேளையை கழிப்பதாகவும் தெரிவித்தனர்.


இவ்விடயம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாரிடம் முறையிடப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஆயினும் எவரும் கைது செய்யப்படாமையால் தமக்கு அச்சமாக இருப்பதாக அப்பகுதிமக்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு நாளும்நாம் வருவோம் என அப்பகுதி மக்களுக்கு இந்த இளைஞர் பட்டாளம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி கிராம சேவையாளரை தொடர்புகொண்டு கேட்டபோது இவ்விடயம் குறித்து அச்சுவேலி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனவே இவ்விடயத்தில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.




# புத்தாண்டு சந்தை திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் புத்தாண்டுச் சந்தை தொடர்பான திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் மறுநாள் புதன்கிழமை வரை நெடுந்தீவு பிரதேச செயலக வளாகத்திற்கு அருகாமையிலும் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமையும் மறுநாள் 10 ஆம் திகதி வியாழக்கிழமையும் யாழ். காரைநகர் சுப்பிரமணியம் வித்தியாலயம், யா/ மங்கயற்கரசி வித்தியாலயம், யா/வட்டுக்கோட்டை, இந்து கல்லூரி, யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் 11 ஆம் திகதியும் கரணவாய் யா/பொன்னம்பலம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை மருதடி முருகன் கோவில் கொடிகாமம் மத்திய வாகனத்தரிப்பிடத்திற்கு அருகாமை, யா/ தாளையடி றோ.க.த.க பாடசாலை ஆகிய இடங்களிலும் நடைபெறும்.

11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி யா/மான்ஸ் ஆரம்பப்பாடசாலை, யா/மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் 12 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம், ஆகியவற்றிலும் புத்தாண்டுச்சந்தை நிகழ்வு நடைபெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2)




# தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள்

(கரணவாய்)

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நெல்லியடி மைக்கல் விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் இரவு 12 மணி வரை நெல்லியடி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது என நெல்லியடி பொலிஸ்பிரிவு அறிவித்துள்ளது.

இதற்கமைய ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டிமற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் கலாசார நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து அருணா இசைக் குழுவின் இன்னிசை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

இவ்விளையாட்டு நிகழ்வில் நெல்லியடி பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்கள், நெல்லியடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களும்இணைந்து நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-60)

# உத்தியோகத்தரின் துவிச்சக்கரவண்டி திருட்டு

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் நிறுத்தி வைக்க ப்பட்டிருந்த பிரதேச சபை பெண் உத்தியோகத்தரின் துவிச்சக்கரவண்டி கடந்த வியாழக்கிழமை திருட்டுப் போயுள்ளதாக குறித்த பெண் உத்தியோகத்தராலும் பிரதேச சபையினாலும் மானிப்பாய் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் உத்தியோகத்தர் துவிச்சக்கரவண்டியை நிறுத்தி விட்டு தனது கடமைக்கு சென்றுவிட்டு மாலை வீடு திரும்பும் போதே தனது துவிச்சக்கரவண்டியை பார்த்துள்ளார். இதன் போதே துவிச்சக்கரவண்டி திருடப்பட்டுள்ளதை அறிந்துள்ளார்

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (23)

# வறுமைக்கோட்டுக்குட்பட்டோருக்கு சமூக சேவைப்பிரிவின் உதவிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு வடக்கு மாகாண மத்திய சமூக சேவைத்திணைக்களத்தின் உதவியில் கொடுப்பனவு சேவைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி அறிவித்துள்ளார்.

இதற்கமைய பொதுசன மாதாந்த உதவிப் பணம், வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அநாதைகள் மற்றும் மாற்று வலுவுடையோர் என்பவர்களுக்கு 250 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை வழங்கப்படும். இவ்வுதவித் தொகை தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வழங்கப்படும்.

அத்துடன் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தகொடுப்பனவு ஆயிரம் ரூபாவழங்கப்படும்.

இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவத்தை பெற்று கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் பூரணப்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

நோய்க்கொடுப்பனவுகளாக சிறுநீரகப் பாதிப்புக்கு 500 ரூபாவும் கச ரோக நோய்க்கு 250 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையும் புற்று நோய்க்கு 500 ரூபா தொடக்கம் 750 ரூபா வரையும், தொழுநோய்க்கு 250 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையும், தலசிமீயா நோய்க்கு 250 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையும் வழங்கப்படும்.

இத்தொகைக்கு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள அரசாங்க வைத்தியசாலையால் வழங்கப்பட்ட அச்சடிக்கப்பட்ட படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பயனாளி அல்லது மாற்று ஆற்றல் உடையோர சுய தொழில்களான கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தையல் போன்றவற்றிற்கு 15 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படும்.

அத்துடன் மாற்று ஆற்றலுடையவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 50 பேருக்கு மட்டும் வழங்கப்படும்.

அத்துடன் மாற்று ஆற்றலுடையவர்களுக்கு கண்வில்லை, மூக்குக்கண்ணாடி, முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, செயற்கை கால், கை, பாதம், ஊன்று கோல், கலிபர் காலணி, காது கேட்கும் கருவி, வெள்ளைப் பிரம்பு போன்ற உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும்.

இவ் மாற்று ஆற்றலுடையவர்களுக்கு கொடுக்கப்படும் தொகைகளையும், உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கை கடிதம் மருத்துவ சான்றிதழ் ஆகியவற்றுடன் சமூகமளிக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களால் குடிசை வீடுகள் பாதிக்கப்பட்டிருந்தால் அதனை திருத்துவதற்கு தற்காலிகமாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இவ் வீட்டுத் திட்டத்திற்கு கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கை கடிதம் கிராம அலுவலரின் தினக் குறிப்பு, பிரித்தெடுப்பு என்பவற்றுடன் சமூகமளித்தல் வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (60)




*வட மாகாண விவசாய அமைச்சருக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் இருந்து சோளன் தோட்ட இளைஞர் கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணத்தை வழங்கிவைப்பதைப் படத்தில் காணலாம்.* (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்

# நெடுஞ்சாலை



கொள்ளை, குரோதம், காதல்... இவற்றை ஜன்னல் வழிக் காட்சிகளாகக் கடத்துகிறது "நெடுஞ்சாலை'!

சரக்கு லொறிகளில் திருடும் ஆரிக்கும், தாபா "ஓனர்' ஷிவதாவுக்கும் காதல். இதனால் ஷிவதா மேல் மோகம்கொண்டு அலையும் இன்ஸ்பெக்டர் பிரசாந்த் நாராயணனுக்கும் ஆரிக்கும் மோதல். சூழ்ச்சி, சூதுகளுக்கு மத்தியில் காதலும் காதலர்களும் என்ன ஆனார்கள் என்பதே "நெடுஞ்சாலை'ப் பயணம்!

80களில் தேசிய நெடுஞ்சாலைகளைப் பரபரக்க வைத்த தார்ப்பாய்த் திருட்டைப் பின்னணியாக வைத்து கதை பின்னியிருக்கிறார் இயக்குநர் கிருஷ்ணா. தார்ப்பாய்த் திருட்டுக் காட்சிகள் படத்தின் பவர்ப்ளே ஏரியா. ஆனால், அதை "தொட்டுக்கா' ஆக்கிவிட்டு, பழக்கமான திருடன்-பொலிஸ் விறைப்பு முறைப்பு காட்சிகளால் திரைக் கதையைத் தொகுத்திருக்கிறார்கள்!

கண்களில் கள்ளத்தனம், உடையில் அழுக்கு, உடல் மொழியில் அலட்சியம்... என "தார்ப்பாய் முருகன்' கரக்டருக்கு ஆரி செம ஃபிட். தபதபவென ஓடிவந்து லொறிமேல் இலாகவமாக ஏறுவதும், "எவன்டா இங்கே கஞ்சா குடிக்கிறது?' என்று எகிறி, அது யார் எனத் தெரிந்ததும் அடங்குவதுமாக எதற்கும் தயாராக நிற்கிறார். நடை, உடை, கடைக் கண் பார்வை... என ஷிவதா நாயரிடம் (அறிமுகம்) கிராமத்து யட்சி வசீகரம். தாபா வாடிக்கையாளர்களை தாஜா பண்ணும் போது குறும்புக் குற்றாலமாகத் துள்ளுவதும், இன்ஸ்பெக்டர் சீண்டும்போது ஒரு நொடி கலங்கி, அடுத்த நொடியே வெளுத் தெடுப்பதும், ஆரியுடன் காதலில் நெக்குருகுவதுமாக... பொண்ணுக்கு நடிப்பும் பிரைட்!

"கஞ்சா பொலிஸ்' பிரசாந்த் நாராயணன், பல காட்சிகளில் கஞ்சாவை இழுத்தபடி பார்வையால் மிரட்டும் இடங்களில்... செம! புரோக்கர் கரக்டர் நச் ஸ்கெட்ச். பொலிஸைத் திட்டிக்கொண்டே அவர்களுக்கு சலாம் போடுவது, "நான் எங்கே அவனை வெச்சிருக்கேன்? என் சம்சாரம்தான்..!' என்று புலம்புவது என சகுனி புரோக்கர் கரக்டரில் புகுந்து விளையாடியிருக்கிறார் சலீம்குமார்.

பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சரக்கு ஆட்டோ, தாபா கடை ஆகியவற்றில் மிளிர்கிறது சந்தானத்தின் கலை இயக்கம். இருளில், விளக்கில், நெருப்பில் பயணிக்கும் கமரா மூலம், ஒவ்வொரு காட்சிக்கும் ஓவிய நேர்த்தி கொடுத்திருக்கிறது ராஜவேல் ஒளிவீரனின் ஒளிப்பதிவு. "தாமிரபரணி' மெலடியில் மனம் வருடும் சத்யாவின் இசை, "வாராண்டி வாராண்டி...' பின்னணி இசையில் திடுக் அதிர்ச்சி கொடுக்கிறது.

சிக்கல் நீங்கி ஆரிஷிவதா இணைந்த போதே படம் முடிந்துவிடுகிறது. ஆனால்,



அதற்குப் பின்பு வம்படியாக ஓர் அதிர்ச்சி க்ளைமாக்ஸ்... அதன் பின்பும் ஒரு நெகிழ்ச்சி க்ளைமாக்ஸ்..! என திரைக்கதையை நகர்த்தியிருக்கிறார்கள்.

நெடுஞ்சாலை நெடுநாள் பயணிக்குமா?

# முத்தத்திற்கு ஓ.கே. லட்சுமி மேனன்


எல்லா கதாநாயகர்களுடனும் முத்தக் காட்சியில் நடிக்க தயார் என்று நடிகை லட்சுமி மேனன் கூறியுள்ளார். நடிகை லட்சுமி மேனனிடம், "விஷாலுடன் மட்டும்தான் முத்தக்காட்சியில் நடிப்பீர்களா? அல்லது எல்லா கதாநாயகர்களுடனும் முத்தக்காட்சியில் நடிப்பீர்களா?" என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு பதிலளித்த லட்சுமிமேனன், "கதைக்கு தேவைப்பட்டால் எல்லா கதாநாயகர்களுடன் உதட்டுடன் உதடு சேர்த்து முத்தக்காட்சியில் நடிக்க தயார்" என்று கூறியுள்ளார்.

விஷால் - லட்சுமி மேனன் நடிப்பில் உருவாகியிருக்கும் திரைப்படம் "நான் சிகப்பு மனித்ன்". இத்திரைப்படத்தை திரு இயக்கியிருக்கிறார். இத்திரைப்படம் ஏப்ரல் 11ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

"இத்திரைப்படத்தில் நானும் லட்சுமி மேனனும் இடம்பெறும் முத்தக்காட்சி, ஜேம்ஸ் பாண்ட் படங்களில் இடம்பெறும் முத்தக்காட்சிப் போன்று கிடையாது. இது பரபரப்பாக பேசக்கூடிய அளவுக்கு பெரிய விடயம் இல்லை. படத்தில் ஒரு செகண்ட் மட்டுமே வரக்கூடிய காட்சி அது. அதுவும் இக்காட்சி ஒரே டேக்கில் எடுக்கப்பட்டது. கதைக்கு தேவைப்பட்ட காரணத்தாலேயே இக்காட்சி எடுக்கப்பட்டது" என்றார் விஷால்.

# அந்த நாள் ஞாபகம்



மாயாண்டி... படம் எடுடா..: - மனைவி ருக்மணியுடன் நம்பியார்.



அஞ்சலி தெலுங்குப் படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள வேடம் என்பதால் ஒப்புக்கொண்டேன் என்று சொல்பவர் 10 கிலோ எடை குறைத்துள்ளார். பறவையே எப்போ வருகிறாய்?

# சினித்துளிகள்...

★ விக்ரம் ஐ படத்துக்காக உடல் மெலிந்த பின்னர் எல்லா உணவுகளையும் அரைவேக்காட்டு சமையல் செய்து சாப்பிட்டு வந்தார். படம் முடிவடையும் தருணம் என்பதால் இனி முழு நேர அசைவத்துக்கு மாறப்போகிறார். இனிமேல் வெயிட்டு தான்!

★ தமிழ், தெலுங்கு சினிமாக்காரர்கள் என்னைக் கண்டுக்கவே மாட்டேங்கிறாங்க என்று குற்றம் சாட்டும் பிரியாமணி வசம் இப்போது கன்னடத் திரையுலகில் மூன்று படங்கள் உள்ளன.

★ ஆண்ட்ரியா தன்னைப் பற்றி பத்திரிகையில் கிசுகிசு வந்தால் டென்ஷன் ஆகிவிடுவாராம். அறைக்குள் நுழைந்து கதவை மூடிவிட்டு 10 நிமிடம் கழித்து அமைதி ஆன பின்னர்தான் வெளியே வருவாராம். ஆங் ரிபோர்ட்!

★ ஜெயம் ராஜா இயக்கத்தில் ஜெயம் ரவி-நயன்தாரா நடிக்கும் தனி ஒருவன் படத்தின் முதல் ஷெட்யூல் நடந்து முடிந்து விட்டது. வட இந்தியா ரிஷிகேஷ் அருகே படப்பிடிப்பாம். ஜெயமாகட்டும்!

★ ஸ்ரீபெரும்புதூரில் சந்தானம் நடிக்கும் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படப்பிடிப்பு நடக்கிறது. ஷூட்டிங் ஸ்பாட்டில் அனைவருக்கும் சமமான உணவே வழங்கப்படுகிறதாம். சந்தானம் சைவ சாப்பாட்டையே விரும்பிச் சாப்பிடுகிறாராம். ஹீரோவாயிட்டாராம்!


★ பிரபுதேவா இப்போது பாலிவுட்டில் ஆக்ஷன் ஜாக்ஸன் படம் இயக்கி வருகிறார். இந்தப் படம் முடியும் முன்னரே ரிலையன்ஸ் எண்டர்டெயின் மெண்ட் கம்பனிக்கு படம் இயக்க அழைப்பு வரவே ஸ்கிரிப்ட் தயார் செய்துவிட்டாராம். சயீப் அலிகான், பிரியங்கா சோப்ரா என நடிகர் நடிகைகளையும் தேர்வு செய்துவிட்டார். சம்பளம் 25 கோடியாம். காசு மேல காசு வந்து கொட்டுகிற நேரம் இது!

★ அட்டகத்தி ஐஸ்வர்யா நல்ல டான்ஸர். தினேசுடன் இப்போது திருடன் பொலிஸ் படத்தில் மாடர்ன் வேடத்தில் நடித்து வருகிறார். விஜய் சேதுபதியுடன் இணைத்து வந்த கிசுகிசுக்களால் செம கடுப்பாகி விட்டாராம். எல்லாம் நல்லதுக்குத் தான். !

★ காஜல் அகர்வால் படங்களின் தொடர் தோல்வி காதல் கிசுகிசு என தொடர்ச்சியாகப் பிரச்சினைகள் வந்ததால் காளஹஸ்தி சென்று இராகு கேது நவக்கிரகங்களுக்கும் பூஜை செய்து விட்டு வந்துள்ளார். கட்டழகிக்கு கட்டம் சரியில்லையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று திறப்பு விழாக்காணும் கோண்டாவில் இராம கிருஷ்ண ஆரம்ப வித்தியாலயம்


இராசையா குவேந்திரநாதன்

இலங்கை வரைபடத்தில் வடமாகாணத்தின் யாழ். மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் 3.5 ஆவது கிலோமீற்றர் தூரத்தில் இந்து பாரம்பரிய சூழலில் அமைந்திருப்பது தான் யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

சிறப்பான செம்மண் பூமியில் வாழைகளும் புகையிலையும் வெங்காயமும் பச்சைப்பசேல் என விரிந்து பரந்து கிடக்கும் பசுமைச்சூழலில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் நல்லூர் கல்விக் கோட்டத்தின் 40 பாடசாலைகளில் இதுவும் ஒன்று.

1962ஆம் ஆண்டு இந்துப் பாரம்பரியத்தின் சின்னமாக இராமகிருஷ்ண மிஷனின் அனுசரணையுடன் ஆசைப்பிள்ளைஎன்றுஅழைக்கப்படும் சரவணமுத்துவாலும் அவரோடு இணைந்து சிறாப்பர் என்று அழைக்கப்படும் கனகசபாபதி என்பவராலும் இணைந்து ஆரம்பிக்கப்பட்டு இப்பிரதேச மக்களுக்கு கல்வியூட்டும் சாலையாக விளங்குகிறது.

முற்றுமுழுதாக விவசாயம், வர்த்தகம் சார் மக்களின் குழந்தைகளுக்கு கல்வியூட்டும்புகழ்பெற்ற பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலையின் அதிபர்களாக இருந்த பலர் இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டதை மறக்கமுடியாது. இங்கு கடமையாற்ற வரும் ஆசிரியர்களும் சமூகத்தில் தாமும் ஒருவர் என நினைத்து அரியசேவை ஆற்றி பல நற்பிரஜைகளை இம்மண்ணுக்கு விட்டுச் சென்றுள்ளனர்.

முப்பது ஆண்டுகால யுத்தம் இப்பாடசாலையின் வளர்ச்சி வேகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதை மறக்க முடியாது. இடப்பெயர்வுகளால் இப்பிரதேசத்துக்கேயுரிய வர்கள் பலர் உள்நாட்டில் வேறு இடங்களிலும் வெளிநாட்டிலும் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆயினும் தமது பாடசாலை என்ற உணர்வு இப்பாடசாலை சமூகத்திடம் மேலோங்கி நிற்பதை பல அபிவிருத்தி சம்பவங்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ளன.

உள்நாட்டுப்போர் காரணமாக பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் பெண் குழந்தைகளை வளர்க்கும் கருணாலயம் இப்பாடசாலைக்குப் பக்கத்தில் உள்ளதனால் அங்கு வளர்க்கப்படும் இருநூறுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கல்வி வழங்க வேண்டிய கடப்பாடும் இப்பாடசாலைக்கு உண்டு. இம்மாணவர்களுக்கு கல்வியோடு தாய், தந்தை, சகோதரர்களுக்குரிய பாசத்தையும்வழங்குபவர்களாக அதிபர், ஆசிரியர்கள் இருப்பது சிறப்பம்சமாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் உழைத்த அதிபர், ஆசிரியர்கள் என்றும் விசேடமாக நினைவு கூரத்தக்கவர்கள். இதனடிப்படையில் 1993ஆம் ஆண்டில் பிரதி அதிபராக வருகை தந்து இன்று வரை சிறந்த கணித ஆசிரியராகவும் 2001 ஆம் ஆண்டிலிருந்து அதிபராகவும் கடமையாற்றிவரும் கணிதசுடர் என்னும் கௌரவப் பட்டத்துக்குரிய சண்.வாமதேவன் காலம். இப்பாடசாலை வரலாற்றை அறிந்தவர்கள் பொற்காலம் என்பர்.

பாடசாலை என்பது சமூகத்தின் கண்ணாடி ஆகும். அரசாங்க உதவிகளையும் சமூகத்தின் உதவிகளையும் தேவையேற்படும் காலங்களில் எல்லாம் தன் நிர்வாக, தொடர்பாடல் திறனால் பெற்றுத்தந்த பெருமைக்குரியவராக விளங்குகின்றார்.

அரசாங்கத்தின் ஆயிரம் பாடசாலை திட்டத்தில் ஆரம்பப் பிரிவு தனியாக இயங்கவேண்டும் என்ற நிலைப்பாடு உண்டு.

மேற்படி திட்டத் திற்கு உள்வாங்கப்படும் காலம் வரும் போது ஆரம்பப்பிரிவு தனியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் தணியாத தாகமாக அதிபரது சிந்தனையில் ஏற்பட்டபோது அதனை பாடசாலைக்குரிய சமூகத்திடம் கடந்த ஆண்டு அதிபரால் வெளிப்படுத்தப்பட்டது.

பாடசாலைக்கு அண்மையில் பொருத்தமான 6 அரை பரப்பு நிலம் கொள்வனவுக்கு உரிய நிலையில் இருந்ததனை அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பாடசாலைக்குரிய சமூகத்திடம் வெளிப்படுத்தப்பட்டது.

பல இலட்சம் ரூபா பெறுமதியான காணியை பாடசாலைக்கு பெற்றுக்கொடுக்கப் பலர் முன்வந்த சம்பவம் மறுக்கமுடியாதது. இதன் அடிப்படையில் கோண்டாவிலைச் சேர்ந்த இராசையா குவேந்திரநாதன் 4 பரப்பு நிலத்தையும் திருமதி லலிதகுமாரி சிவபாலன் ஒரு பரப்பு நிலத்தையும் சுவிஸ் நாட்டின் பழைய மாணவர் சங்கம் ஒரு பரப்பு நிலத்தையும் ஏனைய கோண்டாவில் மக்கள் ஒன்றிணைந்து அரை பரப்பு நிலத்தையுமென மொத்தமாக 6 1/2 பரப்பு நிலம் புதிதாக அமைக்க வேண்டுமென எண்ணிய ஆரம்பப் பிரிவுக்குநன்கொடையாக கிடைத்தமை முதற்படி வெற்றியாகும்.

அதிபரின் அயராத முயற்சியினாலும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடனும் இக்காணியில் அரசாங்க நிதியில் இருந்து 50"× 25" இரண்டு மாடிக் கட்டடம் அமைக்க நிதி கிடைத்தது.



50"×25" அளவுகொண்ட அரச நிதியொதுக்கீட்டு கட்டடத்தில் முழுமையாக ஆரம்பப் பிரிவை நடத்த முடியாத நிலையை ஏறக்குறைய 80 இலட்சம் ரூபா பெறுமதியான காணியை அன்பளிப்பாக வழங்கிய கொடை வள்ளலான இராசையா குவேந்திரநாதனிடம் அதிபரும் ஆசிரியர்களில் சிலரும் எடுத்துக்கூறி உதவிகோரினார்.

ஆலயங்கள் பல அமைப்பதனை விட கல்விச்சாலை ஒன்று அமைப்பது கோடி புண்ணியம் என உணர்ந்த பெருந்தகை குவேந்திரநாதன் உரிய அனுமதி வலயக் கல்விப் பணிமனையில் இருந்து கிடைத்தால் அரசாங்கம் கட்டித்தரும். அதேயளவான இன்னொரு வகுப்பறைத் தொகுதி மாடிக்கட்டடத்தினை கட்டித் தருவதாக சம்மதித்தது மட்டுமல்ல தானே நேரடியாக நின்று தனது வீட்டை எப்படி அமைப்பாரோ அதனைவிட ஒருபடி மேலாக செய்து இன்று பிள்ளைகளிடம் கையளிக்கும் பெருமைக்குரியவ ராக எம்முன் நிற்கின்றார்.

சமூகத்திற்கு நற்பணி செய்பவர்கள் அவர்கள் வாழும் காலத்தில் வாழ்த்துவதும் மதிக்கப்படுவதும் எம் கடமையாகும். கோண்டாவில் கிராமத்தில் இராசையா சரஸ்வதிப்பிள்ளையின் நற்தவத்தால் உதித்த உதய சூரியன்தான் எம் கொடை வள்ளல் குவேந்திரநாதன். இவரது சகோதரர்களில் மூவர் ஆண்கள். ஒருவர் கோண்டாவில் மண்ணிலும் இருவர் கனடா நாட்டிலும் வாழ்கின்றனர்.

அத்தோடு 7 சகோதரர்களில் ஒருவர் பிரான்ஸ் நாட்டில் அமரர் ஆகிவிட்டார். 2 பேர் கனடா நாட்டிலும் 4 பேர் கோண்டாவிலிலும் வாழ்கின்றனர். பொதுவாக அனைவரும் தமது தொழிலாக வியாபாரத்தையே விருப்புடன் ஆற்றிவருகின்றனர்.

கொடை வள்ளல் குவேந்திரநாதன் ரஞ்சினிதேவி தம்பதியினருக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் உண்டு. ஒரு பெண் பிள்ளை பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் அவரது கணவர் வைத்தியராகவும் விளங்குகின்றார்.

அடுத்த பெண் பிள்ளையும் அவரது கணவரும் வங்கியாளராகவும் விளங்குகின்றனர்.

ஆண்மகன் சுமன் மிகச்சிறந்த வைத்தியராக விளங்குவதுடன் துணைவியார் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் விளங்கு கின்றனர்.

கல்விக் கொடையாளர் குவேந்திர நாதனின் கொடைக்கு ஏற்றாற்போல் அவரது பிள்ளைகள், மருமக்கள் அனைவரும் உயர்கல்வியாளராக விளங்குவது, கல்விக் கொடைக்கு நிகர் எதுவும் இல்லை என்பதற்கு மற்றவர்கள் அனைவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கல்விக்கு மாத்திரமன்றி கொடையாளர் குவேந்திரநாதன் கோண்டாவில் சமூகத்தின் நலன் கருதி பொற்பதி வீதி, அரசடி விநாயகர் ஆலய சந்தியில் ஏறக்குறைய 80 இலட்சம் ரூபா பெறுமதியான தபாற்கந்தோரை சகல வசதிகளுடனும் தனது தாய், தந்தையர் இராசையா சரஸ்வதி ஞாபகார்த்தமாக கடந்த ஆண்டு அமைத்து மக்களிடம் கையளித்த பெருமைக்குரியவர்.

06.04.2014 ஆகிய இன்று கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவு கட்டடத் தொகுதியில் 40"×25" மாடி வகுப்பறைகளை தனது தாய், தந்தையரான அமரர்கள் இராசையா சரஸ்வதி தம்பதியினரின் ஞாப கார்த்தமாக கொடை வள்ளல் குவேந்திரநாதன் தம்பதியினரால் திறந்து வைக்கப்படுவது முழு தமிழ்மக்களுக்கும் பெருமை யளிக்கும் நிகழ்வாவதோடு இவரை உதாரணமாகக் கொண்டு எம் மண்ணின் பாடசாலைகளை வளம்படுத்த கொடையாளர்கள் முன்வர வேண்டும் என்பது எம் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

கொடைவள்ளல் குவேந்திரநாதனைப் போன்று அவரது பிள்ளைகளும் எதிர்காலத்தில் இப்பாடசாலையின் கல்வி முயற்சிகளுக்கும் அபிவிருத்திக்கும் துணையாக பக்கபலமாக நிற்கவேண்டும் என்பதே எம் அனைவரதும் விருப்பம் ஆகும்.

ஆரம்பப் பிரிவு பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய மலசலகூடம் கோண்டாவில் வாழ் பழைய மாணவர்களால் பல இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்தமை, இப்பாடசாலையில் கற்ற மாணவர்களின் உயர் குணப்பண்பையும் தம் பாடசாலை என்ற சிறப்பான உணர்வையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் இடைநிலைப்பிரிவு பகுதியில் நவீன ஒன்றுகூடல் மண்டபம் ஒன்று அழகாக அமைக்கப்பட்டு வருகின்றது. இதன்கீழ் தளத்துக்கு இதுவரை 90 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதில் ரூபா 44 இலட்சம் அரசாங்க நிதியில் இருந்து கிடைக்கப்பெற்றபோதும் மிகுதி 46 இலட்சம் கனடா பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்டமை என்றும் கோண்டாவில் சமூகம் மறக்க முடி யாத நன்றிக்குரிய விடயமாகும்.

இன்றைய திறப்பு விழா கட்டடத் தொகுதியை மாணவர்களுக்கு கையளிக்கும் கோண்டாவில் மண்ணின் தலைமகன் குவேந்திர நாதன் குடும்பம் என்றும் போற்றுதற்கும் வாழ்த்துதற்கும் உரியவர்கள் என்றால் மிகையாகாது.

**திருமதி கௌரியம்பாள்**
**மாணிக்கராசா**
**ஆசிரியர்**
**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.**

# சமூக அபிவிருத்தி சுட்டியில் இலங்கைக்கு 85 ஆவது இடம்

(கொழும்பு)

இலங்கை சமூக அபிவிருத்திச் சுட்டியில் இலங்கை 85ஆம் இடத்தை வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

132 நாடுகளில் இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளதாகவும் இதில் இலங்கை 85ஆம் இடத்தை வகித்து வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மனித நலன்புரிகள், மொத்த தேசிய உற்பத்தி, தனிநபர் வருமானம் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இவ்வாறு அபிவிருத்திச் சுட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

சமூக அபிவிருத்திச் சுட்டியின் அடிப்படையில் முதலாம் இடத்தை வகிக்கும் நாடு நியூசிலாந்து என்பது குறிப்பிடத்தக்கது.

ஐஸ்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் நிலைகளை முறையே வகிக்கின்றன. (2)


# அதிவேக வீதிகளில் பயணிக்கும் பேருந்துகளுக்கு கட்டணம் குறைப்பு

கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக பாதையில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கான கட்டணம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையின் இரண்டாவது அதிவேக நெடுஞ்சாலையாக கருதப்படும் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதையில் பயணிக்கும் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் இதுவரையில் 130 ரூபா கட்டணம் அறவிடப்பட்டது. இந்நிலையில் நேற்றிலிருந்து குறித்த கட்டணத்தை 10 ரூபாவாகக் குறைத்து 120 ரூபாவாக அறவிடப்பட்டு வருகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தங்க முட்டையிடும் வாத்து!

ஒரு கிராமத்தில் ஷியாம் என்ற அநாதைச் சிறுவன் இருந்தான்.

நாள் முழுவதும் கூலி வேலை செய்து அதில் கிடைத்த சொற்ப வருமானத்தில் அரை வயிற்றுக்கு சாப்பிட்டுக் காலத்தை ஓட்டினான்.

தனக்கென்று வசிக்க ஒரு சிறிய குடிசை அமைத்துக் கொண்டான்.

வீட்டிலேயே ஒரு பெட்டைக் கோழியையும் வளர்த்து வந்தான்.

கோழியிடும் முட்டைகளை விற்று விடுவான்.

என்றாவது கூலி வேலை கிடைக்கவில்லையெனில், முட்டைகளை விற்காமல் அவற்றை அவித்து உண்டு விடுவான்.

அவனுக்குப் பக்கத்து வீட்டில் தனராஜ் என்ற பணக்காரன் வசித்து வந்தான்.


அவன் மிகவும் பொறாமை பிடித்தவன்.

மற்றவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் காணப் பொறுக்காது அவனுக்கு!

ஷியாம் வளர்த்து வந்த கோழி மதமதவென்று இருந்ததைக் கண்டு ஒருநாள் அந்தக் கோழியைப் பிடித்துக் கொன்று தின்றுவிட்டான்.

மாலையில்ஷியாம்கோழியைக் காணாமல் திடுக்கிட்டான்.

கோழியின் இறகுகள் தனராஜ் வீட்டின் கொல்லைப்புறம் சிதறியிருந்ததைக் கண்டதும், நேராக அவனிடம் சென்று அதைப் பற்றிக் கேட்டான்.



தனராஜ் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டதும், "அது உன கோழியா? எனக்குத் தெரியாது! என பூனை ஏதோ ஒரு கோழியை கவ்விக் கொண்டு வந்தது.

அது உன்னுடையது என்று தெரியாமல் தின்று விட்டேன்" என்றான்.

அதற்கு ஷியாம், "தனராஜ்! பூனை கடித்த கோழியை நீ தின்ன மாட்டாய்! என் கோழியைத் திருப்பிக் கொடு அல்லது நான் ராஜாவிடம் சென்று முறையிடுவேன்" என்றான்.

ராஜாவின் பெயரைக் கேட்டதும்பயந்துபோனான் தனராஜ்!

ஏனெனில் அந்த ஊர் ராஜா ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் பார்க்காமல் நியாயமான தீர்ப்பு வழங்குபவர்!

அதனால், வீட்டுக்குள்ளிருந்து ஒரு வாத்தை எடுத்து வந்த அவன், "இந்தாப்பா ஷியாம்!

உன் கோழிக்குப் பதிலாக இந்த வாத்தை வைத்துக் கொள். தயவு செய்து ராஜாவிடம் போகாதே!" என்று கெஞ்சினான்.

ஷியாமும் வீண் சண்டை வேண்டாம் என்று வாத்தைப் பெற்றுக்கொண்டான்.

அதை கண்ணுங்கருத்துமாகத் தீனி இட்டு வளர்க்க, அதுவும் முட்டைகள் இடத் தொடங்கியது.

ஒருநாள் இரவு கனத்த மழை பெய்ய, ஒரு சாமியார் தனராஜின் வீட்டுக் கதவைத் தட்ட, அவரை தனராஜ் திட்டியனுப்பினான்.

அடுத்ததாக அவர் ஷியாமின் வீட்டுக் கதவைத் தட்ட, அவன் உடனே கதவைத் திறந்து அவரை குடிசையினுள்ளே அனுமதித்தான்.

மழையில் நனைந்திருந்த அவருக்கு மாற்றுடை தந்தான்.

பசியாக இருந்த அவருக்கு, .அன்று வாத்து இட்டிருந்த முட்டைகளை வேக வைத்து உணவளித்தான்.

இதைக் கண்டு மகிழ்ந்த சாமியார். "மகனே! எனக்குப் புகலிடம் அளித்து உணவமளித்த உனக்கு நன்றி! நீ தந்த முட்டைகள் சுவையாயிருந்தன.

இந்த முட்டைகளையிட்ட வாத்தைக் காட்டு!" என்றார்.

உடனே, அவன் வாத்தை எடுத்து அவரிடம் தர, அவர் வாத்தை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

"மகனே! கடவுள் உனக்கு அருள் புரிவார்!" என்று வாத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அப்போது மழை நின்று விட்டதால், சாமியார் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினார்.

மறுநாள் ஷியாமுக்கு ஒரு பேரதிசயம் காத்திருந்தது. அவனுடைய வாத்து தங்க முட்டையிட்டிருந்தது.

ஷியாமினால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. இது அந்த சாமியாரின் மகிமைதான் என்று புரிந்து கொண்டான்.

அது மட்டுமல்ல! அந்த வாத்து தினமும் தங்க முட்டைகள் இட ஆரம்பித்தது. ஷியாமின் வறுமையும் நீங்கியது. செல்வம் குவியத் தொடங்கியது.

ஒருநாள், ஷியாமின் வாத்து தங்க முட்டையிடுவதை பக்கத்து வீட்டு தனராஜ் ஒளிந்திருந்து பார்த்து விட்டான்.

அதனால் பொறாமை அடைந்து அந்த வாத்தை எப்படியாவது தான் கைப்பற்ற நினைத்தான்..........

(தொடரும்)

## 04.2014 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு. 648 - ஆரம்பகால சூரிய கிரகணம் கிரேக்கர்களால் பதியப்பட்டது.
- 1782 - தாய்லாந்து மன்னன் டாக்சின் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டான். முதலாம் ராமா மன்னனாக முடி சூடினான்.
- 1814 - நெப்போலியன் பொனபார்ட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரிச்மண்ட் நகரில ஏற்புட்ட தோல்வியின் பின்னர் கூட்டமைப்பின் இர்ராணுவத்தினர் தமது கடைசிச் சமரை வடக்கு வேர்ஜினியாவில் நடத்தினர்.
- 1896 - 1,500 ஆண்டுகளாக ரோம் பேரரசர் முதலாம தியோடோசியசினால் தடைசெய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதற்தடவையாக கிரேக்கத்தின் ஏதன்ஸ் நகரில் ஆரம்பமாகின.
- 1917 - முதலாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1919 - மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியா மற்றும் கிரேக்கத்தை ஜேர்மனி முற்றுகையிட்டது.
- 1965 - "ஏளி பேட்" (Early Bird) என்ற தொடர்பாடற் செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.
- 1973 - பயனியர் 11 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1994 - ருவாண்டா மற்றும் புருண்டி ஜனாதிபதி பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து ருவாண்டாவில் இனப்படுகொலைகள் ஆரம்பமானது.
- 1998 - இந்தியாவைத் தாக்கக்கூடியதான நடுத்தர ஏவு கணைகளை பாகிஸ்தான் சோதித்தது.
- 2005 - குர்தியத் தலைவர் ஜலால் தலபானி ஈராக் ஜனாதிபதியானார்.

### பிறப்புகள்

- 1815 - மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (இ. 1876
- 1901 - பியர் ஜார்ஜியோ ஃபிராசாதி, இத்தாலிய ஆர்வலர் (இ. 1925)
- 1928 - ஜேம்ஸ் டூயி வாட்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1963 - ராஃபாயெல் கொறேயா, ஈக்குடோர் நாட்டின் ஜனாதிபதி

### இறப்புகள்

- 1199 - இங்கிலாந்தின் முதலாம் ரிச்சார்ட் (பி. 1157)
- 1520 - ராபியேல் சான்சியோ, இத்தாலிய ஓவியர் (பி. 1483)
- 1528 - ஆல்பிரெஃக்ட் டியுரே, ஜேர்மனிய ஓவியர் (பி. 1471)
- 1971 - இகோர் ஸ்ட்ராவின்ஸ்கி, உருசிய-அமெரிக்க இசையமைப்பாளர் (பி. 1882)
- 1992 - ஐசாக் அசிமோவ், உருசிய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1920)
- 2011 - [illegible] தமிழ்த் திரைப்பட நடிகை (பி. 1952)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

### யானை ஊற்று.

வலது பக்கச் சரிவில் இறங்கத் தொடங்குகிறோம். இப்போது வருவது யானை ஊற்று. சமதரையில் இருந்து நடந்து செல்கையில் வழியெங்கும் முள்ளம்பன்றி முள் சிதறிக் கிடந்தது.

அசல் பிளாஸ்டிக் அல்லது பைபரால் செய்த நீண்ட கூர்மையான குச்சி போன்ற பொருள்.

தனக்கு ஆபத்து ஏற்பட்டால் தன்னை எதிரியிடமிருந்து காத்துக்கொள்ள உடலைச் சுருக்கிக் கொள்ள, முள்ளம் பன்றியின் உடலிலிருந்து முட்கள் கூர்மையான ஈட்டி போல எதிரியின் மேல் பாயுமாம். அந்த முள் வீச்சின் எதிரில் நின்றால் அவ்வளவுதான். எதிரி சின்னாபின்னமாகிவிடும்.

கையில் கிடைத்த முள்ளம்பன்றி முள்ளை பரிசோதித்துவிட்டு தூக்கியெறிந்தோம். காலில் குத்திவிடக் கூடாது அல்லவா? ஒருசிலர் இந்த முட்களை பத்திரப்படுத்தத் தொடங்கினர்.

அதனைக் கவனித்த நாகராஜ், முள்ளம்பன்றி முள்ளை எல்லாம் வீட்டில் வைக்கக்கூடாது. கஷ்டத்தை உண்டாக்கும். பார்த்துவிட்டுத் தூக்கியெறிந்து விடுங்கள் என்று கூறவே, முட்களைப் பத்திரப்படுத்தியவர்கள் அதனைத் தூக்கியெறிந்தனர்.

இதோ யானை ஊற்று வந்து விட்டது. சர்ரென்று திரும்பிய திருப்பத்தில் வற்றிய நீரோடையும் வற்றாத சுனையொன்றும் காணப்பட்டது.

வழியெங்கும் யானையின் புதிய சாணம் காணப்பட்டதால் சற்று முன்னர் தான் இங்கு யானைகள் வந்து சென்றிருக்க வேண்டும் என்பதை உணர்ந்தோம்.

இது ஆபத்து நிறைந்த பகுதி. அமாவாசை போன்ற நாட்களில் மனித நடமாட்டத்திற்காக காட்டிற்குள்ளே சென்று விடும் யானைகள், நீரருந்த மட்டும் இந்த இடத்திற்கு வருமாம். மற்ற நாட்களில் மனிதர்கள் இந்த இடத்திற்கு வரமுடியாதாம். நாகராஜ் தெரிவிக்கிறார்.

மழைக்காலங்களில் இங்கிருக்கும் ஓடையில் நீர் சென்றாலும் யானைகள் இந்த ஊற்றில் மட்டுமே நீரருந்திச் செல்லுமாம். கடுமையான கோடையில்கூட இந்த சுனை நீர் வற்றுவதில்லையாம்.



காராம்பசுத்தடம்

சதுரகிரியில் காலாங்கி நாதர் ஆசிரமத்தில் தங்கியிருக்கும் அவரது சீடர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை நிச்சயிக்கப்பட்டிருந்தது. விறகு எடுத்து வர ஒருவர், சமையல் செய்ய ஒருவர், துணி துவைக்க ஒருவர், குடிநீர் எடுத்து வர ஒருவர் என்று சீடர்கள் கடமைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

அன்று சூரசேனன் என்பவனுக்கு தண்ணீர் கொண்டு வரும் முறை. ஆசிரமத்திற்கு நெடுந்தூரத்தில் இருக்கும்

## ஆன்மீகம் 84

கானாற்றைக் கண்டு, தண்ணீர் எடுக்க விரையும்போது யானைக்கூட்டம் ஒன்று தண்ணீர் அருந்த வரவே அங்கிருந்த மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டான்.

கூட்டமாக வந்த யானைகள், ஆற்றில் ஓடும் நீரை அருந்தாமல் ஆற்றின் கரையிலேயே ஓர் ஊற்று உண்டாக்கி அதில் ஊறிய நீரை அருந்திச் சென்றன.

சூரசேனனுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்! ஆறு நிறைய நீர் சென்றாலும் இந்த யானைகள் ஏன் இவ்விதம் செய்தன என்று யோசித்த சூரசேனன் அதற்கு விடை தெரியாததால் வந்த வேலையை முடிக்கக் கருதி ஆற்றில் நீர் மொள்ளச் சென்றான்.

அப்போது அவனெதிரே புலி ஒன்று பாயத் தயாராகவே, சட்டென்று தன் குருநாதரை நினைத்து வணங்கவே அவனது கையில் ஓர் அம்பும் வில்லும் வந்தது. சூரசேனன் வில்லில் நாணேற்றும் பொழுதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

பாய வந்த புலி முனிவராக உரு மாறி நின்றது. சூரசேனா! நான் வேங்கையல்ல, அதனால் நீ பயப்பட வேண்டாம். (தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**03** நாவற் பழத்தை ஊதிவிட்டுச் சாப்பிடும் ஒரு மாட்டிடையன் மாதிரி...

நான் என்பது இலக்கணத்தில் ஒருமை; நடைமுறையில் பன்மை.

என்னைப் பொறுத்தவரையில் நான் என்பது இந்தச் சமூகம் பங்களித்து நிரப்பிய பாத்திரம்.

சின்னஞ்சிறு வயது முதல் என் இதயக் குளத்தின் மேற்பரப்பில் அலைகள் கிளப்பியவர்கள்- சலனம் செய்தவர்கள்- பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் பலர்.

அந்தப் பலரில் சிலர் மட்டும் இதில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த முயற்சியின் நோக்கம் தனி மனிதர்களின் குணாதிசயங்களை கொண்டாடுவதன்று.

என்னைப் பாதித்த பெரு மக்களை புள்ளிகளாய்க்கொண்டு என் சமகால சமூகக்கோலம் வரைந்து காட்டுவதே இதன் நோக்கம்.

இன்னொரு வகையில் சொல்வதானால் இது நன்றி பாராட்டு ஒரு நாகரிக வடிவம்.

பாறையாய் கிடந்த என்னை இலக்கியவாதியாய் இளக்கியவர்கள்- தமிழுக்கு என்னைப் பழக்கியவர்கள்- இலட்சியங்களை எனக்குள் விதைத்தவர்கள்- என் மெல்லிய புலன்களை மயிலிறகால் வருடியவர்கள்- வாழ்வின் முக்கியமான நிமிடங்களில் என்னை முடிவெடுக்க வைத்தவர்கள்- சமுத்திரம் நிலப்பரப்பை பாதிப்பது மாதிரி என் சமகாலத்தையே பாதித்தவர்கள்- சராசரி மனிதர்களாய் இருந்தும் என்னுள் சரமழையாய் விழுந்தவர்கள்- இவர்களெல்லாம் எனது சின்னத் தூரிகையில் சித்திரமாகி இருக்கிறார்கள்.

இந்த ஜீவனுள்ள மக்களை சிந்திப்பதன் முக்கிய விளைவுகள் மூன்று:

சில மாமனிதர்களின் சமூகப் பங்கை இதில் சத்தமில்லாமல் மதிப்பிட முடிகிறது.

நசிந்துபோன பல இதயங்களுக்கு இதில் நம்பிக்கை பிறக்கிறது.

என் இறந்த காலத்தில் மீண்டும் வசித்துவர எனக்கொரு வசதி கிடைக்கிறது.

என்னைப் பாதித்த பலரிடமும் நான் நல்லவை மட்டுமே கண்டிருக்கிறேன்.

மண்ணில் விழுந்த நாவற் பழத்தை ஊதி விட்டுச் சாப்பிடும் ஒரு மாட்டிடையன் மாதிரி ஒவ்வொரு மனிதரிலும் அற்புதமான அம்சங்களை மட்டுமே நான் ஆராதிக்கிறேன்.

நல்லவை எண்ணும் போதும் நல்லவை எழுதும் போதும் மட்டுமே நெஞ்சில் நிம்மதி நிறைந்து நிற்கிறது.

காழ்ப்புகள்- கட்சிகள்- மாச்சரியங்கள்- மதங்கள்- நசிந்து கொண்டிருக்கும் நல்லுணர்வுகள் இவைகளால் சர்வதேச மனிதம் சரிந்து கொண்டிருக்கிற ஒரு மோசமான நூற்றாண்டின் முடிவிலும் ஒரு துன்பமான நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாம் இருக்கிறோம்.

அன்பை விதைப்பதும் புதுப்பிப்பதும் மனிதர்களை மதிப்பதுமே இந்த நூற்றாண்டின் தேசியத் தேவை.

அதை இது செய்யலாம்;

செய்யும்.

வைரமுத்து



## பொன்னையாத் தேவர்

...வெகுநாட்களாகவே எனக்கு விளங்காதது உங்கள் குளியல் முறைதான்.

நீங்கள் குளிப்பதே ஒவ்வொரு நாளும் நடக்கும் ஓரங்க நாடகம்.

உங்களுக்குப் பெரும்பாலும் மாலைக்குளியல்தான்; உழைப்பாளிகளுக்கு ஏது காலைக்குளியல்?

வெந்நீர் கொதிக்கவிட்டு, வாசலில் அண்டா வைத்து, உங்கள் பதத்திற்கு நீங்களே அளாவி, அன்று பயன்படுத்திய துண்டை, கோவணம் கட்டி நீங்கள் குளிக்க ஆரம்பித்தால்- ஒரு தாமஷ் பார்க்க மனசு தயாராகும்.

சொம்பில் வெந்நீர் மொண்டு கொண்டு ஓரிடத்தில் நிற்காமல் ஓடுவீர்கள்.

ஓடிக்கொண்டே ஊற்றுவீர்கள்; ஊற்றிக் கொண்டே ஓடுவீர்கள்.

வாசல் முழுக்க வலம் வருவீர்கள்.

ஏன் இந்த ஒலிம்பிக் குளியல் என்று எனக்கு ஒவ்வொரு நாளும் யோசனைதான்.

பாட்டியைக் கேட்டுக் கடைசியில் கண்டுபிடித்தேன்.

குளிக்கிற தண்ணீர் விரயமாகக் கூடாதாம். அது வாசலின் புழுதி படிந்து போய்ச் சேர வேண்டுமாம்! அதற்குத்தான் அந்த ஓட்டமாம்.



தனக்கும் வாசலுக்கும் சேர்த்துக் குளித்தவர் நீங்களாய்த்தானிருக்கக் கூடும் என்று நினைத்துக் கொண்டேன்.

என் மீதுதான் உங்களுக்கு எத்தனை பாசம்!

கடவுள் பேர் சொன்னால் அழுதுவிடும் நாயன்மார் மாதிரி என் பெயரை யார் சொன்னாலும் அவசரமாய் அழுதுவிடுவீர்கள்.

சலவைக்குப் போடும் சட்டைப் பையோடு எது போனாலும் கவலைப்பட மாட்டீர்கள்; கூடவே நான் போட்ட கடிதமும் போய்விட்டால் குலுங்கி அழுதுவிடுவீர்கள்.

எத்தனை நாள்தான் இந்தக் கூட்டுக்குள் இருப்பீர்கள்; என் வீட்டுக்கு வாருங்கள் என்று சென்னைக்கு அழைத்தேன்; நீங்கள் மறுத்தீர்கள். வேண்டாம் உன் வீட்டில் எச்சில் துப்ப எனக்கு வசதியில்லை!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நிலைப்பாட்டை அரசாங்கம் பிழையாக புரிந்து கொண்டுள்ளது-ஐ.தே.க

**இந்தியாவின் நிலைப்பாட்டை அரசாங்கம் பிழையாக புரிந்து கொண்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித வுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் போது இந்தியா வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இந்தியா வாக்களிப்பில் பங்கேற்காமையை இலங்கை அரசாங்கம் பிழையாக புரிந்து கொண்டு செயற்பட்டு வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு தடவைகள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் உறங்கியதனைப் போன்று, இந்த தடவையும் நீண்ட உறக்கத்தில் இருக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர தெரிவித்துள்ளார.

எனினும் யுத்தம் இடம் பெற்ற காலத்தில் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


இந்த விசாரணைகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒத்துழைப்பு அவசியமானது என வலியுறுத்தியுள்ளார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு சரியானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச நாடுகளின் தலையீடுகளை தவிர்க்கும் வகையிலான யோசனையையே இந்தியா இலங்கைக்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு அமையவே இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அரசாங்கம் உரிய முறையில் அமுல்படுத்த தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித வுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விடவும் வாக்களிப்பில் பங்கேற்காதவர்கள் மற்றும் எதிராக வாக்களித்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்ற அரசாங்கத்தின் வாதம் முட்டாள்தனமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள், சிவில் விவகாரங்களில் இராணுவத்தின் தலையீடு, ஊடகவியலாளர்கள, மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் போன்றவர்கள் மீது தாக்குதல்கள், சட்டம் ஒழுங்கு நிலைமையில் தொடர்ச்சியான வீழ்ச்சி போன்றன சர்வதேச தலையீடுகளை மேலும வலுப்படுத்தும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை அமுல்படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய பிரதமர் மனமோகன் சிங்கிற்கு வாக்குறுதி அளித்திருந்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)





புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது வசந்த மண்டப பூசை இடம்பெறுவதையும் சுவாமி தேரில் ஆரோகணிக்க சித்திரத்தேர் இழுக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை அடிப்படை மனிதவுரிமை மீறலாகும்

### கூறுகின்றார் சட்டத்தரணி ரட்னவேல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து செயற்படுகின்ற 16 தமிழ் அமைப்புகளைத் தடைசெய்துள்ள இலங்கை அரசாங்கம், இந்த அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் என கூறப்படுகின்ற வெளிநாடுகளில் வசிக்கின்ற 424 பேரை இலங்கைக்குள் பிரவேசிப்பதைத் தடைசெய்திருக்கின்றது.

இது தொடர்பில் அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது. அந்த அறிவித்தலில் அவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பெயர்ப் பட்டியலில் 30 பேர் வரையிலான பெண்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவித்தல் குறித்து கருத்து வெளியிட்ட மனித வுரிமை விவகாரங்களில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்னவேல், இது நாட்டின் சட்ட விதிகளுக்கு அமையாதது என்று குறிப்பிட்டார்.

அத்துடன் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் ஒருவரின் அடிப்படை மனிதவுரிமையை மீறுவதாக அமைந்திருக்கிறது என்றும் கூறுகிறார்.

சர்வதேச விசாரணைகள் தேவையில்லை. நாங்கள் உள்நாட்டில் சகவாழ்வையும நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துகிறோம். அதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களையும், அமைப்புகளையும் வரவேற்கிறோம் என்று கூறிக்கொண்டு, இத்தகைய அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலம் முன்னுக்குப் பின் முரணாகவே அரசாங்கம் செயற்படுகிறது.

எனினும், பயங்கரவாதம் மீண்டும் தலையெடுக்கக் கூடாது, மீண்டும் நாட்டில் ஒரு யுத்தம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (2)

## விசா முடிவடைந்த நிலையில் 94 சுற்றுலாப்பயணிகள் தடுத்துவைப்பு

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்து விசா காலம் முடிவடைந்த நிலையில் தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகள் 94 பேர் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சுற்றுலா விடுதிகளில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 384 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளில் பலர் நாடு கடத்தப்படடுள்ளனர் என திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா விசாவில் வரும் அதிகளவான வெளிநாட்டவர்கள், தொழில் செய்யும் நோக்குடன் வருகை தருவதாகவும், இதனால் தங்கள் விசாக்காலம முடிவடைந்தும் நீண்டகாலம் தங்கியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது, ஆப்கானிஸ்தான், சீனா, பாலி தீவுகள், நைஜீரியா, பப்புவா நியூகினியா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 22 சுற்றுலா பயணிகள் மிரிஹான பிரதேசத்தில் அமைந்துள்ள தடுப்பு மையத்தில் காவலில் வைககப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கக் கூடிய வேட்பாளர ஒருவர் தேவை என கோட்டே ஸ்ரீ நாக விஹாரையின பீடாதிபதி மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் ஆறு மாத காலம் பதவி வகித்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். அதன் பினனர் அதிகாரங்கள் பாராளுமன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக இயங்காமை மிகவும் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நீதித்துறைக் கட்டமைப்பு சுயாதீனமற்ற முறையில் காணப்படுகின்றமை மிகவும் சிக்கல் மிகுந்தது என அவர் குறிப்பிடடுள்ளார்.ஜனாதிபதி சட்டத்திற்கு கட்டுப்படாத காரணத்தினால் அவர் எந்தக் குற்றச் செயல்களிலும் ஈடுபட முடியும் என்ற நிலைமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றின் பெரும்பான்மையானவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க பாராளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதற்கு ஆதரவாகவே பெரும்பான்மையானவர்கள் வாக்களிப்பார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## தமிழர்களின் முன்னேற்றத்திற்காக ஜெனீவா தீர்மானம் புறக்கணிப்பு

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுஜாதாசிங் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் ரீதியான முடிவு காரணமாகவே இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்திற்கு இந்தியா வாக்களிக்கவில்லை என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் முன்னேற்றம் குறித்து முக்கியமாக கவனம் செலுத்தியே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என அமைச்சின் செயலாளர் சுஜாதாசிங குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாவில் இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது என்ற முடிவு இந்திய வெளிவிவகார அமைச்சினால் எடுக்கப்பட்டது என அமைச்சர் சிதம்பரம் கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அமைச்சர் சிதம்பரத்தின் கருத்தை நிராகரித்துள்ள சுஜாதா சிங், இந்திய மத்திய அரசாங்கம் எடுத்த அரசியல் ரீதியான முடிவுக்கு அமையவே இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி முடிவின் மூலம் இந்திய அரசாங்கம், இலங்கை தமிழ் மக்களை புறக்கணித்துள்ளதாக வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானது எனவும் இந்திய அரசாங்கம், இலங்கை தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக சகல சந்தர்ப்பங்களிலும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது எனவும் சுஜாதாசிங் தெரிவித்துள்ளார.

தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக இந்திய அரசாங்கம், இலங்கையில் செயற்படுத்தி வரும் வீடமைப்பு திட்டமானது உலகில் மேற்கொள்ளப்பட்டு வரும் மிகப் பெரிய திட்டமாக கருத முடியும் எனவும் அவர் கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்பில் சிவாஜியும் கமலும் ராமதாஸிடம் பிச்சை வாங்க வேண்டும்

## வீரமணி விமர்சனம்



தி.மு.க. கூட்டணியின் சூறாவளி சுற்றுப் பயண பிரமுகர்களில் ஒருவர் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி. தமிழகம் முழுக்க சுற்றுப் பயணம் புறப்பட இருந்த நிலையில் சென்னை பெரியார் திடலில் அவரைச் சந்தித்தோம்.

“திராவிடர் கழகம் தேர்தலைப் பற்றி கவலைப்படாத இயக்கம். ஆனால், நீங்கள் தி.மு.க-வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யக் புறப்பட்டு விட்டீர்களே?“


“இந்தத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல். காங்கிரசுக்கு எதிரான அலையை முழுமையாகப் பயன்படுத்தி, ஒரு இந்துத்துவ ஆட்சயை ஏற்படுத்த ஆர்.எஸ். எஸ். அமைப்பு நேரடியாகக் களத்தில் குதித்திருக்கிறது. இதுவரையில் பின்னணியிலேயே இருந்த ஆர். எஸ். எஸ். அமைப்பு, நேரடியாக முன்னால் நிற்கும் பி.ஜே.பி-யை, “பின்னால் போங்கள் நாங்களே பொறுப்பேற்றுக்கொள்கிறோம்' என்று சொல்லி களத்தில் இறங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த இந்துத்துவ கும்பலை வீழ்த்த வேண்டியிருக்கிறது. அதற்கான பிரசாரமும் இது.“

**“நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி அலை வீசுவதாக சொல்கிறார்களே?“**

“நாடு முழுவதும் மோடி அலை வீசுகிறது என்றால், ஏன் இத்தனை ஊர்களுக்கு அலையாய் அலைகிறார். கேரளாவில் மஞ்சேரி என்ற தொகுதியில்தான் தமிழகத்தைச் சேர்ந்த கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் போட்டியிடுவார்கள். தேர்தல் சமயத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்வதோடு சரி பின்னர், அங்கு செல்ல மாட்டார். தமிழகத்தில்தான் பிரசாரம் செய்வார். அவர், பலமுறை வெற்றிபெற்றார். அதுதான் அலை. ஆனால், நரேநதிர மோடி காலையில் வட கிழக்கு மாநிலங்களில் தேர்தல் பிரசாரம் செய்கிறார். மாலையில் வண்டலூர் வருகிறார். நாடு முழுவதும் மோடி அலை வீசவில்லை. அவர்தான் ஆட்சியை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று அலை யாய் அலைகிறார். மோடி அலை வீசவில்லை. அவர்தான் வலை வீசுகிறார்.“

**“தமிழகத்தில் பி.ஜே.பி., தே.மு,தி.க., பா.ம.க, ம.தி.மு.க. கூட்டணி சாதிக்குமா?“**

“அரசியலில் பொதுவாக இரட்டை வேடம் என்று விமர்சிப்பது



உண்டு. ஆனால், பல வேடங்கள் தரிப்பதில் சிவாஜி கணேசன், கமல்ஹாசன்கூட ராமதாஸிடம் பிச்சை வாங்க வேண்டும். பா.ம.கவின் 25ஆவது ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு 16.7.13 அன்று வெளியிட்ட அறிக்கையில், “தேசியக் கட்சிகள், திராவிடக் கட்சிகள் இல்லாத கூட்டணி அமைப்போம்' என்று கூறினார். அதற்குள் எப்படிப்பட்ட பல்டி அடித்துவிட்டார். பி.ஜே.பி. தேசியக் கட்சி இல்லையா? தே.மு.தி.க., ம.தி.மு.க. கட்சிகள் திராவிடக் கட்சிகள் இல்லையா? திராவிடம் என்றால் கெட்ட வார்த்தை என்று சொன்னவர், இப்போது கெட்டுப்போனது ஏன்?

ஈழத் தமிழர்கள் வாழ்வைக் காப்பாற்றிட மோடியைத் தூக்கிச் சுமக்கத் தோள்களைத் தயாரித்துக்கொண்டுவிட்டார்தோழர்வைகோ. பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் சுகன்யா என்ற போர்க்கப்பலை இலங்கைக்கு வாஜ்பாய் கொடுத்தார். மத்தியப்பிரதேச சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கழகத்தை திறந்து வைக்க ராஜபக்ஷவை சிவப்புக் கம்பளம் கொடுத்து வரவேற்றது அந்த மாநிலத்தை ஆளும் பி.ஜே.பி. அரசு தான். அந்த விழாவுக்கு வந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க 1,000 தொண்டர்களை பஸ்களில் அழைத்துச் சென்ற வைகோவைத் தடுத்து நடுவழியில் நிறுத்தியது, ஞாபகம் இல்லையா? ஈழத் தமிழர்களைக் காப்பது இருக்கட்டும் மதவாதத்தை எதிர்ப்பது ம.தி.மு.க. கொள்கை இல்லையா? தோளில் தொங்கும் நீண்ட கறுப்புச் சால்வையும் அவரது நாக்கு உச்சரிக்கும் பெரியார் அண்ணா பற்றிய பேச்சுக்களும் கூட மனச்சாட்சியை கொஞ்சம் கூட உறுத்தாதா? சேது சமுத்திரத் திட்டம் என்னால் தான் வந்தது என்று மார்தட்டிய வைகோ அதையும் கைவிட்டுவிட்டாரே? தமிழகத்தின் ஆதரவு இல்லாமலேயே பி.ஜே.பி. 272 இடங்களுக்கு மேல் ஜெயிக்கும் என்று ராஜாவை விஞ்சிய ராஜ விசுவாசியாக வைகோ பேசுகிறார். புரட்சிப் புயல் புஸ்வாணம் ஆகிவிட்டது.

விஜயகாந்த் கடைசி வரை யாரோடு கூட்டணி என்பதை சொல்லாமல் எல்லா கட்சிகளிடமும் கையாட்டிக் கொண்டிருந்தார். கார் ஓட்டுகிறவர்கள் திரும்புவதற்காக இன்டிகேட்டரை போடுவார்கள். இடது பக்கமாக இன்டிகேட்டரைப் போட்டார் விஜயகாந்த். உடனே, அங்கே உள்ள காவலர்கள் இங்கே கையைக் காட்டுவதற்குத் தயாரானார்கள். உடனே அவர், “இல்லை, இல்லை... நான் வலதுபுறமாக செல்கிறேன்' என்று கையை வலது புறம் நீட்டினார். ஆனால், திரும்பாமல் நேராகவே சென்றுவிட்டார்.

அதனால், என்ன விளைவுகள் ஏற்படும் என்று இலக்கு தெரியாமல் சென்றுள்ளார். இந்தக்கூட்டணிக்குத் தலைமை தாங்கும் பி.ஜே.பி., விஜயகாந்த் கட்சிக்கு ஒதுக்கியதை விட குறை வான தொகுதிகளை வைத்து கூட் டணிக்குத் தலைமை தாங்குகிறது. வேடிக்கையான வினோதக் கூட் டணி. கொள்கை முரண்பாடுகள் நிறைந்த இந்த அணி, தேர்தலில் தேறாது என்பது மட்டும் உறுதி.“

“அமைதி, வளம், வளர்ச்சி என்ற கோஷத்தை முன்வைத்து 40 தொகுதிகளும் நமதே என்கிறாரே ஜெயலலிதா?“

“எங்கே அமைதி? யாருக்கு வளம்? எப்படி வளர்ச்சி? இது எதுவுமே தமிழகத்தில் அவர் செய்யவில்லையே! அவரது ஆட்சியில் சாதனைகள் இல்லை. வேதனைகள் மட்டும்தான். அது இந்தியா முழுக்கப் பரவ வேண்டுமா?“

வீரமணியின் வான் புறப்பட்டுவிட்டது.

ஜூனியர் விகடன்

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடைந்தது ஆடம்பரக்கப்பல்

அம்பாந்தோட்டை மாகம்புர ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவதில்லை என எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன. அமாதியா என்ற ஆடம்பர கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடைந்துள்ளது.

மக்களின் பணத்தில் பல பில்லியன் ரூபா செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த துறைமுகத்தினால் நாட்டுக்கு எந்த ஆதாயமும் இல்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

இந்நிலையில், கப்பல்கள் மூலம கொண்டு வரப்படும் வாகனங்கள் கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்டு வந்ததுடன், வாகனங்களை ஏற்றி வரும் கப்பல்களை அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு திருப்பியது.

இதனால் வாகனங்களை அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்புக்கு கொண்டு வர வேண்டியுள்ளதாக வாகன இறக்குமதி நிறுவனங்கள் மேலதிக பணத்தை செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குகப்பல்கள் வருகின்றன என காட்டுவதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதனடிப்படையில், 800 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிய அமாதியா என்ற ஆடம்பர கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடைந்துள்ளது.

இதில் பயணம் செய்த ஜேர்மனிய சுற்றுலாப்பயணிகள் உடுவெல யானைகள் சரணாலயம் உட்பட ஏனைய சுற்றுலா பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை முன்னிட்டு தென் மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொண்ட விற்பனை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (2)

# குராம் ஷேக்கின் கொலை வழக்கு ஒத்திவைப்பு

பிரித்தானிய பிரஜை குராம் ஷேக்கின் கொலை மற்றும் அவரது ரஷ்ய நண்பியான விக்டோரியா அலெக்சான்ரோனோவா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த சம்பவம் இடம்பெற்ற ஹோட்டலின் முகாமையாளர் நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக நீதிமன்றிற்கு சாட்சியமளிக்காமையால் விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் தங்காலை பிரதேசசபை தலைவர் சம்பத்விதானபத்திரன உட்பட்டவர்கள்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

# இராசாவின் தோட்டம் வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இராசாவின் தோட்ட வீதிப் புனரமைப்புப் பணிகளை ஈ.பி.டி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் இராசாவின் தோட்ட வீதிப்புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டதுடன் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டவர்களுடனும் கலந்துரையாடினார்.

இவ்வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய யாழ்.மாநகரசபையின் நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் யாழ்.நகர இணைப்பாளர் துரைராசா இளங்கோ உடனிருந்தார்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை வெல்லுமா?



ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட 1373 தீர்மானத்துக்கு அமைவாக, வெளிநாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்கள் சார்பு புலம்பெயர் தமிழர் அமைப்புகளான 16 அமைப்புக்களை அரசாங்கம் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனம் செய்துள்ளது. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்ட பின்னணியில் தான் இந்த எதிர் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. ஆனால், அரசாங்கம் சொல்லும் காரணம் அதற்கு முரணானது. இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மீள் உயிர் கொடுக்க வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகள் சார்பு அமைப்புகள் முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமெரிக்காவினால் விவாதத்துக்கு விடப்பட்ட பின்னர், வடக்கில் விடுதலைப் புலிகளைத்தேடும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அரச படையினரின் இந்தத் தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், கெடுபிடிகள் எல்லாமே வடக்கில் போர்க்காலத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. கிழக்கிலும் அந்த நிலை மெல்ல மெல்ல உருவாக்கப்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்க முயன்றவர்கள் என்று சிலரைத் தேடும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

பலர் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையிலும், எவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்றுவிக்க முயன்றார்கள் என்றோ, அதன்மூலம் எதைச் சாதிக்க முயன்றார்கள் என்ற நம்பகரமான எந்தத் தகவல்களையும் அரசாங்கம் வெளியிடவில்லை. வடக்கில் தொடர்ந்து படைகளை நிலை நிறுத்தி வைத்திருப்பதற்கு வலுவான காரணம் ஒன்று தேவைப்படுவதாலேயே, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பரவலான கருத்துக்கள் உள்ளன.

இவையெல்லாம் வெறும் ஜெனிவாவை வைத்து மேற்கொள்ளப்படும் நகர்வுகளாகவே பார்க்கப்பட்டு வந்த நிலையில் இதனை ஒரு சர்வதேச விவகாரமாக அரசாங்கம் மாற்றத் தொடங்கியுள்ளதைக் கவனிக்கலாம். அதாவது, வடக்கில் அதிகரிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கெடுபிடிகளை வெறுமனே வடக்கில் படைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நகர்வாக மட்டுமன்றி, அதற்கு அப்பாற்பட்டதாகவும் அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது. வடக்கில் விடுதலைப்புலிகள் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளனர் என்பதை வெறும் பிரசாரமாக நியாயப்படுத்திக் கொண்டிருக்காமல், சர்வதேச அளவில் ஒரு பிரகடனமாக மாற்ற அரசாங்கம் முயன்றுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில், இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவும்கூட, பல சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலையெடுக்க முனைவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது விடுதலைகள் இயக்கத்தை வைத்து அரசாங்கம் சர்வதேச அளவில் மீண்டும் அரசியல் செய்யத் தொடங்கிவிட்டது என்பதை உறுதிப்படுத்தியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது தலையெடுக்க முனையும் விடுதலைப்புகளுக்கும் அவர்களின் ஆதரவுச் சக்திகளுக்கும் ஊக்குவிப்பாக இருக்கும் என்று ரவிநாத் ஆரியசிங்க் குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தம். இது விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக இடமளித்து விடாதீர்கள் என்றும் உறுப்பு நாடுகளுக்கு மறைமுகமாகச் சொல்லப்பட்ட செய்தி என்பதை மறுக்க முடியாது.

போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகளாகிவிட்ட நிலையில், அரசாங்கம் உருவாக்கிய அமைதியைக் குலைக்கும் எந்தவொரு வன்முறைச் சம்பவங்களும் நடந்திராத நிலையில், திடீரெனத் தோன்றியுள்ள இந்தச் சூழலின் அடிப்படையை சர்வதேச நாடுகள் அதிகம் புரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், மூன்று தசாப்தகால போருக்குள் இருந்து மீண்டுள்ள இலங்கை இன்னொருபோர்ச் சகதிக்குள் சிக்கிக் கொள்வதை எந்தவொரு நாடும் விரும்பாது என்பது மட்டும் உறுதி.

அமெரிக்கத்தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு இது கைகொடுக்கும் என்று அரசாங்கம் கருதியது. எனவே தான், விடுதலைப்புலிகளைக் காட்டி ஜெனிவாவில் அரசாங்கம் தன்னைச் சமாளித்துக் கொள்ளப் பார்த்தது. ஆனால், அந்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் இரண்டாவது கட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இப்போது அரசாங்கம் வீசியுள்ள தடை என்ற பாசக் கயிறு தனியே விடுதலைப் புலிகளின் எச்சங்களாக இருக்கும் சிலரையும் விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புகளையும் தான் குறிவைக்கிறது என்று கருதினால் அது தவறானது.

ஏனென்றால், இது ஒரு பரந்தளவிலான இராஜதந்திரத்துடன் கூடிய நகர்வு என்பதை மறந்து விடலாகாது. கிட்டத்தட்ட கலாநிதி றொகான் குணரத்ன போன்றவர்கள்தான் இதன் மூளையாக செயற்பட்டிருக்க வாய்ப்புக்கள் உள்ளன. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் அமைப்புக்களைத் தோற்கடிக்காதவரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசாங்கம் நிரந்தரமான வெற்றியைப் பெற்றுவிட்டதாக கூறமுடியாது என்பது தான், கலாநிதி றொகான் குணரத்ன போன்றவர்களின் நிலைப்பாடு.

அதற்கமையவே, விடுதலைப் புலிகளை சர்வதேச அரங்கில் எவ்வாறு ஓரம்கட்டி ஒழித்துக்கட்டியதோ அதுபோலவே புலம் பெயர் தமிழர் அமைப்புகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு அரசாங்கம் இந்த நகர்வில் இறங்கியுள்ளது. இது இலங்கை அரசியலில் போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரங்களில் புலம்பெயர் தமிழர்கள் செலுத்தி வரும் செல்வாக்கை அடியோடு பெயர்த்தெடுப்பதற்கான முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

போரில் வெற்றிபெற்ற அரசாங்கத்தால், தமிழர்களுடன் ஒரு நிரந்தர இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் புலம்பெயர் அமைப்புகளே என்ற கருத்து அரசாங்கத்திடம் ஊறிப் போயுள்ளது. உள்நாட்டில் தமிழர் அரசியலில் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்கும் அதிகமென்றே கூறலாம். அதற்கு அவர்களிடம் உள்ள நிதி வளமும் ஒருகாரணம். ஆனால், எல்லா வேளைகளிலும் உள்நாட்டிலுள்ள தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்களாக புலம்பெயர் தமிழர்கள் இருப்பதாகக் கூற முடியாது.

குறிப்பாக வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் புலம்பெயர் தமிழர்கள் முழுமையாக ஒத்துப் போயினர் என்று கூற முடியாது. ஆனால், தேர்தல் முடிபு புலம்பெயர் தமிழர்களை, கூட்டமைப்பை நோக்கி ஒன்றிணைத்துவிட்டது. உள்ளூர் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தி வந்தனர் என்பதை மறுக்க முடியாது.

ஏனென்றால், அவர்களின் அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அரசியல் கொள்கைகளை வலுப்படுத்திக் கொள்வதற்கும் வெளிநாட்டுப் பயணங்களுக்கும் அந்த ஆதரவு அவர்களுக்கு அவசியமாகத் தேவையானது. முக்கியமான 16 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பயங்கரவாத அமைப்புகளாக அரசாங்கத்தினால் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டுத் தமிழ் அரசியல்வாதிகளால் இந்த அமைப்புகளுடன் இனிமேல் எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்ளவோ, அவற்றிடம் இருந்து உதவிகளைப் பெறவோ முடியாது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அரச எதிர்ப்பு பிரசாரங்களில் ஈடுபடுவதையும் கூட இந்தத் தடை முடிவுக்கு கொண்டுவரும் என்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. அண்மைக்காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி மாகாணசபை, உள்ளூராட்சி உறுப்பினர்களும் கூட ஜெனிவா போன்ற வெளிநாட்டுத் தலைநகரங்களுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர்.

ஜெனிவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில், மாகாணசபை உறுப்பினர்கள் அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம், வலிவடக்கு உள்ளூராட்சிசபை உறுப்பினர் சஜீவன் போன்றோர் அரசாங்கத்துக்கு எதிரான உரைகளை நிகழ்த்தியிருந்தனர். இதுவும் அரசாங்கத்துக்கு ஒரு தொந்தரவாக மாறியிருந்தது. இத்தகைய எதிர்ப்புப் பிரசாரங்களுக்கு முடிபு கட்ட வேண்டும் என்றால், இவர்களுக்குப் பின்புலமாக உள்ள புலம்பெயர் தமிழர்களுடன் கொண்டுள்ள உறவுகளைத் துண்டிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதியது.

அதாவது, எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது தானாக அடங்கும் என்ற கோட்பாடு தான் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. போர்க் குற்றங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கும் இந்த புலம்பெயர் அமைப்புக்கள், அமெரிக்காவினது இப்போதைய தீர்மானத்தினால் திருப்தி கொள்ளவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தக் கடும்போக்கு வாதமும் கூட அரசாங்கம் கடும் நடவடிக்கையில் இறங்குவதற்குக் காரணமாக இருந்தது. என்னதான் அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்துக்கும் இந்தத் தடைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று நியாயம் கூறினாலும் உண்மை என்னவோ அதுவாகவே உள்ளது.

ஜெனிவாவில் அரசாங்கம் பந்தாடப்படுவதற்கு முக்கிய காரணம் புலம்பெயர் தமிழர் அமைப்புகளே என்று அரசாங்கம் கருதுகிறது. கனடா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளில் உள்ளூர் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தத்தக்கவர்களாக மாறத் தொடங்கியுள்ள புலம்பெயர் தமிழர்கள், தமது அரசியல் பலத்தை இலங்கை அரசுக்கு எதிராகத் திருப்பிவிடத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக இலங்கை மீதான பொறுப்புக்கூறல் அழுத்தங்கள் தீவிரமடைந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

குறிப்பாக ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை வெற்றிபெற வைப்பதற்காக தடைசெய்யப்பட்ட இந்தப் புலம்பெயர் அமைப்புக்கள் பலவும் வெளிப்படையான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டன. இவையெல்லாவற்றையும் மனதிற்கொண்டே இந்தத் தடையின் மூலமாக அரசாங்கம் ஒட்டுமொத்த புலம்பெயர் அமைப்புகளையும் நசுக்க முனைகிறது. இதற்குள் தீவிரப் போக்குள்ள அமைப்புகளும் உள்ளன. மென்போக்குள்ள அமைப்புகளும் உள்ளன. இது புலம்பெயர் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நிரந்தரப் பகை ஒன்று மூள்வதற்கான ஏதுநிலையை உருவாக்கியுள்ளது. எப்போதும் ஒரு நடவடிக்கையின்போது ஒரு இடைவெளி விடப்படுவதுண்டு. ஆனால், இங்கு அந்த வெளியை விட்டு வைக்க அரசாங்கம் விரும்பவில்லை.

கடும்போக்கு, மென்போக்கு என்று பாராமல் எல்லா புலம்பெயர் அமைப்புக்களையுமே பயங்கரவாத அமைப்புகளாக பட்டியலிட்டுள்ளது. இதனால், இந்த அமைப்புகள் வேறு பெயர்களில் இலங்கை அரசுக்கு எதிரான பரப்புரைகளை இன்னும் தீவிரப்படுத்த முனையலாம். ஆனால், அரசாங்கம் எதிர்ப்பார்ப்பது என்னவென்றால், தடைசெய்யப்பட்ட அமைப்புகள் தமிழர்களுக்காக எதைக் கூறினாலும் அதனை பயங்கரவாத அமைப்புகளின் கருத்தாக வெளிப்படுத்தி முடக்கி விடலாம் என்பதைத் தான்.

எவ்வாறாயினும் புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்தாமல் ஒரு நிரந்தர அமைதியை உருவாக்க முடியாது என்ற கருத்து இலங்கை அரசாங்கத்துக்குள்ளே கூட இருக்கிறது. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அண்மையில் புலம்பெயர் தமிழர்களுடன் சென்று பேச்சு நடத்தியிருந்தது. அரசாங்கமும் கூட பின் கதவால் அவர்களுடன் தொடர்பைப் பேணவே முயன்றது. ஆனால், ஜெனிவாவை நோக்கிய புலம்பெயர் தமிழர்களின் போராட்டத்தினால் இலங்கை அரசாங்கம் அங்கு எதிர்கொண்ட நெருக்கடிகள் இத்தகைய முடிவுக்கு இட்டுச்சென்றுள்ளன.

இந்தத் தடையின் மூலம் அரசாங்கம் உள்ளூரில் உள்ள தமிழர்களை தனித்துவிடப்பட்ட நிலைக்கு கொண்டு வரலாம் என்றும் ஒரு தீர்வுக்கு இணங்க வைக்க முடியும் என்றும் நம்பலாம். ஆனால், புலம்பெயர் தமிழர்களுக்கும் இங்குள்ள தமிழர்களுக்கும் உள்ள தொடர்புகளை அரசாங்கத்தினால் முற்றாக அறுக்க முடியாது. அவர்களின் குடும்ப உறவுகள் இங்குதான் உள்ளனர். அவர்களின் சொத்துக்கள் இன்னமும் இங்கேயே உள்ளன.

இந்தத் தடையின் மூலம் இந்த உறவுகளை பணயம் வைத்த தமக்கு எதிரான வெளிநாட்டு அழுத்தங்களின் தீவிரத்தை குறைக்க முனைகிறது அரசாங்கம். ஆனால், இது எந்தளவுக்குப் பலனளிக்கும் என்று கூற முடியாது. ஏனென்றால் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு சர்வதேச நாடுகள் பலவற்றையும் நெருக்கடிக்குள் தள்ளும் முடிவாகும். இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ள ஐ.நா. தீர்மானத்தின் படி தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எல்லா நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறாயின், இந்தப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் செயற்படும் மேற்கு நாடுகளும் கூட இதற்கு ஒத்துழைக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இலங்கை அரசின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் அந்த நாடுகள் அதற்கு ஒத்துழைக்குமா என்ற கேள்வி உள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கத்தினது இந்தத் தடை உத்தரவு புலம்பெயர் தமிழர்களின் அரசியல் பலத்தை சிதைக்கும் ஒரு பெருந்திட்டம் என்பதில் சந்தேகமில்லை, ஆனால், அந்த முயற்சியில் அரசாங்கம் எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் முதுகில் இந்தியா மீண்டுமொருமுறை குத்திவிட்டது

## சிவாஜிலிங்கம் கொதிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தை அழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் மும்மரமாக ஈடுபட்டுள்ள நிலையில் இந்தியா ஐ.நா அமர்வில் இலங்கை அரசாங்கத்திற்கெதிரான பிரேரணையின் வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாது ஈழத்தமிழரின் முதுகில் மீண்டு மொருமுறை குத்திவிட்டது என வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு 23 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கும் வாக்களிக்காமல் விலகிக்கொண்ட முஸ்லிம் நாடுகளுக்கும் தமிழ் மக்கள் சார்பாக எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் இந்தியா இந்த தீர்மானத்தின்மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது மீண்டும் ஒரு தடவை இலங்கைத் தமிழ் மக்களின் முதுகில் குத்திவிட்டது.

அதேவேளை இந்தியா நடு நிலை வகித்தது என்று கூறப்படுவது முற்றிலும் தவறானது. வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ள வில்லை. எனவே நாம் இந்தியாவிடம் கேட்க விரும்புவது என்னவென்றால். இலங்கைக்கெதிராக சர்வதேச விசாரணையை நடத்தப்படவேண்டுமென பிரேரணையில் முன்வைக்கப்பட்ட பகுதியை நீக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு இறுதித் தீர்மானத்திற்கு வாக்களிப்பில் பங்கு கொள்ளாது விட்டது ஏன்?

இந்தியா வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாமல் விடுவதாகயிருந்தால் மூன்று பிரேரணைகளின் போதும் பங்கு கொள்ளாமல் விட்டிருக்க வேண்டும் .அதனைவிடுத்து இலங்கை அரசாங்கத்திற்கு சார்பான பிரேரணைகளுக்கு வாக்களித்துவிட்டு இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த இறுதித் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் பங்குகொள்ளாது விலகிய ஈழத் தமிழரின் முதுகில் இந்தியா மீண்டு மொருமுறை குத்திவிட்டது என்று தான் கருதவேண்டியுள்ளது.

குறிபாக ஜெனீவாவில் அமெரிக்கா வினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஒத்திவைப்பது தொடர்பிலான வாக்கெடுப்பின் போது ஆதரவு தெரிவித்துவிட்டு இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமைகள் மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்ற அமெரிக்காவின் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதது கவலையளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், தனது பூலோக நலன்களை கருத்திற்கொண்டு இதனை இந்தியா செய்ததாக தெரிவித்தா லும் இந்தியாவை நாங்கள் என்றும் நேசிக்கின்றோம். இந்திய அரசாங்கம் தான் தொடர்ச்சியாக தவறுகளைச் செய்து வருகின்றது.

இந்தியா சில வேளைகளில் இலங்கையில் நிலைகொள்ள வேணடிய தேவை ஏற்படலாம் அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு தமிழர்களின் ஆதரவு இல்லாமல் அதனை மேற்கொள்ள முடியாது என்பதை கூறிவைக்கவிரும்புகின்றேன்.

தமிழர் தாயகத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ள நிலையில் இந்தியாவின் நிலைப்பாடு எமக்கு மிகுந்த மனவேதனையளிக்கின் றது, தமிழ்த்தேசம் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிலம் பறிக்கப்படுகின்றது. கலாசாரம் சீரழிக்கப்படுகின்றது.

இந் நிலையில் சர்வதேச ரீதியாக அதனைத் தடுக்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வரும் போது இந்தியா விலகிச் செல்வதை ஈழத்தமிழரினால் ஏற்றுக் கொள்ளமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

☆ ☆ ☆ ☆

கொக்குவில் மேற்கு-வாராஹிபுரம் ஸ்ரீ வாராஹி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை இரவு 7 மணிக்கு பூங்காவனமும் இடம்பெறும். (2)

# ஜே.வி.பி.கட்சி பெற்ற வாக்குகள் பலமானவை

## விஜித ஹேரத் கூறுகின்றார்

(கொழும்பு)

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் பொன்சேகாவின் கட்சி பெற்ற வாக்குகளை விட ஜே.வி.பி பெற்ற வாக்குகள் மிகவும் வலுவானவை என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது வெறுப்படைந்துள்ள அந்த கட்சியின பெரும்பாலான வாக்காளர்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர் என்பது உண்மை.

இந்த கட்சிகள் சோடா போத்தல் போன்றது அதில் உள்ள கேஸ் வெளியேறி விட்டால் எல்லாம் முடிந்து விடும். மக்கள் இதனை அறிந்துள்ளனர்.

நாட்டின் இன்றைய பிரதான புரட்சிகர கட்சி ஜே.வி.பி. ஏனைய கட்சிகளின் வாக்குகள் சரிந்துள்ள நிலையில், ஜே.வி.பியின் வாக்கு வீதம் அதிகரித்துள்ளது.

இதனால், இன்றைய ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் பலம் ஜே.வி.பிக்கே உள்ளது எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (2)

# தடை செய்யப்பட்ட அமைப்புக்களினால் இலங்கையர்களுக்கு பணம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

அண்மையில் இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் தடை செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களினால் 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தினால் பதினாறு அரசசார் பற்ற நிறுவனங்கள் தடை செய்யப்பட்டிருந்தது.

குறித்த அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் பயங்கர வாத நடவடிக்கைகளை தொடர்வதற்காக 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பணம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 100 பேர் வரையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப் பட்டவர்களில் இருபது பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல வருடங்களாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக இவ்வாறு பணம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பின்னர், நாட்டை விட்டுத் தப்பிச் சென்று மீண்டும் நாடு திரும்பிய பத்து பேர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முன்னதாக மறைத்து வைத்திருந்த வெடிபொருட்களையும் பாதுகாப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சில தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணி அவர்களுக்கு பணத்தை அனுப்பி அவர்களின் ஊடாக பயங்கரவாதிகளுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு சிங்களவரின் கணக்கிற்கும் பணம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தடை செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களைத் தவிர்ந்த வேறு சில புலி ஆதரவு அமைப்புக்களை தடை செய்யும் நோக்கில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (2)

# வாரம் ஒரு தகவல்

## சரித்திரச் சம்பவம்

"நல்வாழ்த்துக்கள்"

"என்ன... திடீரென்று?"

"இன்றைக்கு உங்களுடைய பிறந்தநாள் சேர்"

"ஓ... மறந்து விட்டேன்"

"என்ன இது... நீங்கள் ஒரு சரித்திரப் பேராசிரியர் சரித்திரக்கால சம்பவங்களையெல்லாம் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய பிறந்தநாளை மறந்து விடுகிறீர்கள்"

"ஹி! அது இருக்கட்டும். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?"

"என்ன... சரித்திரவிடயம் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?"

"ஆமாம் 1957 இல் நடந்த சம்பவம் செக்கேஸ்லாவாக்கியாவில் சாத்தான் ஏரி என்று ஒரு ஏரி உண்டு. அந்த ஏரியில் ஒரு பையன் தவறி விழுந்து விட்டான். அவனைத்தேடி நீச்சல் வீரர்கள் போனார்களாம். ஒரு ஆழமான இடத்தில் ஏரியின் தரைப் பகுதியில் குதிரைகள். பீரங்கி சகிதமாக ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று போருக்கு தயாராக காத்துக் கொண்டிருந்ததாம்"

"ஆச்சரியமாக இருக்கே... அது எப்படி?"

"நீச்சல் வீரர்கள் கரையேறிவந்து இந்த விடயத்தை கூறியதும் எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்ததாம். ஆனால் அதன் பின் பலர் ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டு பிடித்தார்களாம்"

"என்ன அது?"

"1945 இல் இரண்டாவது உலகப் போரின் இறுதிக் கட்டத்தை நாஜிப்படைகள் ரஷ்யக் குளிருக்குப் பயந்து பின்வாங்கியதால் அல்லவா? அப்போது ஜேர்மன் படைப்பிரிவொன்று இந்த ஏரி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தபோது பனிப் பாறை பிளந்து உள்ளே போய்விட்டது. அப்படியே சமாதியாகி விட்டது. அதைத்தான் இந்த வீரர்கள் பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள்."

"உங்களிடம் வந்துவிட்டால் பழையகால சமாச்சாரங்களுக்கு பஞ்சமேயில்லை சேர். செவிக்கு விருந்து கொடுத்து விட்டீர்கள். உங்கள் பிறந்தநாள் அதுவுமாக வாய்க்கும் அதுமாதிரி ஏதாவது கொடுக்கக்கூடாதா"

"இதோ வைத்திருக்கிறேனே லட்டு எடுத்துச் சாப்பிடுங்க"

"தாங்ஸ் சேர். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ... போன வருடம் உங்கள் பிறந்தநாளுக்கும் லட்டுத் தான் கொடுத்தீர்கள். அதுவும் நன்றாக இருந்தது. அதேபோல் இதுவும் நன்றாக இருக்கிறது"

"அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை"

"ஏன்?"

"அதுவேதான் இதுவும். அப்பொழுது தயார் பண்ணியதுதான்"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சி கனகபுரம் புனித யூதா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டிகள் முன்பள்ளியின் ஆசிரியை ம.விமலேஸ்வரி தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் சிறார்களின் விளையாட்டு மற்றும் விநோதவுடை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வின் போது...

நிழல்கள்



யாழ்.எய்ட் நிறுவனம் மேற்கொண்டுவரும் நலிவுற்ற மாணவர்களின் கல்விக்கான உதவித் திட்டத்தின் கீழ் சமூக சேவையாளர்களும் கனடா வாழ் புலம் பெயர் ஈழத்தமிழர்களுமான தி.சத்தியமூர்த்தி, க.அஞ்சனா, ம.பிறேம் குமார் ஆகியோரின் அனுசரணையில் வேலணை பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கு இணங்க வேலணைப் பிரதேச நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறு உதவிப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்ட போது... (படம் :- மானிப்பாய் செய்தியாளர்)




வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் நெல்லியடி பிரதேச மக்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றபோது... (படம் :- கரணவாய் செய்தியாளர்)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விளையாட்டு நிகழ்வுகளில் சம்பியன் பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)





யாழ்.குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் அதிபர் பொ.சிவராசா மங்கள விளக்கேற்றுவதையும் மாணவர்களின் அணிநடையையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வண.அருட்தந்தை எல்.எம்அருள்நேசன் அடிகளார் வெற்றி பெற்ற மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- பருத்தித்துறை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## கால்கோள் விழா

வெள்ளை உடை உடுத்து
கொள்ளை இன்பத்துடன்
புள்ளிமான் போல்...
துள்ளியோடி...
பள்ளிவரும் பிஞ்சுப் பாலகர்களை
அள்ளி அணைத்து அறிவுடன்
அன்பையும் பண்பையும்
எண்ணுடன் எழுத்தையும்
கைவண்ணத்துடன் சித்திரத்தையும்
பண்ணுடன் பாடலையும் பயின்று
உதவிகள் பல செய்து
தொல்லைகள் செய்யாமல்
பள்ளியில் பாடங்கள் செய்து
நூல்கள் பல கற்று
பட்டங்கள் பல பெற்று
நாளைய நற்பிரஜையாய்
நாட்டில் நல்லவண்ணம்
வளருங்கள் வாழுங்கள் என
இவ்வேளையில் வாழ்த்துகின்றோம்

**பா.மதனபாரதி**
**அல்வாய்**

## தேடிக்கிடைக்கா...

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கின்றேன்- நான்
வள்ளுவன் வழி நிற்கிறாய்-நீ
பள்ளிக்காலச் சொற்ப நாளில்
சொர்க்கம் காட்டுறாய்- நீ
வெள்ளி மலையோ என
வியந்து நிற்கிறேன்-நான்
அள்ளி அள்ளி ஆனந்தம்
கொடுக்கிறாய்- ஏன்
முல்லைக்குத் தேர் கொடுத்த
பாரியா நீ?
நீ- தத்தி நடைபோட்ட நேரம்
இன்பப் பித்துப் பிடித்தேன் நான்
கொச்சைத் தமிழ்பேசி நாளும்
குற்றாலம் தந்தானே சேய்
நில் என்றால் உலகம் சுழல மறுக்கும்
நீ செல் என்றால் நிலவும் ஓடிமறையும்
தேடிக்கிடைக்காப் பொருள் நீ- நான்
வாழும் இன்ப உலகம் நீ

**இரா.நவதர்சினி**
**வயாவிளான்**

## அகிலமெங்கும் அகதியானான்

பாரதம் நிகழ்ந்த போது
பாண்டவர் இருந்ததும் மெய்
இராம கதை நிகழ்ந்த போது
இராவணன் இருந்ததும் மெய்
ஐந்தாயிரம் ஆண்டின் முன்பு
ஐந்து பெரும் சிவாலயங்கள்
ஆழிசூழிலங்கையிலே,
ஆர்த்து நின்ற அரன் நாமங்கள்
முன்னைக்கும் பின்னைக்கும்
மூத்தபெரும்பழங்குடி
அந்நியரிடம் கைகட்டி
அண்டிப்பிழைத்து இரந்து வாழுது
இடையில் வந்த கொம்புகூட,
என்னமாய் ஆட்டம் போடுது
கொடுத்துச் சிவந்தன கர்ணனின் கரங்கள்;
உழைத்துச் சிவந்தன இவனின் கரங்கள்;
நாடுவிட்டு இந்நாடு நோக்கி,
ஓடம்விட்டு ஓடிவந்த
நாடோடிக்கூட்டத்திற்கும்
காடுமேடுகள் திருத்திக்
களனிகள் செய்து தந்தான்
பாடுபட்டான், பயிர் வளர்த்தான்
அவன்மட்டும், அநாதை ஆனான்
அகிலமெங்குமே அகதியானான்

**வாணியழகன்**
**முரசுமோட்டை**

## இமயம் தொட...

விஞ்ஞானிகளெல்லாம்
ஆராய்ச்சியில் இறங்குகிறார்
அன்பான இதமான
வார்த்தைகளுக்கு இணையான
வில்லைகளைக் கண்டுபிடிக்க
அதை பிரசவிக்கும்
அவனே- அதற்கு
மருந்தைத் தேடுகிறான்
அவனிடமிருந்தேயது
பிரசவிப்பதறியாமல்

மாவை.நா. கஜேந்திரன்

## நட்பு

நட்பின் அலைக்குள்ளே
நித்தமும் நீந்திட
நிரல் படுத்துகிறேன் ஆசைகளை
நிச்சயம் ஜெயிப்பேன் என்ற
நிரந்தர நம்பிக்கையுடன்
கோர்த்திடும் கைகளும்
வரைந்திடும் கோலங்களும்
அழியாத கோலமாய்
ஆயுளுக்கும் தொடரும் என்ற
அசைக்க முடியாத கனவுகளுடன்...!

**கங்கா.பா**
**வண்ணார்பண்ணை**



# மௌனத்தின் தேடல் - 198

## நிம்மதியைத் தேடுகின்றேன்

சிட்டுக்குருவியைப் போல்
சுதந்திரமாக திரிந்த
நான் இன்று ஒரு யுத்தத்தால்
என் மகன் என் கணவன்
இருவரையும் இழந்து
தனிமையில் தவிக்கின்றேன்
என் மனம் கேட்கின்றது மீண்டும்
அந்த சுதந்திரமான
வாழ்க்கை என்று

த.ஜெயவதனி
புனியன்குளம்

## வாயில்லா ஜீவனாய்

பாட்டி!
உம் முகமதினிலே
விரக்தியும் சோகக்
கனல்களும் சிதறுவதை
என்னால் உணரமுடிகின்றது
கணவனை இழந்து
பிள்ளைகளால் கைவிடப்பட்டு
உறவினர்களால் புறந்தள்ளப்பட்டு
வாழ்ந்து வருகின்றீரா?
வாய் இல்லா ஜீவனாய்

வளர்மதி யுகன்
பா. செங்குந்த இ.க.

## கடல் ஓரம்

கடல்தனில் மீன் பிடித்து
கரைசேரும் என் கணவன்
கட்டுமரம் கரை ஒதுங்கியும்
கணவனை காணவில்லை
அயல் நாட்டு வெறிகொண்ட
மனிதர்கள் வீசிய வலையில்
மாட்டிக்கொண்ட என் கணவன்
என் செய்வேன் பாரதமாதா

நடுப்பக்க நித்தி
தாவை

## விழித்திடுவீர் அன்னையரே!

மறைந்த அன்னை திரேசாவின்
அன்பின் ஆளுகையில் இன்றும்
ஏழைகள் நோய்
துன்பம் நீங்குகிறார்கள்
மறைப்பில் வன்செயலாளர்
ஆளுகையில்
ஆரோக்கிய இனம் இன்று
ஏழைகளாகி விரக்தி
நோயில் மங்குகிறார்கள்
மனவிரக்தியில் தோன்றும்
அன்னையே! விழித்திடு!
பெண்குலத்துடன் இணைத்து
மனோவலிமையுடன் போராடி
நீதியை நிலைநாட்டிடுவீர்

சி.சுகிர்தமலர்
உரும்பிராய் மேற்கு

## நிமிர்ந்து நில்

பெண்ணே!
அடிமையாகாதே
ஆண்களுக்கு
சம உரிமையோடு
போராடி
வாழ்வில் உயர்ந்திடு

இரா.ஜெ.துஷ்யந்த்
அளவாவோடையூர்

## மறுவாழ்வு

பெண்ணென்றால் பேயும்
இரங்கும்- ஆனால்
அரக்கர்களை சம்காரம்
செய்த தேவி போல்
சில பெண்களும்
துஷ்டர்களின் பிடியிலிருந்து
ஆரோக்கியமாக

மனோ.குணாளினி
மயிலிட்டியூர்

## காத்திருப்பு

கண்களில் ஏக்கத்துடன்
முகத்தினில் பதற்றத்துடன்
இதயத்தில் வலியுடன்
மனதில் சோகத்துடன்
காத்திருக்கின்றேன்
காணாமற்போன
பிள்ளையின் வருகைக்காக?

பா.சுவீதன்
கரணவாய் மத்தி

## ஏனிந்தப் பார்வை

ஏனிந்தப் பார்வை
எதற்காக இந்தப் பார்வை
உனது பார்வையில்
ஆயிரம் அர்த்தங்கள்
உன் நெற்றியின்
சுருக்கத்தில்
தெரிகின்றது

திருமதிஅ.மேரி அல்போன்சா
குருநகர்

## மரணம் மட்டுமே

இளமைக் காலத்தில்
இளமையைத் தொலைத்தோம்
வருங்காலத்தில்
கனவுகளை தொலைத்தோம்
தொலைத்ததெல்லாம் இன்று
தேடுகிறேன்- ஆனால்
முதுமையில் கிடைக்கப்போவது
மரணம் மட்டுமே


ஆனந்த் அபி
பருத்தித்துறை

## மாறியது

காலம்மாறிவிட்டது
நாம் வாழ்ந்த காலமதில்
கஷ்டப்பட்டாலும் கௌரவமாய்
வாழ்ந்திருந்தோம்- ஆனால் இன்று
இப்படியுமா மனிதர்கள் என்று
எனக்கு அருவருக்கத் தோன்றுகிறது

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -199



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.04.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சுகிர்தமலர், உரும்பிராய்

அன்பின் வியாசரே!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம என்பதற்கேற்ப தங்களை அறியாமல் வெளிப்படுத்தி உண்மை வெளிச்சத்துக்கு வருகிறது. விரைவில் நீதி கிடைக்குமா?

ஒருவன் நெல் விதைத்தால் களை எடுத்து கதிர் அறுத்து களத்தில் இட்டு சூடடித்து மூடை மூடையாய் நெல் பெறுவான். எள் விதைத்தால் முளை வளரக்காத்திருந்து கிளி கலைத்து வெட்டியெடுத்து காயவைத்து பதர் அடுக்கி விதைதட்டி எள் பெறுவான். வாழ்வில் வினை விதைத்தவன் உயிர் முடிந்து மேலோகம் சென்று இயமன் முன் நின்று செய்த கொடுமைகள் அத்தனைக்கும் கணக்குச்சொல்லித்தானே ஆகவேண்டும்.

K. வாணி, புன்னாலைக்கட்டுவன்

அன்பின் வியா அண்ணா!

பேஸ்புக்கிலும் ஈமெயிலிலும் காலத்தைக் கழிக்கும் இன்றைய இளசுகளை எப்படித் திருத்துவது?

இயற்கைக் கழிப்புக்குக் கூட எழுந்திராத இவர்களை திருத்துவதற்கு அந்த கடவுளால்கூட முடியாதே.

த.கனிஸ்ரன், மட்டுவில்

வியாசர் அண்ணா!

இலங்கையின் கல்வி தரம் பற்றி தங்கள் கருத்து என்ன?

இலங்கையின் அத்தனை மாவட்டங்களிலும் வடக்கு, கிழக்கு கல்வி நிலையில் வீழ்ச்சியடைந்து செல்கிறது. இது ஒரு சிறுபான்மை இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்புடையது அல்ல. திட்டமிட்டு நம் சமூகத்தை முடக்க நினைப்பவர்கள் முன் நாம் மீண்டும் முன்வந்து காட்டுவோமா?

## ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம என்கிறார்களே...

### கொஞ்சம் சிரிங்கப்பா...



"நம்ம வீட்டு வாசல்ல நாய்கள் ஜாக்கிரதைன்னு இருந்த போர்டை பேய்கள் ஜாக்கிரதைன்னு மாத்தச் சொன்னியாமே ஏன்?''

'' சம்மர் லீவுல உங்க அம்மாவும் தங்கச்சியும் வரப்போறதா நீங்கதானே சொன்னீங்க?'

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

அன்பின் வியாசரே!

அகிம்சையால் எதையும் சாதிக்க முடியுமென எங்கள் மகாத்மா காந்தி அன்று நிரூபித்துக் காட்டினார். இக்காலத்தில் அது முடியுமா?

அகிம்சையால் சுதந்திரம் பெற்ற இந்தியாதான் இருபத்தி ஏழு வருடங்களுக்கு முன் நல்லூர் வீதியில் அகிம்சையை குழிதோண்டிப் புதைத்து விட்டதே.

## யாழ்ப்பாணத்திலே அதிகமாக நடக்கும் சீர்கேடுகளுக்கு யார் காரணம்?

வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி

அன்பின் வியாசரே!

அம்மாவுக்கும் மனைவிக்கும் இடையேயான ஒற்றுமை யாது?

வெற்றி பெறும் போது தோள் தருவதும் தோல்வியடையும் போது மடி தருவதும்.

அ.நிறோஜன், SOS சிறுவர் கிராமம்

அன்பின் வியாசரே!

தமிழர் நாகரீகம் மாறிப் போகிறது. அதை எவ்வாறு மாற்றியமைப்பது?

வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தை அடித்துக் கொண்டு செல்கிறது. என்ன செய்ய, எங்காவது ஓர் இடத்தில் இறுகப்பிடித்துக் கொண்டால் நிலைத்து விடலாம்.

த.டனுஜன், நுணாவில்

அன்பின் வியாசரே!

நாம் வாழும் பூமி ஏன் மிகவும் வெப்பமாக உள்ளது?

விஞ்ஞானிகளிடம் கேட்டால் ஓசோனில் ஓட்டை என்பார்கள். உண்மை அதுவல்ல மனித மனங்களின் ஓட்டைதான் வெப்பத்திற்கு காரணம்.

வளர்மதி, இருபாலை

அன்பின் வியா அண்ணா!

ஒரு தடவை காதலித்து தோல்வியுற்றால் அவர்களுக்கு திருமணம் நடக்காதாம். இது உண்மையா?

அப்படியென்றால் உலகத்தில் யாருக்குமே திருமணம் நடந்திருக்காதே. உலக சனத்தொகை இவ்வளவுக்கு உயர்ந்திருக்காதே?

த.மோகனரூபன், சுழிபுரம்.

அன்பின் வியா அண்ணா!

யாழ்ப்பாணத்திலே அதிகமாக நடக்கும் சீர்கேடுகளுக்கு யார் காரணம்?

கறுப்பாக இருப்பான் கண்டுபிடித்து விட்டால் வெள்ளையாக மாறிவிடுவான் மொட்டை அடித்திருப்பான் மறுகணமே சடைத் தலையுடன் தரிசனம் தருவான் குட்டைக் காட்சட்டை போட்டிருப்பான் அறிந்து விட்டால் அடுத்த கணமே ரெக்சூட் போட்டிருப்பான். எல் லோருக்குமே தெரியும் ஆனால்... தெரியாது...

# இலங்கையருக்கு அமெரிக்க நீதிமன்றம் தண்டனை

நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கையருக்கு அமெரிக்க நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

18.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆறு பேருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பெரியசாமி சுந்தரலிங்கம் என்ற இலங்கையருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கனிய வள சுரங்கம் தொடர்பில் இலஞ்சம் வழங்கி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

# க.பொ.த.உயர்தரம் கற்க 176534 மாணவர்கள் தகுதி

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு கடந்த 2013ஆம் ஆண்டு தோற்றிய மாணவர்களில் 66.67 வீதமானவரீகள் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 534 மாணவர்கள் இவ்வாறு தகுதி பெற்றிருப்பதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று முன் தினம்நடை பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் .மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

இவர்களில் 5ஆயிரத்து 737 பேர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்றிருப்பதுடன், பரீட்சைகுத் தோற்றிய 2இலட்சத்து 6 ஆயிரத்து772 மாணவர்களில் 9 ஆயிரத்து 444 மாணவர்கள் எந்தவொரு பாடத்திலும் சித்திபெறவில்லையென்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரத்திற்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை 2016ஆம் ஆண்டில் 75 வீதமாக உயர்த்துவதுடன், எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறத் தவறும் மாணவர்களின் எண்ணிக்கையை ஒரு வீதமாகக் குறைப்பதுமே அரசாங்கத்தின் இலக்காகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

1994ஆம் ஆண்டிலிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி, உயர்தரத்துக்கு தகுதி பெறும் மாணவர்களின்எண்ணிக்கை அதிகரித்தே வருகிறது. 94ஆம் ஆண்டு சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 22.5 வீதமானவர்களே உயர்தரத்துக்குத் தகுதி பெற்றனர். எனினும், 2010 இல் இந்த எண்ணிக்கை 60.57 வீதமாகவும், 2011இல் 60.80 வீதமாகவும், 2012இல் 64.74 வீதமாகவும் அதிகரித்துள்ளது.

விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தொடர்பில் அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்தப் பாடங்களில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விஞ்ஞான பாடத்தில் 67.53 வீதமானவர்கள் தோற்றியிருப்பதுடன், கணித பாடத்தில் தோற்றியவர்களின் எண்ணிக்கை 57.23 வீதமாகவும், கணித பாடத்தில் தோற்றியவர்களின் எண்ணிக்கை 48.86 வீதமாகவும் அதிகரித்துள்ளது என்றார். (2)

# பொய்யை திரும்பத் திரும்ப கூறுவதால் உண்மையாகாது

## அமைச்சர் ஜி.கே.வாசன்

இலங்கை தமிழர்களுக்கு காங்கிரஸ் துரோகம் இழைத்ததாக கூறுவதை மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன நேற்று முன்தினம் சேலத்தில் நிருபர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் கூறுகையில்,

இரவு நேரத்தில் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்காளர்களை இருட்டில் சென்று சந்திக்கும் வழக்கம் காங்கிரஸ் கட்சிக்கு கிடையாது.

தேர்தல் ஆணையத்தின் நல்லெண்ண நடவடிக்கைகளை வரவேற்கும் அதேநேரத்தில் தேர்தல் செலவு குறித்த கட்டுப்பாட்டை தேர்தல் ஆணையம் பரிசீலனை செய்ய வேண்டும். கட்சித் தலைவர்கள் பேசும் கூட்டத்[illegible] செலவை வேட்பாளர்கள் [illegible] சேர்ப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழ விவகாரத்தில் தமிழர்களுக்கு காங்கிரஸ் துரோகம் இழைத்ததாக கூறுவதை மக்கள் ஏற்கமாட்டார்கள். ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொல்வதால் அது உண்மையாகிவிடாது.

இலங்கைக்கு எதிரான செயற்பாடுகள் மூலம் திரையை மூடிக் கொண்டால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நலத்திட்டங்களை நிறை[illegible] என்றார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்த அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிரந்தர, இரண்டாம் தர அடிப்படையில் கீழ் வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கான வயதெல்லையானது 40 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் (கட்டுப்படுத்துதல் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி பதவிக்கான வயதெல்லை 35 வயதுக்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். பணிப்பாளர் (மனித வளம், நிதி பதவிக்கான வயதெல்லை 35 வயது முதல் 50 வயது வரை இருத்தல் வேண்டும்.

நூல் நிலைய அதிபர் பதவிக்கான வயதெல்லை 22 வயது தொடக்கம் 45 வயது வரை இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, வித்யாமாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப தகைமை பற்றிய மேலதிக விபரங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் www.dmc.gov.lk என்ற இணையத்தளத்திலும் வலம்புரி அலுவலகத்திலும் பார்வையிடலாம். (2)

# ஒழுக்க விழுமியங்களில் அபிவிருத்தி அவசியம்

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

ஒழுக்க விழுமியங்களில் அபிவிருத்தி ஏற்படுத்தப்படாவிட்டால் அதில் அர்த்தமில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் பொருளாதார மற்றும் பௌதீக ரீதியான அபிவிருத்தி மட்டும் போதுமானதல்ல.

ஒழுக்கக் கேடுகளுக்கு எதிராக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டின் ஏனைய துறைகளில் அபிவிருத்தி ஏற்பட்டு சமூக ரீதியான ஒழுக்கம் இல்லாவிட்டால் அதில் பயனில்லை.

30 ஆண்டுகள் போர் இடம்பெற்ற போது அமைதி பேணிய மேற்குலக நாடுகள் தற்போது சமாதான நிலைமைகளை சீர்குலைக்க முயற்சிக்கின்றன.

போர் இடம்பெற்ற காலத்தில் எதற்காகவும் குரல் கொடுக்காது தற்போது ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# காட்டில் மரம் வெட்டிய ஐவர் பொலிஸாரால் கைது

இரணைமடு, இராமநாதபுரம் காட்டுப் பகுதியில் மரங்களை வெட்டிக் கொண்டிருந்த 5 பேரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெட்டிய நிலையில், எடுத்துச் செல்ல தயாராக வைக்கப்பட்டிருந்த மரக்கட்டைகளை அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தவிர மரங்களை வெட்ட பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (2)

# ஐ.தே.கட்சியின் 42 மாகாண சபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம்

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக ஐக்கிய தேசியக்கட்சியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்றைய தினம் அக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

இதன்போது 42 மாகாணசபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்தனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை எதிர்கட்சித் தலைவராக மஞ்சு சிறி அரங்கலவையும் தென் மாகாண சபை எதிர்கட்சித் தலைவராக தென்னகோன் நிலமேவையும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கனகராசா இலங்காதேவி

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா இலங்காதேவி கடந்த 3 ஆம்திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு Meadowvale Cemetery And Visitation Centremore, 7732 Mavis Road, Brampton, ON L6Y 5M1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### தம்பு செல்வராசா

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal, Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வராசா கடந்த 3 ஆம்திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை நிலாவரை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கனகசபை இராசையா

கோப்பாய் மத்தி கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இராசையா கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவநேசன் அகிலேஸ்வரி

அல்லாரையைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவநேசன் அகிலேஸ்வரி கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கனகநாதன் திவ்வியமணி

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகநாதன் திவ்வியமணி கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு Chapel 4164 Sheppard Avenue East, Agincourt, Scarborough, ON, M1S IT3 Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



### வேலுப்பிள்ளை நடராஜா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா High Wycombe ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராஜா கடந்த 2 ஆம்திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ST Marylebone Crematorium, East End Road, East Finchley, London N2 ORZஎன்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### இராசதுரை மரியதாஸ்

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கை நிரந்தர முகவரியாகக் கொண்ட இராசதுரை மரியதாஸ் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி நேற்று சனிக்கிழமை கள்ளப்பாடு தெற்கு புனித அந்தோனியார் கோவிலில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.



### அருணாசலம் பரமசாமி

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பரமசாமி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு உடையார் வீதி மந்துவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் வடக்கு சோனகபுலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை

அராலி தெற்கு அராலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு,மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை(ஓய்வு நிலை ஆசிரியர்) நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி தெற்கு பூனாலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

க.பொ.த (சா/த) பரீட்சை -2013 பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சையில் முன்னணி பெறுபேறு களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**ஆங்கிலமொழி மூலம்**

பே.கஜீஷியா-9ஏ, சி.அனோஜா-8ஏசி, வி.விஜீனா- 7ஏபிசி.

**தமிழ் மொழி மூலம்**

அ.அமிர்தவர்ஷினி-9ஏ,நா.ரனியா-9ஏ. சி.சிந்துஜா-8ஏபி, பா.சோபிகா-8ஏபி,ம.இளமதி-8ஏசி, சு.புஸ்பாஜினி-8ஏசி, க.மினுஜா- 8ஏசி, யோ.ஜிந்துஜா-8ஏசி , மோ.பவதாரணி- 7ஏ2பி, சி.லக் ஷனா- 7ஏபிசி, பா.சுவேகா-6ஏ2 பிஎஸ், சி.சிந்துஜா -5ஏபி3சி, மு.சுதர்சினி-5ஏ2பிசி.

**யா/மானிப்பாய இந்துக் கல்லூரி**

எஸ்.நிதர்சன்-7ஏ2சி, கே.பிரதாப்-7ஏபிசி, ஜெ.ஜசிந்தன்- 7ஏபிசி, ஜெ.சஜீசன்- 6ஏ2சிஎஸ், எஸ்.கிரிசாந்தன்-6ஏபி2சி, எஸ்.செல்வ பிரசாந்-5ஏ3பிஎஸ், ஆர்.அன்னிறொசாந்தன்-5ஏ2பிஎஸ், கே.நர்த்தனன்-5ஏ2பி2சி, எஸ்.செல்வபிரசாத- 5ஏ3பிஎஸ். (2)

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

க.சங்கவி-8ஏ எஸ், ஞா.வைஷ்ணவி-8ஏசி, ஈ.தவேந்தா-8ஏசி, க.மிதுர்சன்-8ஏஎஸ், பா.விதுரன்-8ஏசி, இ.டிலானி-8ஏபி, ஸ்ரீ. மயூரகா-8ஏசி, ச.சர்ஷா-8ஏபி, பா.ஜனார்த்தன்-8ஏசி, சி.ஜெயபிரகாஷ்- 8ஏஎஸ், பா.நிரோஜன்-8ஏசி, சி.சிவலக்ஷன்-8ஏசி, உ.லவேந்திரன்-8ஏசி.

அ.வக்ஷன்- 7ஏபிஎஸ், சா.டினோசன்-7ஏபிஎஸ், ஜெ.ஜெயவிந்தா-7ஏபிசி, பா.ஜினோஜன்-7ஏபிசி, கு.லக்ஷன்-7ஏபிஎஸ், சி.விஜிதன்-7ஏபிஎஸ், ஜெ.குகப்பிரியன்-7ஏபிசி, தெ.மோகனதீசன்-7ஏபிசி, லோ.யதுஷா-7ஏபிசி, இ.கார்த்திகா-7ஏ2பி, ஸ்ரீ.நர்த்தனா-7ஏ2பி, இ.துர்க்கா-7ஏபிசி,

ப.அகிலராஜ்-6 ஏ3பி, ச.கிரிஷாந்-6ஏ2பி,கவிதுரா-6ஏ2பிசி,த.ஆதவன்-6ஏ2பிசி, வே.சஜீவன்-6ஏபி2சி, ஆ.சிந்துஜன்-6ஏ2பிசி, இ.ஆரங்கன்-6ஏ2பிஎஸ், பு.றொசானா-6 ஏ2பிஎஸ், பா.சங்கீதா-6ஏபி2சி,

ஜெ.லுக்ஷிகா-5 ஏ3பிசி, து.சாம்பவி-5ஏ4பி, பி.ஸ்ரீவித்தியா-5 ஏ2பி 2எஸ், ச.குகாயினி-5ஏ2பி 2சி, ஆ.ஆரபி-5 ஏ4பி, ம.சாரிணி-5 ஏ 2பி2சி, ஸ்ரீ.இன்டிகான்-5ஏபி3சி, இ.மதினுதன்-5ஏ3பிசி, அ.நிரோஜன்-5ஏ2பிசிஎஸ், லி.டிலக்ஷன்-5 ஏ3பிசி, ஞா. சஜீவன்-5ஏபி3சி, ம.அருண்யா -5ஏ2சி2எஸ், லோ.மதிவதனி-5ஏ 2பி2சி, சா.நயனிதா-5ஏ2பி 2சி, ர.ஜனரஞ்சனி-5ஏ4பி, மு.சங்கீர்த்தன்-5ஏ2சி2எஸ், உ.செந்தூரன்-5ஏ3எஸ், சு.துவாரகன்-5ஏ4பி, பா.நிரோஜன்-5 ஏ2பிசிஎஸ், ம.சங்கீத்-5ஏ பி 3சி.

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

சி.ஆர்.மரின் எல்றோய்-8ஏபி, ஆர்.ஆர்.கிருசாந்தன்-8ஏபி, ஜெ.அன்ரன் ஜெனோஷன்-8ஏசி, வி.பெனட் சுஜீபன்-8ஏசி, ஜெ.மைக்கல் வினுஷன்-7ஏ2பி, ஜீ.ஹைறிப் அனிஷ்டஸ்- 7ஏபிசி, டி.கிறிசாந்-7ஏபிசி, ஆர்.சுஜித்-6ஏபி2சி, பீ.பீ.நிலோஜன் -5ஏ3பிசி, ஜி.என்.ஜீன் லக்ஷ்மன்-5ஏ2பிசிஎஸ், ஆர்.அட்சறன்-5ஏ3பி எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வர தடை விதிக்கப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் விபரம்

இலங்கை அரசினால் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய நபர்கள் பற்றிய விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இவ் வர்த்தமானியில் 16 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்கள் 424 பேரின் பெயர் விபரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

1968 ஆம் ஆண்டின் 5854/41 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை சட்டம் என குறிப்பிடப்பட்டு பொது அரசாங்க அறிவித்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலானது ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்கு விதிகளின் 4 (2) இன் கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள், குழுக்கள் மற்றும் உருவங்களின் நிரல் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

கந்தசாமி சேகரன்- டென்மார்க் (பலாலி மேற்கு), வேலுப்பிள்ளை நித்தியானந்த வேல்- டென்மார்க், நிமலநாதன் செல்லையா- டென்மார்க் ( நுணா வில் மேற்கு), மகாலிங்கம் மகாதீ பன்- டென்மார்க் (அச்சுவேலி வடக்கு), சண்முகராசா செந்தில்குமரன்- டென்மார்க் ( வல்வெட்டி த்துறை), ஜேசுதாஸன் பிரான்சிசன் விஜேந்திரன்- டென்மார்க ( கடற்கரை வீதி, பரு த்தித்துறை), அன்னலிங்கம் சற்குணலிங்கம்- டென்மார்க் (மண்டதீவு), சிவஞானம் ஶ்ரீதாஸன்- டென்மார்க் (குப்பிளான்), ரங்கநாதன் கந்தசாமி- டென்மார்க், கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம்- டென்மார்க் (உடுத்துறை வடக்கு), ஜெய ஶ்ரீ தரன் முருகேசு- டென்மார்க் (அல்வாய் வடக்கு), அருளேஸ்வரம் வல்லியபுரம்- டென்மார்க் (கொடிகாமம்), ஞானசீலன் மரியம்பிள்ளை- டென்மார்க், செல்லையா ஆனந்தன்- டென்மார்க் (மந்துவில் தெற்கு), செல்லையா உதயமனோகரன்- டென்மார்க் (தாளையடி), பெஞ்ஜமின் அந்தோனி பெர்னான்டோ- டென்மார்க் (வெற்றிலைக்கேணி), குணதாஸ் பாலசுந்தரம்-டென்மார்க் (பருத்தித்துறை), நடராசா ரவிச்சந்திரன்-டென்மார்க் ( நாச்சிமார் கோவில் வீதி, முத்துலிங்கம் ராசலிங்கம்-டென்மார்க், (வல்வெட்டித்துறை), செல்லையா புஷ்பராஜா- பின்லாந்து ( ஞானி மடம், பூநகரி), தவராசா நித்திராஜா- பிரான்ஸ் (தொண்டைமானாறு), கருணாநிதி துரைரத்தினம்- பிரான்ஸ் (வட்டு மேற்கு), மகேந்திரராஜா உதயனன்- பிரான்ஸ் (புளியங்கூடல் கைதடி), பெர்னாண்டோ மைக்கல் ஏஞ்சலோ- பிரான்ஸ்( சங்கானை), கந்தையா அருமைச்செல்வம்- பிரான்ஸ் (ஏழாலை), கந்தசாமி வித்தியாரூபன்- பிரான்ஸ் ( வேலணை வடக்கு), அரியரத்தினம் நகுலேஸ்வரி- பிரான்ஸ் (இளவாலை வடக்கு) , கனகலிங்கம் லிங்கேஸ்வரன்- பிரான்ஸ் (கள்ளியடி, இலுப்பக்கடவை), அருளானந்தன் மகேந்திரராஜா- பிரான்ஸ் (வல்வெட்டித்துறை), சிவசுப்பிரமணியம் முகுந்தன்- பிரான்ஸ் (சுழிபுரம் கிழக்கு), குலராசா முருகதாஸ்- பிரான்ஸ் (வட்டுக்கோட்டை மேற்கு), மகிந்தன் ரத்னவேல்- பிரான்ஸ் (பாண்டிருப்பு), கணேசலிங்கம் தம்பிதுரை- பிரான்ஸ் (அரியாலை), சுபாரத்தினம் ப்ரேம்குமார்- பிரான்ஸ் (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்), பாலசுப்பிரமணியம் வாகீசர்- பிரான்ஸ் (வட்டு வடக்கு), விக்னேஸ்வரன் ரஜீவன்-பிரான்ஸ் ( மீசாலை வடக்கு), சவரிமுத்து ஸ்டான்லி- பிரான்ஸ் (மல்லாகம்), சாந்திய ஹட்சன் செல்வசந்திரன்- பிரான்ஸ் ( மாதகல்), புஞ்சி பண்டா விஜேரத்ன சதீஸ்குமார்- பிரான்ஸ் (கொக்குவில்), சுப்பிரமணியம் பிரேமானந்தன்- பிரான்ஸ் ( துணுக்காய்), பரமசாமி பரணிதரன்- பிரான்ஸ் (எழுதுமட்டுவாள்), மனோகரன் வேலும்மயிலும் -பிரான்ஸ் (ஏழாலை தெற்கு), காளிங்கராஜா பாலகுமார்-பிரான்ஸ் (இணுவில் தெற்கு), சுப்பிரமணியம் சிவகரன்-பிரான்ஸ் (வட்டக்கச்சி), செங்குலரத்னம் கஜிந்தன்- பிரான்ஸ் (புலோலி கிழக்கு), நவரத்னம் கஜேந்திரன்- பிரான்ஸ் (ஏழாலை மேற்கு), சிவஞானம் ஜெகஜீவன்-பிரான்ஸ் (இணுவில் கிழக்கு), கருணாகரன் பிரபாகரன்- பிரான்ஸ்(மானிப்பாய் வீதி), கோபாலகிருஷ்ணன் தங்கராஜ்- பிரான்ஸ்(அராலிவடக்கு), சிவராஜா சதீஸ்வர குமார்-பிரான்ஸ் (செம்மணி வீதி), பரமலிங்கம் நவநீதன்- பிரான்ஸ்(முரசுமோட்டை), புஷ்பலிங்கம் ஶ்ரீவேலவன்-பிரான்ஸ்( பிரான்ஸ்தொண்டைமானாறு) , மயில்வாகனம் லிங்கேஸ்வரன்- பிரான்ஸ் (புளியம்பொக்கணை), கிருஷ்ணபிள்ளை சிவநாதன்-பிரான்ஸ் (நிலாவெளி), கைலைநாதன் ரமணன்-பிரான்ஸ்( நீர்வேலி வடக்கு), ராஜகுமார் ஜீவகுமார்-பிரான்ஸ் (சங்கானை), விநாசித்தம்பி பரமலிங்கம்-பிரான்ஸ் (தாளையடி), கந்தையா கணேஷ்வரன்-பிரான்ஸ் (புங்குடுதீவு), பாலசிங்கம் கதிர்காமநாதன்-பிரான்ஸ் (பல்லவராயன் கட்டு), அந்தோனிப்பிள்ளை விக்டர்- பிரான்ஸ் (இளவாலை), தவலிங்கம் லிங்கநாதன்- பிரான்ஸ் (கொக்குவில் மேற்கு), ஈஸ்வரம்பிள்ளை கனகதீபன்-பிரான்ஸ்(உவர்மலை), விநாயகமூர்த்தி சேகரபிள்ளை-பிரான்ஸ் (திருவையாறு), அந்தோனிப்பிள்ளை ஞானகிருஷ்ணன்- ஜேர்மன் (தெல்லிப்பழை கிழக்கு), அப்பாத்துரை செந்தில் விநாயகம்-ஜேர்மனி(புங்குடுதீவு) , ஆறுமுகம் தயாபரன்-ஜேர்மனி (ஸ்கந்தபுரம்), சந்திரவதகுமார்-ஜேர்மனி (கஸ்தூரியார்வீதி), இளைய தம்பி திருஐயா-ஜேர்மனி (ஆனைக்கோட்டை), கனகலிங்கம் செல்வரத்னம்- ஜேர்மனி (வல்வெட்டித்துறை), கனகசபை அன்னலிங்கம்-ஜேர்மனி (கொடிகாமம்), கணபதிப்பிள்ளை ஜெயகுமார்-ஜேர்மனி (சாவகச்சேரி), கந்தையா மனோ[illegible] மனி, கந்தையா பூபால[illegible] ஜேர்மனி (சுன்னாகம் மேற்கு), கதிர்காமதம்பி பிரதாப் ராஜா-ஜேர்மனி (ஆனைக்கோட்டை), மாணிக்கம் செல்வராசா-ஜேர்மனி (சுன்னாகம்), மனோகரன் ராஜேஸ்வரி- ஜேர்மனி (திருநெல்வேலி கிழக்கு), மார்க்கண்டு பாஸ்கரமூர்த்தி-ஜேர்மனி (திருநகர்), பரமானந்தன் கிருபாகரன்-ஜேர்மனி (பாண்டியன் தாழ்வு), பசுபதிப்பிள்ளை உதயமூர்த்தி-ஜேர்மனி (வேலணை), பொன்னுத்துரை சதானந்தவேல்- ஜேர்மனி (வல்வெட்டித்துறை), பூபாலசிங்கம் திருபாலசிங்கம்- ஜேர்மனி (புத்தூர்), ராமலிங்கம் நாகலிங்கம்-ஜேர்மனி (இணுவில் கிழக்கு), ராமலிங்கம் தர்மராசா- ஜேர்மனி (மூதூர்), சபாபதி விமலநான்-ஜேர்மனி (உடுப்பிட்டி), செல்லக்கிளி ஆனந்தராஜன்-ஜேர்மனி (மறவன்புலோ), சின்னராஜா கிருபாகரன்-ஜேர்மனி (கோவில் வீதி), சின்னராஜா ரவிசங்கர் - ஜேர்மனி (சுண்டிக்குளம்), சின்னையா மகேஸ்வரன் - ஜேர்மனி (கரவெட்டி), சோமசுந்தரம் பத்மகாந்தன் - ஜேர்மனி ( கோப்பாய் வடக்கு) சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் -ஜேர்மனி (பொலிகண்டி), தாமோதரம்பிள்ளை சிவநாதன் - ஜேர்மனி (திருகோணமலை), வைரவநாதன் நிமலன் - ஜேர்மனி (அராலிவட்டுக்கோட்டை), வரதராஜா அகிலன் -ஜேர்மனி , வைரமுத்து தவராசா - ஜேர்மனி( காரைநகர்), கனகசபை பரணி ரூபசிங்கம் -ஜேர்மனி ( கொடிகாமம்), சதீஸ்வரன் யோகேஸ்வரன்- ஜேர்மனி ( பண்டத்தரிப்பு), சாரதாதேவி மனோகரன் - ஜேர்மனி , பாலச்சந்திரன் பாலசுப்பிரமணியம் - ஜேர்மனி (நல்லூர்), நிர்மலாதேவி வரதராஜா- ஜேர்மனி , சுப்ரமணியம் ஜெயசங்கர் - ஜேர்மனி (உதயநகர்), செல்வராஜா ஜீவராணி- ஜேர்மனி (மயிலணி வடக்கு), சிவஜோதி வரதராஜா - ஜேர்மனி, சின்னத்துரை கமலநாதன்- ஜேர்மனி (வட்டக்கச்சி), செல்லையா லோகநாதன் -ஜேர்மனி (மயிலிட்டி வடக்கு), பொன்னையா பாலகிருஷ்ணன் - ஜேர்மனி ( கோண்டாவில் வடக்கு), சின்னையா நாகேஸ்வரன் -ஜேர்மனி (திருநகர்), வீரபாகு நடராஜா - ஜேர்மனி (சங்கானை), நடராஜா திருச்செல்வம் -ஜேர்மனி( பண்டத்தரிப்பு), இளையதம்பி கிருபாலன் - ஜேர்மனி, நிர்மலன் ரவீந்திரன் - ஜேர்மனி, அப்பாத்துரை அமலன் (இந்தியா), இராசதுரை சசிகரன் - ஜேர்மனி (இந்தியா), சிவஞானசுந்தரம் சிவகரன் - இந்தியா, யோகநாதன் திலீபன் -இந்தியா, சந்தியாபிள்ளை அல்வேணுப்பிள்ளை - இந்தியா, சிவசேகரம் விஜயநீதன்- இந்தியா, குணசீலன் ரமணன் - இந்தியா, குணேந்திரராஜா ஜெயராஜ்- இந்தியா, அம்பிகைதாசன் ஜனார்த்தன் -இந்தியா, சந்திரபோஸ் ஜெயரூபன் -இந்தியா, பொலிகெப் அலெக்சாண்டர் - இந்தியா, நவரத்தினம் சதீஸ்வரன் - இந்தியா, சுப்ரமணியம் சதீஸ்குமார் - இந்தியா, [illegible] -இந்தியா, [illegible] - இந்தியா, ரத்னசிங்கம் நித்தியானந்தன் - இந்தியா, பரமானந்தன் சிவராமகிருஷ்ணன் -இந்தியா, இளங்குமரன் ரஞ்சிதகுமாரி -இந்தியா, செபஸ்தியாம்பிள்ளை ரவிகுமார் - திண்டுக்கல், தம்பித்துரை சிவசிதம்பரநாதன் -இந்தியா, கதிரவேலு சிவஞானசெல்வம் -இந்தியா, தங்கையா தங்கம் -இந்தியா, அமலா ரோகேசியாஸ் சந்திரவதனா - அடம்பாக்கம், அகநிலா அல்லது ஜெமினி- இந்தியா (சேலூர்), அமுதன் -இந்தியா, அந்தரஹென்னதிசே சமிந்த தர்சன்- இந்தியா ( திருகோணமலை), நவாஸ் அல்லது சுரேஷ் -இந்தியா, ராஜேந்திரன் மூர்த்தி- இந்தியா, சுதர்சன் கைலாயநாதன் -இந்தியா (முள்ளியவளை), வேலுப்பிள்ளை ரேவதன் -இந்தியா( பண்டாரிக்குளம்), விக்னேஸ்வரன் பரமேஸ்வரி - இந்தியா (தெஹிவளை), விக்னேஸ்வரன் கந்தப்பு - இந்தியா (கொழும்பு-06), சிமியன் செபஸ்டியன் -இத்தாலி (ஆனைக்கோட்டை), செல்வராசா கவிதாசன் -இத்தாலி (கொடிகாமம்), தவேந்திரன் கமலநாதன் - இத்தாலி (சண்டிலிப்பாய் வடக்கு), சின்னத்துரை சிவராசா -இத்தாலி ( கச்சாய் தெற்கு), நல்லநாதன் ஜயந்தன் - இத்தாலி ( அரியாலை), யோகநாதன் அஜிந்தன் - இத்தாலி (பளை), வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் - இத்தாலி ( பளை), ஜோசப் மரியா நொபர்ட் நந்தகுமார் -இத்தாலி (குடத்தனை), செல்லத்துரை மூர்த்தி - இத்தாலி (சண்டிலிப்பாய்), இம்மானுவேல் ரஞ்சித் காசியஸ் கீகன் - இத்தாலி ( குருநகர்), சுவகைப்பிள்ளை ஜேசுதாசன் -இத்தாலி ( செம்பியன்பற்று), நவரத்தினம் சுகிதரன் - இத்தாலி (மாவிட்டபுரம்), செல்வரத்தினம் ஜெயரத்னம் -இத்தாலி ( வட்டுவாகல்), ஜெகநாதன் - இத்தாலி (காரைநகர்) நடராசா கமலதாசன் -இத்தாலி ( மந்துவில் பூநகரி), பொன்னுத்துரை பிரபாகரன் - இத்தாலி (நாவற்குழி), சிவராஜா ஶ்ரீபவாணி - இத்தாலி ( கொடிகாமம்) விக்னேஸ்வரன் சுதாகர் - இத்தாலி (பாண்டிருப்பு), தியாகராஜா புவேந்திரராஜா - இத்தாலி (வேலணை கிழக்கு), சுப்ரமணியம் சுரேந்திரன் - இத்தாலி ( ஆனைக்கோட்டை), சோமநாதர் சிவரூபன் - இத்தாலி (வட்டக்கச்சி), ராஜதுரை ராஜநாயகம் -இத்தாலி (திருநெல்வேலி), பத்மலிங்கம் கஜேந்திரன் -இத்தாலி (தெல்லிப்பழை), நீதிகுலசிங்கம் பரமேஸ்வரன் -இத்தாலி (உடுத்துறை வடக்கு), டேவிட் கிரிஷ்டி ஆனந்தராஜா -இத்தாலி (இளவாலை), ஜெயலட்சுமி கோவிந்தசாமி - மலேசியா , பூங்குலளி வீரவன் -மலேசியா , சிவலிங்கம் சரவணன் - மலேசியா , பெருமாள் சின்னகுட்டி - மலேசியா , பெரியசாமி மோகன் -மலேசியா, ராமையா திருமௌலவன் - மலேசியா, ஜெயகுமார் வையாபுரி - மலேசியா, நடராஜா லெட்சுமி காந்தன் - மலேசியா- (மட்டக்களப்பு), செல்வமலர் ஐயாதுரை -மலேசியா, செல்லையா ராமசந்திரன் -மலேசியா, நாகமுத்து மகேஸ்வரமூர்த்தி - நெதர்லாந்து ( புலோலி தெற்கு), தணிகாசலம் ஜெயரூபன் - நெதர்லாந்து (அச்சுவேலி), கந்தையா கிருஷ்ணகுமார் -நெதர்லாந்து (புலோலி தெற்கு), வேலாயுதம்பிள்ளை லோகேஸ்வரன் - நெதர்லாந்து(பாண்டியன்குளம்), தம்பி அருள்நேசன் அல்லது நெல்சன் - நெதர்லாந்து, ஆறுமுகம் ஜெயா - நெதர்லாந்து (நவாலி வடக்கு), கணபதிப்பிள்ளை யோகேந்திரன் -நெதர்லாந்து (நெல்லியடி), குண்டுமணி சற்குணராசா - நெதர்லாந்து (கரவெட்டி), நவரட்ணம் கோடீஸ்வரநாதன் -நெதர்லாந்து ( வசாவிளான்), பஞ்சலிங்கம் நடேசலிங்கம் -நெதர்லாந்து (ஆனைக்கோட்டை), செல்லத்துரை மனோ -நெதர்லாந்து (சங்கானை),

சிவராசா சுரேஷ்-நோர்வே (அரியாலை), லியோ எட்வர்ன் கிலாரி- நோர்வே (இராசலிங்கம்வத்தை, யாழ்ப்பாணம்), சிவபாலசிங்கம் சிவதாஸ்-நோர்வே (கொழும்புத்துறை), வீரசிங்கம் நாகேஸ்வரன்- சுன்னாகம், ராமன் சின்னப்பா- நானாட்டான், சோதிநாதன் புனிதவதி- சுவீடன் (துவசிக்குளம்), கனகசபை பாலச்சந்திரன்-சுவீடன் (கொழும்பு), ரவி செல்வதுரை- சுவீடன் (தெல்லிப்பழை), ஆனந்தராஜ் கனகசபை- சுவிட்சர்லாந்து , நடராசா கருணாகரன்-சுவிட்சர்லாந்து, செல்லையா ஜெயபாலன்- சுவிட்சர்லாந்து (ஆனைக்கோட்டை, ), செல்லையா குலசேகரராஜசிங்கம்- சுவிட்சர்லாந்து , பிரான்சிஸ் அல்பேர்ட் இல்மான்-சுவிட்சர்லாந்து , காசிலிங்கம் ராமகிருஷ்ணன்- சுவிட்சர்லாந்து , ரத்னவேல் சசிதரன்- சுவிட்சர்லாந்து , சோமசுந்தரம் ராமலிங்கம்- சுவிட்சர்லாந்து , சுப்ரமணியம் சண்முகதாசன்- சுவிட்சர்லாந்து , விஜயரட்ணம் சிவநேசன்- சுவிட்சர்லாந்து , கிரிஸ்டி லோரன்ஸ் ரெஜினோல்ட் தாய்லாந்து , காசிப்பிள்ளை கணேசமூர்த்தி-தாய்லாந்து , மார்க்கண்டு தயாகரன்- தாய்லாந்து (ஆற்றுவெளி வடக்கு, ), பஞ்சலிங்கம் விஜயகுமார்-தாய்லாந்து , கந்தையா நகுலதாஸ்- ஐக்கிய இராச்சியம் (உடுப்பிட்டி கிழக்கு), சின்னராஜா வசந்தராஜன்- ஐக்கிய இராச்சியம் (கோப்பாய் தெற்கு), கனகரத்னம் கனகேஸ்வரம்- ஐக்கிய இராச்சியம் (புங்குடுதீவு), கிரிசோரம் லின்டன் ஜுட் -ஐக்கிய இராச்சியம் (கரம்பன் தெற்கு), பூபாலசுந்தரம்பிள்ளை குசிகன்-ஐக்கிய இராச்சியம் (வேலணை மேற்கு), கிருஷாந்தகுமார் அருணாசலம்-ஐக்கிய இராச்சியம் , கிருஸ்ணசாமி மனோகரன்-ஐக்கிய இராச்சியம் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), தம்பாபிள்ளை பரமாத்மா-ஐக்கிய இராச்சியம் (நுணாவில் கிழக்கு), பாலசிங்கம் விஜயகுமார்-ஐக்கிய இராச்சியம் (மல்லாகம், யாழ்ப்பாணம்),

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம்
கால் பட்டால் குற்றம்

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்கள் தாயகத்தின் உறவுகளை வேரறுக்காதீர்

புலம்பெயர் ஈழத்தமிழர்கள் 424 பேர் இலங்கைக்கு வரமுடியாது என அரசு அறிவித்துள்ளது.

அரச வர்த்தமானியில் பெயர் குறிப்பிட்டு, வெளியிடப்பட்ட 424 புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வருவது தடைசெய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தல் தெரிவிக்கின்றது.

ஜெனிவாத் தீர்மானத்தை அடுத்து இலங்கை அரசு எடுத்த அதிரடி நடவடிக்கை இதுவாக இருப்பினும் குறித்த 424 பேரின் பெயர்களும் அவர்கள் பற்றிய தகவல்களும் இப்போது எடுக்கப்பட்டவையல்ல. இந்தப் பெயர்கள் ஏற்கெனவே பட்டியல்படுத்தப்பட்டவை என்பதில் மறுப்புக்கு இடமில்லை.

அதேசமயம் இலங்கை வருவதற்குத் தடை விதிக்கப்பட்ட 424 பேரின் பெயர் விபரங்கள், அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் தகவல்களை எடுப்பதென்பதும் கடினமான விடயம்.

ஆக, 424 பேருடன் தொடர்பு வைத்திருந்த தற்போது அரசாங்கத்துடன் இணைந்துள்ளவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே மேற்போந்தவர்கள் இலங்கை வருவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளனர் என்ற ஊகிப்புகள் அவ்வளவுக்குப் பிழை போகக் கூடியதல்ல.

அதிலும்; அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படுங்கள் என்ற கோரிக்கைகளுக்கும் கடும் பிரயத்தனங்களுக்கும் இசைய மறுத்தவர்களாகவே இந்த 424 பேரும் இருப்பர் என்பதும் மெய்யே.

ஆக, ஒட்டுமொத்தத்தில் ஈழத்தமிழர்சார் விடயங்களை சர்வதேசத்தின் மத்தியில், எடுத்துக் கூறுகின்றவர்கள், ஜெனிவாத் தீர்மானத்தின் வெற்றிக்குப் பின்னால் செயற்பட்டவர்கள் என்ற அடிப்படையில் 424 பேரின் பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அறிவிப்புக்கள் நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புக் கருதியவை என்ற அடிப்படையில் அவை பற்றிநாம் பேசாமல் விட்டுவிடலாம்.

ஆனால் நமக்கு இருக்கக் கூடிய ஐயம் வேறு. அதாவது ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றியாகிறோம் என்று ஜெனிவா சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன் எம்.பி மீது இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

ஜெனிவாத் தீர்மானத்தில் இந்தியா காலைவாரி விட்டது என்று கூறிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவித்தார் என்ற அடிப்படையில் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காதது எதற்காக! ஓ! எல்லாம் நடிப்பும் நாடகமும் என்றால் நாடும் நாமும் உருப்படுவது எங்ஙனம்?

424 பேர் குற்றவாளிகள் என்றால், அமெரிக்காவும் அதனோடு இணைந்து ஜெனிவாத் தீர்மானத்துக்கு ஆதரவளித்த நாடுகளும் உங்களுக்குப் பகையல்லவா?

அப்படியானால் அந்த நாடுகள் இலங்கைக்குள் வரமுடியாது என்ற அறிவித்தலும் வெளிவர வேண்டுமே. ஏன் வெளிவரவில்லை. சண்டித்தனக்காரருக்கு, வேடதாரிகளுக்கு, அப்பாவிப் பொதுமக்களுக்கு என வேறுபட்ட தீர்ப்புக்கள் நாட்டை வேரறுக்கும். ஆகையால் எங்கள் தாயகத்தின் உறவுகளை வேரறுக்காதீர்கள். அது அவ்வளவு நல்லதல்ல.

# கைவிரல் அடையாளங்களை பதிய பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை

## தலைமை நீதிபதி தெரிவிப்பு

பொதுமக்களைக் கைது செய்து அவர்களது கைவிரல் அடையாளங்களை பலவந்தமாகப் பதிவதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் கிடையாது என்று தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த ஒரு நபர் தாக்கல் செய்த மனு ஒன்றை விசாரிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உல்லாச விடுதி ஒன்றில் பணிபுரியும் இந்த நபர், தனது பணி முடிந்து, வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில், அவரைக் கைது செய்த பொலிஸார், அவரை பொலிஸ் நிலையம் கொண்டு சென்று அவரது விரல் அடையாளங்களை பதிவு செய்ததாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறிய நீதிபதி, பொலிஸார் அதற்கு இடையூறாக இருக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

அதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமன்றி, அந்த நபரிடம் பலவந்தமாகப் பெற்ற கைவிரல் அடையாளங்களை பொலிஸார் அழித்துவிட வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார். (செ-11)

# கூட்டமைப்பினரை அழைக்காதது ஏன்?

## விளக்கம் கோரி சிறிதரன் கடிதம்

கிளிநொச்சி,கரைச்சி பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைக்காதது ஏன் என விளக்கம் கோரி பிரதேச செயலாளருக்கு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர சிவஞானம் சிறிதரனால் அனுப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தில் கடந்த 2014.04.03 ஆம் திகதி காலை தங்கள் பிரதேச செயலக மண்டபத்தில் கரைச்சிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நடைபெற்றதாக பத்திரிகைச் செய்திகளில் பார்க்க முடிந்தது.கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ, மாகாணசபை உறுப்பினர்களுக்கோ, இக்கூட்டம் பற்றி அறிவிக்கப்படவில்லை.

மாவட்ட ஒருங்கிணைப்பு, அபிவிருத்தி தொடர்பாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்களுக்கு உள்ள உரித்தை தாங்கள் தன்னிச்சையாக நிராகரித்துள்ளதை இச்செயற்பாடு உணர்த்துகிறது.

ஒரு கட்சி சார்ந்தவர்களின் நலனுக்காக இப்படி ஒரு கூட்டத்தை நடத்தியிருப்பது நாட்டின் ஜனநாயகத்தையும் மக்களின் அபிவிருத்தி தொடர்பான அரசியல் உரிமையையும் ஒரு அதிகாரி என்றவகையில்தாங்கள்உதாசீனம்செய்துள்ளதை அவதானிக்க முடிகிறது.


மக்கள் நலனுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் நீங்கள் அரச வளங்களை அரசியல் கட்சிகளுக்காகப் பயன்படுத்துவது இலங்கையில் சட்டத்தின் ஆட்சியையும், நீதியையும், கேள்விக்குட்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அழைக்கப்படாமைக்கான காரணத்தையும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு பதிலாக அபிவிருத்தி குழுக்கூட்டம் என்பது எப்பொழுது தங்களால உருவாக்கப்பட்டது என்பதையும் எனக்கு அறியத்தருமாறு வேண்டுகிறேன்என அந்தக்கடித்தத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக்கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (செ-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஆசான் கூசான் பேசான்



விற்றூணொன் றறியாதான் ஆசான் – என்றும்
விசரனைப் போற்றிரிவான் கூசான்
கற்றோரும் அறியாத சீரான்– அவனைக்
கைதொழுது நின்றாரும் பாரான்
இன்னானிவ னென்றெவரு மறியார்– இவனை
ஏற்றித் தொழுதவரைக் குறியான்
பன்னாட் பழக்கத்தினாற் சில பேர்– இவனைப்
பாரிற் குருவாகக் கொண்டார்

# கடவுளின் வழியிலிருந்து தடம் மாறாதிருப்போம்

தவக்காலத்தின் 5ஆவது ஞாயிறு ஆகிய இன்று எமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில் “இயேசு இலாசர் என்னும் ஒரு மனிதரை உயிர்ப்பிக்கும் நிகழ்வை பார்க்கின்றோம்.”இலாசரை உயிர்ப்பிக்கும் நிகழ்வானது இயேசு ஆற்றிய புதுமைகளிலேயே மிகப் புகழ் வாய்ந்த புதுமையாகக் கருதப்படுகிறது.

இலாசர் நோயுற்றிருக்கிறார் என்பது இயேசுவுக்கு நன்கு தெரியும். ஆனால் இலாசர் இறந்து நான்கு நாட்கள் கழித்து தாமதமாகவே அங்கு செல்கிறார்.

தாமதமாக வந்த இயேசுவைக் கண்ட இலாசின்சகோதரிகளான மார்த்தாவும் மரியாவும் ஓரளவு ஆறுதல் அடைந்த போதிலும், தங்கள் ஆதங்கத்தையும், ஏக்கத்தையும் ஒரே கருத்தாக இயேசுவிடம் தனித்தனியே சொல்கின்றனர்: ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன இறந்திருக்க


## பரமபிதா காட்டிய பாதை

மாட்டான்.

வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகளில் இறைவன் தாமதிப்பதாக நாம் எத்தனை முறை உணர்ந்திருக்கி றோம். எதிர்பார்க்கும் நேரத்தில், எதிர்பார்க்கும் விதத்தில், எதிர்பார்க்கும் இடத்தில் கடவுள் வருவதில்லை. இது பல சமயங்களில் நமக்கு கலக்கத்தை ஏற்படுத்தினாலும், எதிர்பாராத நேரத்தில், இடத்தில், விதத்தில், உருவத்தில் வருவது தான் கடவுளின் அழகு. தாமதமாய் வந்த இயேசுவிடம் தன் ஆதங்கத்தைக கூறிய மார்த்தா, உடனே, இயேசுவின் மீது தான் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் எடுத்துரைத் ததை நாம் பார்க்கின்றோம். மார்த்தா இயேசுவை நோக்கி, ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான். இப்போது கூட நீர் கடவுளிடம் கேட்பதை எல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்குக தெரியும் என்றார். இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தல் என்பது இயேசுவுக்குப் புதிதல்ல. ஏற்கனவே தொழுகைக் கூடத்தலைவரின் மகளுக்கும், நயீன் நகர் கைம்பெண்ணின் மகனுக்கும் உயிர் கொடுத்திருக்கிறார்.

ஆனால், புதுமை நிகழ்வதற்கு நாமும் தம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என இறைவன் விரும்புகிறார். மார்த்தா ஏற்கனவே கூறிய “இப்போதுகூட நீர் கடவுளிடம் கேட்பதை எல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்குத தெரியும்” என்ற அந்த நம்பிக்கை வரி களில இந்த ஒத்துழைப்பு ஆரம்பமானது.

நம் வீடுகளில் நடக்கும் ஒரு அழகான நிகழ்ச்சியை உங்களுக்கு இங்கு நினைவுறுத்த விரும்புகிறேன். நாலு காலில் தவழும் குழந்தைகள் முதல் முறையாகத் தட்டுத் தடுமாறி எழுந்து நடக்கும் அனுபவம் நம் குடும்பங்களில் மகிழ்வான ஒரு நிகழ்வு. இந்த மகிழ்வின் ஒரு பகுதி குழந்தை கீழே விழுந்து அழுவதும். கீழே விழும் குழந்தையைத தூக்கி விட்டு, மீண்டும் அக் குழந்தையை நடகக்ச் சொலலி பெறறோர் தூண்டுவார்கள். அதற்கு பதில், குழந்தை விழுந்துவிட்டதென பரிதாபப்பட்டு, தாயோ, தந்தையோ, குழந்தையைத் தூக்கிச் சுமந்தால், குழந்தை நடை பழகவே பழகாது. அதுபோலத்தான் கடவுளும். நம்மால் இயன்றதை நாம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்.



மார்த்தாளுக்கு இயேசு என்ன பதில் கொடுத்தார் என்றால். நீ நம்பினால கடவுளின் மகிமையைக் காண்பாய். நம் வாழ்க்கையிலும் நாம் சில சமயம் கடவுளை முழுவதுமாக நம்பத தயக்கம் காட்டலாம். நமக்குப் புரியாத புதிராக சில காரியங்கள் இருந்தாலும். கடவுளை நாம் முழுமையாக நம்பப் பழகிக் கொள்ளவேண்டும் .

கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை . கடுகு விதை அளவு விசுவாசம் இருந்தால் மலையையும் பெயர்க்கலாம் என இயேசு கூறுகிறார். எனவே மார்த்தாள் நடக்கவிருப்பதை நம்பிக்கையோடு மௌனமாக கவனிக்கத் தொடங்கினாள்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இலாசர் கல்லறையிலிருந்து உயிரோடு வெளியே வந்தார். இந் நிகழச்சியிலிருந்து இயேசு நம் பொருட்டும் அருள் மழையைப் பொழிவார் என்பதை நாம் உணரவேண்டும். நம்மைக் கட்டி அடிமைப்படுத்தும் துன்பங்களிலிருந்தும் வெளியே நம்மை வரச்சொல்லி அவர் ஆணையிடுகிறார. நாமும் புதிய வாழ்வினைத் தொடங்குவோம். கடவுளைப்பற்றிக்கொள்வோம். நம்பியபிறகு அவர்வழியில் தடம் மாறாதிருப்போம். இலாசரைப்போல நாமும் புத்துயிர் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது - 20 உலகக்கிண்ணம்; இறுதியாட்டம் இன்று

டாக்கா (6.30பி.ப)




## பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு விழா

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட பிரதம கணக்காளர் ச.குகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

இடைவேளை நிகழ்வுகளில் ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டு கழகம் மோதவுள்ளது.

ஆண்களுக்கான கபடி இறுதிப் போட்டியில் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

### கோப்பாய் பிரதேச இளைஞர் கழக

# உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி; ஆவரங்கால், புத்தூர் அணிகள் வெற்றி







கோப்பாய் பிரதேச இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்கழக அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப்போட்டியின் ஒரு அங்கமாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் இடம்பெற்றன.

புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகளின முதலாவது அரையிறுதிப்போட்டியில், ஆவரங்கால கிழக்கு இளைஞர் கழக அணியை எதிர்த்து புத்தூர் மேற்கு கலைமதி இளைஞர் கழக அணி போட்டியிட்டது. இப்போட்டியில் ஆவரங்கால் கிழக்கு இளைஞர் கழக அணி 3:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதுஅரையிறுதிப்போட்டியில், புத்தூர் கிழக்கு இளைஞர் கழக அணியை எதிர்த்து ஊரெளு றோயல் இளைஞர் கழக அணி போட்டியிட்டது. அந்தப்போட்டியில் புத்தூர் கிழக்கு இளைஞர் கழக அணி 3:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இடம்பெற்ற இறுதிப்போட்டியில் புத்தூர் கிழக்கு இளைஞர் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் கிழக்கு இளைஞர் கழக அணி போட்டியிடவுள்ளது. (க-23)

## கோப்பாய் பிரதேச இ.கழக விளையாட்டு விழா

கோப்பாயு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் எம்.ரகுபதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஆர்.ஐங்கரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் ஆர்.ராஜமகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

## சாவகச்சேரி பிரதேச இ.கழக விளையாட்டுப் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளிற்கிடையிலான போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கரப்பந்து (ஆண்கள்)**

1ஆம் இடம் மட்டுவில் ஐங்கரன் இளைஞர் கழகம் 2ஆம் இடம் மீசாலை சீமா இளைஞர் கழகம்

**கிரிக்கெட் (ஆண்கள்)**

1ஆம் இடம் மட்டுவில் வளர்மதி இளைஞர் கழகம் 2ஆம் இடம் சாவகச்சேரி சிவன் இளைஞர் கழகம்

**உதைபந்தாட்டம் (ஆண்கள்)**

1ஆம் இடம் நாவற்குழி அண்ணா இளைஞர் கழகம் 2ஆம் இடம் கோவிலாக்கண்டி மகா விஷ்ணு இளைஞர் கழகம்

**வலைப்பந்து (பெண்கள்)**

1ஆம் இடம் கொடிகாமம் திருநாவுக்கரசு இளைஞர் கழகம் 2ஆம் இடம் சாவகச்சேரி டிபேர்க் இளைஞர் கழகம்

**கபடி (ஆண்கள்)**

1ஆம் இடம் சாவகச்சேரி டிபேர்க் இளைஞர் கழகம் 2ஆம் இடம் மட்டுவில் மோகனதாஸ் இளைஞர் கழகம்

**கயிறிழுத்தல் (ஆண்கள்)**

1ஆம் இடம் கைதடி சரஸ்வதி இளைஞர் கழகம் 2ஆம் இடம் மட்டுவில் வளர்மதி சிவன் இளைஞர் கழகம். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்கிக் கட்டியது மத்திய கல்லூரி

# பழிதீர்த்து சென்.ஜோன்ஸ் அபார வெற்றி

கடந்த மாதம் வடக்கின் மாபெரும் போரின்போது சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்கும் இடையில் ஏற்பட்ட சர்ச்சை நீங்கி இரு கல்லூரி ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்புடன் நடைபெற்ற 12–வது ஒருநாள் போட்டியில் மத்திய கல்லூரியை அடக்கி சென்.ஜோன்ஸ் கல்லூரி அபார வெற்றி பெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 139 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி அணியை மண்கௌவ வைத்தது.







நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 8 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அணித்தலைவர் துவாரக சீலன் 55 ஓட்டங்களையும் ஜதுஷன் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மத்திய கல்லூரி சார்பாக மதுசன் 34 ஓட்டங்களைக் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் பெற்று படுதோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் மத்திய கல்லூரி அணி சார்பாக அலன்ராஜ் 45 ஓட்டங்களையும் சஞ்சயன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக லோகதீஸ்வர் 21 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், யதுர்சன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் யதுர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த மாதம் இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் நடைபெற்ற 108 ஆவது பாரம்பரியம்மிக்க வடக்கின் மாபெரும் போட்டியின்போது சென்.ஜோன்ஸ் அணித்தலைவர் துவாரக சீலனின் ஆட்டமிழப்பு தொடர்பாக எழுந்த சர்ச்சையால் போட்டி கைவிடப்பட்டு தொடர்ச்சியாக நடைபெற்ற சமரச பேச்சுக்களின் அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்புடன் தொடர்புடைய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் துவாரகசீலன் நேற் றைய போட்டியின் போது ஆக்ரோசமாக விளையாடி 55 ஓட்டங்களை அணிக் காக பெற்றுக்கொடுத்திருந்தார்.

களத்தடுப்பில் மத்திய கல்லூரி வீரர்கள் தொடர்ச்சியாக மோசமாக செயல்பட்டனர். நேற்றைய போட்டி பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடை பெறவிருந்ததால் ரசிகர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என எதிர் பார்க்க ப்பட்டபோதும் வழமையாக கூடும் அள வில் கூட ரசிகர்கள் போட்டியை காண வரவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.(கு-23)

## சர்வதேச...

நடவடிக்கை எடுக்கப்படும். குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியன மிகவும் முக்கியமானவை.

எனவே மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கடந்த கால தவறுகளுக்கு தண்டனை விதித்தல் அவசியமாகின்றது என கமரூன் தெரிவித்தார். மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை தொடர்பிலான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாக பல நாடுகளுடன் இலங்கை நிலைமைகள் குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவித்துள்ளார். (செ-11)

## புதிய...

இடம்பெற்றது.

இலங்கைக்கான நமீபியா உயர்ஸ்தானிகர் பியஸ் துனஸ்கி, கினி நாட்டின் தூதுவர் அலக்ஸ்சாண்டர் சேசஸ் லுவா, ஸ்வோவேக் தூதுவர் கிக்மண்ட் பெர்டேக், வத்திகான் தூதுவர் வணக்கத்திற்குரிய அப்போஸ்தலர் மென்சிக்நோர் பிரேரா ஹென்குயேன் டெட் ஆகியோர் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர். (செ-11)

## ஆண்...

வவுனியா பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. அவரது சடலத்திற்கருகில் தரம் 10 ஆண்டு புத்தகங்கள் சிலவும் காணப்பட்டது.

இறந்தவர்நேற்று இரவுவரை அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிசார். மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## மலேசிய...

மலேசிய விமானம் காணாமல் போனதைத் தொடர்ந்து மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தேடுதல் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அனல்...

கேடுகள் மற்றும் மின் சார சபையின் தன்னிச்சையான நிர்வாக முடிவுகள் நுரைச்சோலை, அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்கு காரணம் என்பதால், அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (செ-11)

## தடை...

டும் என அறிவித்துள்ளன.

அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதாக புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரசாங்கம் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் தமது அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புக்களாக அடையாளப்படுத்தியுள்ளது.

எனவே இவ் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கையை சர்வதேச சமூகம் நிராகரிக்க வேண்டுமென நாடு கடந்த தமிழீழ இராச்சியம் கோரியுள்ளது.

இதேவேளை, இலங்கையின் அனைவரினதும் மனித உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கனேடிய தமிழர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மேலும் இத் தடையை திட்டவட்டமாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளது. (செ-11)

## தாச்சிப் போட்டி

உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் நடத்தி வந்த மாவட்ட மட்ட தாச்சிப் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (கு-23)

## இலங்கை...

முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட இலங்கையின் உள்நாட்டுப் போர் தொடர்பில் ஐ.நா சபையினால் மேற்கொள்ளப்படும் குற்றவியல் விசாரணையானது எவ்வளவு தூரம் வினைத்திறன் மிக்கதாக இருக்கும் என்பது தொடர்பாக கடந்த வாரம் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் விவாதித்தன.

போரின் இறுதி மாதங்களில் மட்டும் 40,000 தொடக்கம் 70, 000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும் இலங்கை அரசாங்கத்தின் குண்டுத் தாக்குதல்களிலேயே பெருமளவானவர்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும் ஐ.நா அறிவித்தது.

பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் எவ்வித பொறுப்பையும் அளிக்காது நான்கு ஆண்டுகளை இழுத்தடித்துள்ளது. இந்த அரசாங்கம் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை வழங்க முன்வரவில்லை.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை அவுஸ்திரேலியா எதிர்த்துள்ளது. இத்தீர்மானத்தைத் தனது நாடு எதிர்ப்பதாகவும், தமிழ்ப் புலிகள் பயங்கரவாதிகள் என்பதையும் சான்றுபடுத்தி அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் யூலி பிசப் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் நாட்டில் மீளிணக்கப் பாட்டை உருவாக்க முடியும் எனவும் இதன் மூலம் தமிழர் வாழும் பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியும் எனவும் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இதுவே இலங்கையில் மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த வழியாகும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் எனது நூலில் நான் திட்டமிட்ட ரீதியில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விவரித்துள்ளேன்.

இதற்கான காணொலிப் பதிவுகளை 'போர் தவிர்ப்பு வலயம்: இலங்கையின் கொலைக் களங்கள்' என்கின்ற காணொலியில் காண முடியும்.

எமது சார்பாக இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்படும் நீதியற்ற நடவடிக்கையை எமது வெளியுறவு அமைச்சரால் மட்டுமே விளங்கப்படுத்த முடியும்.

அவுஸ்திரேலியர்கள் இந்தக் காணொலியை பார்ப்பதன் மூலம் இதிலுள்ள சாட்சியங்களைக் கொண்டு நல்லதொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


## கண்ணீர் அஞ்சலி



செல்வி **ராதா அருளானந்தம்**

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர் தாதிய பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பளாணம்)

யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி சு.அருளானந்தம் அவர்களின் பாசமிகு சகோதரி செல்வி ராதா அருளானந்தம் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் தாதிய பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணம்) அவர்கள் 05.04.2014 அன்று இயற்கை எய்துவிட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-6952)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 07.04.2014 | 12.04.2014 | 15.04.2014 | 19.04.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(C-6893)
Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



## காணி விற்பனைக்குண்டு

முதலியார் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரணவாய் என்னும் முகவரியில் உள்ள 21/4 பரப்பு காணி ஒன்று விற்பனைக்கு உள்ளது.

பிரதான ஒழுங்கையில் இருந்து இக் காணிக்கு 10 அடி அகலமான பிரத்தியேக பாதை யும் உள்ளது.

தொடர்புகளுக்கு :
0774150764, 0776559597
(6028)



2 மணித்தியாலத்தில்
## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service 2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair



## GERMAN SWISS LANGUAGE CENTER

ஜேர்மன், சுவிஸ் (Deutsch) மொழி வகுப்புக்கள் ஜேர்மன் தூதரகத்தால் கோரப்படும் A1 Certificate க்கு ஏற்ற வகையில் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் நெல்லியடி, சாவகச்சேரி பகுதிகளில் இலகுவான முறையில் கற்பிக்கப் படுகின்றன.

மேலதிக தொடர்பிற்கு
0776454998
(6070)



## உடனடி வேலைவாய்ப்பு

புதுவருடத்தை முன்னிட்டு எமது Innovage நிறுவனம் புதிய 3 கிளைகளை ஆரம்பிக்க உள்ளது. (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள 10, O/L. A/L கற்ற அனைவருக்கும் தகைமைகளின் அடிப்படையில் வேலை வழங்கப்படும். முதலில் 4-6 மாத கால இலவச பயிற்சி வழங்கப்படும்.

- தங்குமிட வசதி உண்டு
- பயிற்சிக் காலத்தில் 10,000/- 15,000 மேல்
- பயிற்சியின் பின் 30,000 மேல்
- EPF. ETF உண்டு
- வயது 18-40 க்கு உட்பட்டோர்
- முன்னனுபவம் அவசியமற்றது



தொடர்புகளுக்கு:-077 8920777, 0770056677
www.innovage.net



## STUDY IN UK, LATVIA
EUROPE

City & Guilds Approved Centre

- G.C.E O/L சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- 5 வருடகால அனுபவம் மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.

தமிழ்-சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 07.04.2014 தொட 11.04.2014 வரை வெளிநாட்டு கல்வி மற்றும் கல்விசார நேர்த்தியான வீசா சட்டஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்...

WEC நிறுவனத்தினர் தற்பொழுது யாழ்நகரிலும் தமது IELTS, City&Guilds (A1,B1), German Deutsch, French வகுப்புக்களினை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 7 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 40 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

(C-6892)

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447

Branch:
No.04, Kesavil Road,
Kokkuvil,
Jaffna.



SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(C-6888)

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net



# Jet D Express
## Courier Service




| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

(C-6891)

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

குறிப்பு : கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வீடுகளில் வந்து பெற்றுக் கொள்ளப்படும்.

இல. 27, முதலாம் மாடி,
நவீன சந்தை (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place,
Wellawatta, Colombo - 06.
T.P : 0112363873, 0776509909.



# சித்திரை புத்தாண்டு காலத்தில் சிங்கர் தரும் விசேட சலுகைகள்




* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

10,000/= பெறுமதியான Vacum Cleaner ஒன்று இலவசம்

* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்
(நிபந்தனைக்குட்பட்டது)

சிங்கர் GEO குளிர்சாதன பெட்டிகளுக்கு
விசேட விலைக்கழிவு
~~41,000/=~~ 37,925/=




50% வரை மின் சேமிப்பு

10 வருட உத்தரவாதம்




ஃபில்டர் ஒன்று இலவசம்




விசேட இலகு தவணை கொடுப்பனவு மற்றும் ஃபில்டர் ஒன்று இலவசம்

(C-6887)

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி

| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776433888 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singersl.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.